தி. தயானந்தன் பிரான்சிஸ்

தமிழ்ச் சைவம்

தமிழ்ச் சைவம்

தமிழ்ச் சைவம்

தி. தயானந்தன் பிரான்சிஸ்

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

THE CHRISTIAN LITERATURE SOCIETY
POST BOX 501, PARK TOWN, MADRAS 600 003

TAMIL SAIVAM
By T. DAYANANDAN FRANCIS

©
First printed (TTBC) 1972
Second Edition 1988

விலை ரூ. 17·00

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—600 007. B 39

என் அருமைத் தந்தையார்

அருள்திரு ஈ. டிக்கிகஸ் அவர்கட்கு

(1903 — 1970)

இச்சிறு நூலினை

அன்புக் காணிக்கை ஆக்குகின்றேன்

(எபிரேயர் 13:7)

இரண்டாம் பதிப்பிற்கு முன்னுரை

இரண்டாம் பதிப்பினைக் கொணரும் கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தாருக்கு என் நன்றியைத் தெரிவிக்கிறேன். என் வேண்டுகோளுக்கிணங்கி அணிந்துரை வழங்கிய சென்னை பல்கலைக் கழகத் தமிழ் மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு நான் பெரிதும் கடமைப் பட்டுள்ளேன். கடந்த 35 ஆண்டு காலமாக என்னுடைய அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய நண்பராகத் திகழும் பேராசிரியர் அவர்களுக்கு என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை
17–11–1988

அன்பன்
தி. தயானந்தன் பிரான்சிஸ்

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்
எம். ஏ., எம்.லிட்,, பிஎச். டி.
பேராசிரியர் தலைவர்
தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை 600 005

அணிந்துரை

'சைவ சமயம் என்ற தலைப்பில் என் அருமை நண்பர் டாக்டர் தயானந்தன் பிரான்சிஸ் அவர்கள் ஓர் அருமையான நூலை எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தின் செயலராகத் திகழும் இவர்கள் நடுவுநிலை பிறழாத நன்னெஞ்சுடன் இந் நூலினை இயற்றியிருக்கிறார்கள். இந்த நூலைப் படிக்கும்பொழுது சைவ சமயத்தின் பெருமை நன்கு விளங்குவதோடு, இந்நூலை எழுத நண்பர் டாக்டர் தயானந்தன் பிரான்சிஸ் அவர்கள் எந்த அளவிற்கு அறிவாற்றலோடு உழைத் திருக்கவேண்டும் என்னும் செய்தியும் புலனாகக் காணலாம். அறிவு நுட்பம், உழைப்பு, மேன்மை, கருத்துப் பொலிவு, தெளிந்த உரைநடை, தக்க மேற்கோள்கள் ஆகியவை இந்நூலின் தனிப்பெருஞ் சிறப்புகளாகும்.

'சைவத்தின் சிறப்பியல்புகள்' என்னும் தொடக்கக் கட்டுரை யில் சைவ சமயத்தின் தொன்மைச் சிறப்பு பல்வேறு சான்று களுடன் நிறுவப்படுகின்றது. சைவ சமயம் அன்புநெறி, பொதுமைக் கொள்கை, அழகோம்பும் பண்பு, உலகப் பெருண்மைத் தெளிவு, சித்தமார்க்கம் முதலியனவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது என்பதனை நூலாசிரியர் தெள்ளத் தெளிவாக விளக்குகின்றார்.

'சைவ இறையியல்' என்னும் இரண்டாவது கட்டுரையில், 'வேதங்களாலும் தேவர்களாலும், மனத்தினாலும் வாக்கினா லும், அனுமானத்தினாலும் அரிதற்கு அரிதாக நிற்கின்றவன் இறைவன்' என்பதனை நூலாசிரியர் நுண்ணிதின் உணர்த்து கின்றார்.

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

என்னும் மணிவாசகரின் மாணிக்கத் தொடரினை எடுத்துக் கொண்டு, 'ஒருவனே இறைவன்' என்ற தத்துவத்தினைப் பொருட் பொருத்தமுற விளக்குகின்றார் நூலாசிரியர். சிவ

பெருமானை நூல்கள் வழி, அனைத்துங் கடந்தவனாகவும், அறிதற்கரியோனாகவும், எங்கும் நிறைந்தோனாகவும், ஒளியாய்த் திகழ்வோனாகவும், அன்பே சிவமாய் அமர்ந்திருப்பவனாகவும், அருவாயும், உருவாயும், அருவுருவாயும் திகழ்பவனாகவும் விளங்குவதை எண்ணற்ற எடுத்துக்காட்டுகள் தந்து விளக்கு கின்றார்.

'மனிதப் பிறவியும் வேண்டுவதே' என்னும் அப்பர் பெருமான் அருள்வாக்கினை விளக்கப்புகும் ஆசிரியர், மேற்கோள் காட்டுகின்ற சைவ சமய நூற்களின் பல்வேறு பகுதிகள் படித்துப் படித்து இன்புறவும் பயனுறவும் தக்கனவாகும். இதுபோன்றே 'ஐந்தெழுத்தே அனைத்தும்' என்ற தலைப்பில் ஆசிரியர் எடுத்துக் காட்டியிருக்கும் திருமறைப் பகுதிகள் நூலாசிரியர்தம் நுண்மாண் நுழைப்புலத்தினை நுவலா நிற்கும்.

'சைவ மெய்யறிவியல்' என்னும் கட்டுரை நூலின் உயிர்ப் பகுதியாகும். இறை, உயிர், தளை என்னும் முப்பொருள் உண்மையினை மிக எளிதாக விளக்க முற்படுகின்றார் ஆசிரியர்.

நான்காவது கட்டுரை 'சைவ வாழ்வியல்' என்பதாகும். சைவம் வழிபாட்டினை இரு வகையாகக் காண்கின்றது எனக் குறிப்பிட்டு, அவை ஆலய வழிபாடு, நினைப்பு வழிபாடு என்று விளக்கி, ஆலய வழிபாட்டின் பல்வேறு நிலைகளைப் பொருத்தமுற விளக்கியுள்ளார். உள்ளத்தையே கோயிலாகக் கொண்டு இறைவனை வழிபடுதலே நினைப்பு வழிபாடு என்று விளக்கம் தந்து, அதனை ஆடியின் நிழல்போல நன்கு விளக்கிக் காட்டி யுள்ளார். சமய ஒழுக்கம் போற்றப்பட வேண்டியதன் இன்றி யமையாமையினை வலியுறுத்தி அதன் ஒரு பகுதியாகத் திரு நீறணிதல் கண்டிகை தரித்தல் முதலியனவற்றை விளக்கியுள்ளார்.

'சைவ—கிறிஸ்தவ உரையாடல்' என்னும் இறுதிக் கட்டுரை ஆசிரியர்தம் ஒப்பீட்டுத்திறனை விளக்கி நிற்கிறது.

இந் நூலின் ஆசிரியர் நண்பர் டாக்டர் தயானந்தன் பிரான்சிஸ். அவர் சென்னைப் பச்சையப்பர் கல்லூரியில் தமிழ் முதுகலை பயின்றவர்; சிறக்கக் கற்றவர்; டாக்டர் மு. வ. அவர்களின் மாணவர். படிக்கும் நாளிலேயே எழுத்தாளராகத் திகழ்ந்தவர். செய்வன திருந்தச் செய்யும் திறலினர். கிறித்தவ இறையியற் கல்வி கற்றவர். போற்றத்தக்க பண்புகள் வாய்ந்தவர். ஓயா உழைப்பும் அயராத் தொண்டும் நிறைந்த டாக்டர்

தயானந்தன் பிரான்சிஸ் அவர்கள் சைவ உலகிற்குக் கொடுத்த நன்கொடை இந்நூல் என நான் நவில்வேன்.

சைவ சமயம் குறித்துச் சொற்பொழிவாற்ற வேண்டும் என்று நினைப்போர் இந்த நூலினை ஒருமுறை படித்துவிட்டு அஞ்சாமையோடு மேடையேறலாம்; சைவ சமயம் குறித்து எத்தகையதொரு கட்டுரை எழுதவேண்டும் என்றாலும் இந்த நூலினைத் துணைகொண்டு முயன்றால் கட்டுரை தரமுடைய தாகச் சிறப்பாக அமையும் என்று உறுதி கூறலாம்.

சைவ சமயம் குறித்து எண்ணற்ற நூல்கள் இதுகாறும் வெளி வந்திருக்கலாம். ஆயினும் இந்நூல் அவற்றிடையே தனிச் சிறப்புடன் திகழும் என்பதில் ஐயமில்லை. பிறப்பால் வளர்ப்பால் வாழ்வால் ஒரு தூய கிறித்தவராகவே வாழும் டாக்டர் தயானந்தன் பிரான்சிஸ் அவர்கள் இந்நூல் எழுதியதன் வாயிலாகச் சைவ சமய உலகிற்கே நற்றொண்டு ஆற்றியவர் ஆகிறார். அவருடைய சமரச உள்ளம்—திரு.வி.க. உள்ளம்—வாழ்வதாக என வாழ்த்துவல். தமிழுலகம் நூலாசிரியர் முயற்சிக்கு ஆக்கம் தருவதாகுக.

'தமிழகம்'
சென்னை 600 029
நாள்: 8-11-1988

சி. பாலசுப்பிரமணியன்

பொருளடக்கம்

அறிமுகம்

1. சைவத்தின் சிறப்பியல்புகள்

(அ) தொன்மைச் சிறப்பு .. 1
(ஆ) அன்புநெறி .. 2
(இ) பொதுமைக் கொள்கை .. 4
(ஈ) அழகோம்பும் பண்பு .. 6
(உ) உலகப் பொருண்மைத் தெளிவு .. 7
(ஊ) சித்த மார்க்கம் .. 8

2. சைவ இறையியல்

(அ) அருளா அறிவா? .. 11
(ஆ) ஒருவனே இறைவன் .. 13
(1) அனைத்துங் கடந்தோன் .. 14
(2) அறிதற்கரியோன் .. 14
(3) எங்கும் நிறைந்தோன் .. 15
(4) ஒளியாய்த் திகழ்வோன் .. 18
(5) அன்பே சிவம் .. 20
(6) அருவாய்-உருவாய்-அருவுருவாய்த் திகழ்வோன் .. 33
(இ) மனிதப் பிறவியும் வேண்டுவதே! .. 35
(1) ஒட்டுநிலை .. 36
(2) கட்டுநிலை .. 37
(3) உய்வுநிலை .. 45
(ஈ) ஐந்தெழுத்தே அனைத்தும் .. 54
(1) பொருள் மறை
(2) ஆண்டவன் வடிவம் .. 54
(3) ஐந்தெழுத்தே அனைத்தும் .. 58

3. சைவ மெய்யறிவியல்

(அ) மெய்யறிவியல் நூல்கள்	..	61
(1) திருவுந்தியார்	..	61
(2) திருக்களிற்றுப்படியார்	..	62
(3) சிவஞான போதம்	..	63
(4) சிவஞான சித்தியார்	..	64
(5) சிவப்பிரகாசம்	..	65
(6) இருபா இருபது	..	66
(7) உண்மை விளக்கம்	..	66
(8) திருவருட்பயன்	..	66
(9) வினா வெண்பா	..	67
(10) போற்றிப் பஃறொடை	..	67
(11) கொடிக்கவி	..	68
(12) நெஞ்சு விடு தூது	..	68
(13) உண்மை நெறி விளக்கம்	..	69
(14) சங்கற்ப நிராகரணம்	..	69
(ஆ) சைவச் செம்பொருட்டுணிவு	..	69
(இ) சைவச் செம்பொருட்டுணிவில் கூறப்பெறும் தத்துவங்கள்	..	70
(ஈ) வேதாந்தமும் சித்தாந்தமும்	..	72

4. சைவ வாழ்வியல்

(அ) வழிபாட்டுநெறி	..	75
(1) ஆலய வழிபாடு	..	75
(2) நினைப்பு வழிபாடு	..	83
(ஆ) சமய ஒழுக்கம்	..	84
(1) திருநீறு	..	88
(2) கண்டிகை	..	89

5. சைவ-கிறிஸ்தவ உரையாடல்

(அ) கிறிஸ்தவமும் பிற சமயங்களும்	..	92
(ஆ) பிற சமயத்தவருடன் உரையாடல்	..	96
(இ) சைவ சமயத்தவருடன் உரையாடல்	..	97
சமய உறவு; உரையாடல் ஆகியவைபற்றிய சில நூல்கள்	..	106
துணைநின்ற நூல்கள்	..	107

அறிமுகம்

தமிழகத்தில் வேரூன்றித் தழைத்துவரும் சமயம் சைவ சமயம் ஆகும். அச்சமயத்தினைத் தழுவும் பல்லாயிரக்கணக்கான அன்பர்களிடையே வாழும் பேறு தமிழ்க் கிறிஸ்தவர்களுக்குக் கிட்டியுள்ளது. சைவத்தைத் தெளிவுற விளங்கிக்கொள்ளும் ஆர்வம் படைத்த கிறிஸ்தவ அறிஞர்கள் பலர் அதனைப் பயின்று நூல்கள் எழுதியுள்ளனர். அவர்களுள் பலர் சைவம் பற்றிய கிறிஸ்தவ மதிப்பீட்டையும் வழங்கியுள்ளனர்.

இச்சிறு நூல் சைவத்தை மதிப்பிடும் நூல் அன்று. அச் சமயம் தழுவும் அன்பர்கள் அதனை எங்ஙனம் விளங்கிக்கொண்டு பிறர்க்கு விளக்குகின்றார்கள் என்பதைத் தொகுத்துச் சுட்டுவதே இந்நூல் எழுவதற்கான நோக்கமாக அமைந்தது. இறையியல், மெய்யறிவியல், வாழ்வியல் ஆகிய மூன்று துறைகளில் சைவம் சைவர்களின் வாழ்வில் பெற்றிடும் சிறப்பினையே இந்நூல் எடுத்துரைக்கின்றது.

இறுதி அத்தியாயத்தில் பிற சமயத்தவரோடு உரையாடல் மற்றும் சைவ-கிறிஸ்தவ உரையாடல் பற்றிய சில கருத்துக்கள் தரப்படுகின்றன. அவை மறுப்புக்கு இடம்தராத கருத்துக்கள் அல்ல. இன்றைய தமிழகத்தில் பல்சமயச்சூழலில் பெருகிவரும் சமரசப் பொதுமைக் கொள்கையையும் நெறியையும் கிறிஸ்தவர்கள் உரையாடலுக்கு உதவாதவைகளாக ஒதுக்கிவிட முடியாது என்ற தெளிவுடன் அவ்வத்தியாயத்தை எழுதியுள்ளேன்.

சைவ-கிறிஸ்தவ உரையாடல் எழுவதற்கு இச்சிறு நூல் ஒரு சிறு தூண்டுகோலாக அமையுமாயின் பெரிதும் மகிழ்ச்சி யடைவேன்.

இந்நூலின் முதல் இரண்டு அத்தியாயங்களைத் தமிழ்நாடு இறையியல் கல்லூரியில் B.Th. மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கு வழங்கியபோதும், B.D. முதலாம் ஆண்டு மாணவர்களிடையே அவற்றின் திரண்ட கருத்தை ஆய்ந்தபோதும் (1971–72) பல

மாணவ அன்பர்கள் தந்த குறிப்புக்கள் பயனுடையவையாக இருந்தன. அவர்கட்கெல்லாம் என் நன்றி உரியது. அங்ஙனமே கல்லூரி முதல்வர் டாக்டர் சாமுவேல் அமிர்தம் அவர்கட்கும் நன்றியுடையேன்.

தமிழ்நாடு இறையியல் கல்லூரி, தி. தயானந்தன் பிரான்சிஸ்
மதுரை-10.
1–3–1972.

1. சைவத்தின் சிறப்பியல்புகள்

(அ) தொன்மைச் சிறப்பு

சைவ சமயம் மிகப் பழமையது. அது பண்டுதொட்டே தமிழ் மக்களின் வாழ்வியலோடு இழைந்துவிட்ட அருட்சமய நெறி ஆகும். சைவத்தின் தோற்ற காலத்தை அறுதியிட்டுக் கூறுதல் கடினம் என்பது அறிஞர் கருத்து. வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட நிலையிலும் அதன் எழுச்சிநிலையைக் காணமுடியும் என அவர் கூறுவர். இத்தகு தொன்மைச் சிறப்பு மிகுந்த சைவமும் அந்நெறித் தொடர்புடைய சொற்களும் செய்திகளும் தமிழரின் பழம்பெரும் நூல்களில் குறிக்கப்படுகின்றன. ரிக் வேதத்திலும் சிவம் என்னும் சொல் காணப்படுகின்றது. ரிக் வேதத்தில் சிவம் என்னும் சொல் 'மங்கலம்' என்ற பொருளில் ஒரு பெயரடையாக —சிறப்புப் பெயராக—ஆளப்படுகின்றது. அது உருத்திரனுக்கு உரித்தான பெயராக வருகின்றது. ஸ்வேதாஸ்வதாரா உபநிடதத்தில் மாயா என்னும் தொடர் சைவ சித்தாந்தம் மாயை பற்றிக் கூறும் பொருளில் ஆளப்பட்டுள்ளது. சைவம் சிவனைச் சிறப்பிக்கும் வகையில் இறைவன் அந்நூலில் விளக்கப்படுகிறான். இறைவனை உயர்திணையினனாய் நேர்த்தொடர்பு கொள்ளும் தன்மையனாய்க் காணும் நெறிக்கான வித்து இவ்வுபநிடதத்தில் உள்ளது. சைவம் சிறப்பிக்கும் 'குருவருள்', 'பக்தி' ஆகியவையும் இந்நூலில் ஓரளவுக்குப் பேசப்படுகின்றது. மகாபாரதத்தில் சிவன் அனைத்தையும் கடந்தவனாக யாவர்க்கும் மேம்பட்டவனாகப் பேசப்படுகின்றான். தேவர்களாலும் அவனை அறிதல் இயலாது என்று கூறப்படுகின்றது. அவனுடைய உருவம் இலிங்கம் என்றும் மகாபாரதம் கூறுகின்றது. சிவநெறிச் சார்புடைய வழிபாடும் வாழ்வும் கி. மு. 400-க்கு முன்பிருந்தே இந்தியத் துணைக்கண்டத்தின் பல பகுதிகளில் இருந்திருத்தல் வேண்டும் என்று அறிஞர் துணிவர். தமிழ்ச் சைவம் போன்றே காஷ்மீரச் சைவமும் பழையது என அவர் கூறுவர். லிங்காயதர் சைவம் காலத்தில் பிந்தியதாகும்.

முன்னைப் பழமைக்குப் பழமையாகவும் பின்னைப் புதுமைக்குப் புதுமையாகவும் விளங்கும் சிறப்பினைப் பெற்றோன் சிவபெருமான் என்பர் மணிவாசகர்.

'முன்னைப் பழம்பொருட்கு முன்னைப்
    பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் போர்த்துமப்
பெற்றியனே . . .'

என்பது அவர் வாசகம்.

பழந்தமிழர் செம்பொருளாம் இறைவனை உணர்த்த ஆண்ட சொற்களுள் ஒன்று கந்தழி என்பதனைத் தொல்காப்பியம் வாயிலாக அறிகின்றோம்:

கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே.

(தொல். புறத். 33)

கந்தழி என்ற சொல், கந்து—கட்டு; அழி—அற்றவிடம் என்ற பொருளைத் தரும். செம்பொருளாகிய இறைவன் கட்டற்றவன் என்ற உண்மை இச்சொல்லால் உணர்த்தப்படும். கட்டுடையன உயிர்கள்; கட்டில்லாதவன் இறைவன் என்று அறிந்தநிலையில் தமிழ் மக்கள் இறைவனைக் கந்தழி என்று அழைத்தனர். இனி, இத் தெளிவுபடைத்தோராய் வாழ்ந்த பழந்தமிழர் இறை (பதி) உயிர் (பசு) தளை (பாசம்) என்னும் முப்பொருளுண்மை அறிந்திருந்தனர் எனக் கொள்ள இடமுள்ளது. இதனின்றும் சைவத்தின் பழமை அறியப்படும். கந்தழி, முருகு போன்ற பழந்தமிழ்க் கடவுட் பெயர்கள் சிவம் என்னும் சொல்லால் குறிக்கப்படலாயின என்பர் அறிஞர். இச்சொல் தூயத் தமிழ்ச்சொல் என்பர். அது செம்மை என்னும் சொல்லினடியாகப் பிறந்தது என்று அவர் கூறுவர். அது வடமொழிச்சொல்; மங்கலம், ஆனந்தம், முற்றறிவுடையது, தூயது என்பன போன்ற பொருட்களைத்தரும் எனக் கூறுவாரும் உளர்.

(ஆ) அன்புநெறி

தொன்மைச் சிறப்புடன், அன்புநெறியை வலியுறுத்தும் மாண்பும் சைவத்தில் காணக்கிடக்கின்றது. சைவத்தை அன்புச் சமயம் என்பர். சிவம் என்னும் சொல்லால் குறிக்கப்பெறும் முழுமுதற்பொருளாகிய இறைவன் அன்பினின்றும் மாறுபட்டவனல்லன் என்பது சைவத் தெளிவு.

'அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்திலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப் பாரே'

என்பது திருமூலர் திருமொழி.

அன்பு என்னும் தமிழ்ச்சொல்லை அல்+பு எனப் பிரித்து விளக்குவர். அல்லாமை என அது பொருள் தரும். 'தான் அல்லாமை' என அது விரிவாக விளக்கப்படும். பிறர் நலம் பேணுமுகத்தான் 'தான் அற்று நிற்கும் நிலையை'-தான் கெட்டு நிற்கும் நிலைமை'யை அது சுட்டும் என்பர்.

இவ்வன்புநெறி எவ்வுயிரிடத்தும் அன்புபூண்டொழுகுதலைச் சிறப்பிக்கின்றது. இல்லறத்திலும் புறவாழ்க்கை ஈடுபாடுகளிலும் இந்நெறியின் திறம் விளங்கப்பெறும். இந்நெறி ஏற்றோர் உயிர்க்கொலையும் புலாலுண்டலும் தவிர்த்தோராய் இருத்தல் வேண்டப்படும்.

'எவ்வுயிரும் நீங்கா துறையும்இறை சிவன்என்று
எவ்வுயிர்க்கும் அன்பா யிரு'

என்பதே சைவ அன்பின் அடிக்கருத்து. இக்கருத்தினை ஒட்டியே கொல்லாமை, புலா லுண்ணாமை ஆகியவை சைவத்தில் வலியுறுத்தப்படுகின்றன.

'கொல்லா விரதம் குவலயமெல் லாம் ஓங்க
எல்லார்க்குஞ் சொல்லுவது என்னிச்சை பராபரமே'

என்பர் தாயுமானர்,

அன்பும் அறமும் பண்பும் பெருமையும் உயிரிரக்கத்தில் அடங்கும் என முழங்கும் வள்ளலார்,

'எவ்வுயிரும் பொதுவெனக்கண் டிரங்கி
உபகரிக்கின் றார்யாவர் அந்தச்
செவ்வியர் தஞ் செயலனைத்துந் திருவருளின்
செயலெனவே தெரிந்தேன்'

என்று கூறுவார்.

உள்ளத்தில் இரக்கவுணர்ச்சியும் தூய்மையும் நிறைதல் வேண்டும் என்பதனைக் காட்டவே நீறு பூசி உருத்திராட்சம் அணியும் வழக்கம் சைவருக்குள் ஏற்பட்டது. திருநீறு தூய்மையின் சின்னம் ஆகும். 'பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்' என்பது சேக்கிழார் வாக்கு. உருத்திராட்சம் சிவபெருமானின் கண்களினின்றும் எழுந்தது என்று புராணம் கூறும். இனி, 'கண்ணுக்கணிகலம் கண்ணோட்டம்' என்பதனை ஒட்டி உருத்திராட்சம் இரக்கத்தின் அடையாளமாகத் திகழ்வது என்றுணரப்படும்.

அன்பு நெஞ்சம் படைத்த அடியார்கள் இறைவனிடத்தும் அவனிடம் அன்புசெலுத்தும் பிற அடியாரிடத்தும் நீங்கா அன்பு கொண்டு ஒழுகுவார்கள். அத்தகையோரின் அன்புச்செயல்கள்

சைவத்தின் சீரிய நூலான பெரியபுராணத்தில் காணக்கிடக்கின் றன. அவ் அன்புநெறியார்களைச் சேக்கிழார்,

'ஆரங் கண்டிகை ஆடையுங் கந்தையே
பாரம் ஈசன் பணியல தொன்றிலார்
ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
வீரம் என்னுல் விளம்புந் தகையதோ'

எனப் பாராட்டுவார்.

'எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும்
இலங்கும் உயிர் உடலனைத்தும் ஈசன்கோவில்'

என்னும் கொள்கைத் தெளிவுபடைத்தோர் அன்புநெறியாளர் இறைவனை ஆலயத்தில் மட்டுமல்லாமல் உயிர்களிடத்தும் வழி படுவர்.

உயிர்களை நடமாடுங் கோயிலாகக் கருதி வழிபடும் அன்பு நெறியில் சாதி சமய பேதங்கள் யாவும் களையப்படும். நடமாடும் கோயிலாயுள்ளோர்க்கு அளிப்பது படமாடக் கோயிலில் இருப் போரைச் சேரும்.

'படமாடக் கோயில் பகவற்கொன் றீயின்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயின்
படமாடக் கோயில் பகவற்கங் காமே'

என்பது திருமந்திரம்.

'அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவு ளாரே'

என்னும் அப்பர் கூற்று ஆய்வதற்குரியதாகும்.

(இ) பொதுமைக் கொள்கை

சைவம் பொதுமை நெறியினைப் புகட்டும் சமயம் என அறிஞர் கூறுவர். அன்புநெறி ஏற்போர் எவரேயாயினும், அவருடைய சாதி மதப் பின்னணி ஏதுவாயினும், அவர் எந்நாட்டைச் சேர்ந் தோராயினும் அவர் பண்பால் சைவரே என அவர் கொள்வர். இதனை,

'எந்நிலையில் நின்றாலும், எக்கோலங் கொண்டாலும்
மன்னியசீர் சங்கரன்றாள் மறவாமை பொருளென்றே'

எனவும்,

'மூவேந்தர் தமிழ்வழங்கு நாட்டுக்கப்பால்
முதல்வனுர் அடிசார்ந்த முறைமை யோரும்'

எனவும் வரும் சேக்கிழாரின் வாய்மொழியால் அறியலாம்.

'சைவம் தனித்தும் எல்லாச் சமயங்களிலும் ஊடுருவிப் பாய்ந்தும் நிற்பது' என்று கூறுவார் தமிழ்ப் பெரியார் திரு. வி. க.[1]

சமயப் பிணக்குகளைத் தவிர்த்து ஒருமை நோக்குடன் பொதுமைத் தெளிவுகாண்டல் வேண்டும் என்பது சைவப் பெரியார்களின் பாடல்களில் பலபடக் கூறப்படுகின்றது.

'வாது செய்து மயங்கும் மனத்தராய்
ஏது சொல்லுவீ ராகிலும் ஏழைகாள்
யாதோர் தேவரெனப்படு வார்க்கெலாம்
மாதே வனலால் தேவர் மற்றில்லையே'

என்றும்,

'விரிவிலா அறிவினுர்கள் வேறொரு சமயஞ் செய்தே
எரிவினுல் சொன்னுரேனும் எம்பிராற் கேற்றதாகும்'

என்றும் அப்பர் ஓதுகின்றுர்.

'தென்னுடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'

என்னுந் திருவாசக மொழி உலகமனைத்தினுக்கும் ஆண்டவனுய்' அருள்வோனுய் உள்ள இறைவன் தென்னுட்டில் சிவன் எனப்படுகின்றுன் என்பதை யுணர்த்துகின்றது.

'ஒன்றது பேரூர் வழியா றதற்குள
என்றது போல இருமுச் சமயமும்
நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழு நாயை யொத்தார்களே'

என்னும் திருமூலர் கூற்றும்,

'வேறுபடும் சமயமெலாம் புகுந்து பார்க்கில்
விளங்குபரம் பொருளேநின் விளையாட் டல்லால்
மாறுபடுங் கருத்தில்லை'

என வரும் தாயுமானவர் கொள்கையும் கருத்துக்குரியவை.

பொதுமை நெறியின் ஆழத்தினைக் கண்ட வள்ளலார்,
'பெருகியபே ரருளுடையா ரம்பலத்தே நடிக்கும்
பெருந்தகையென் கணவர் திருப்பேர் புகலென் கின்றுய்
அருகர் புத்த ராதியென்பேன் அயனென்பேன் நாரா
யணனென்பேன் அரனென்பேன் ஆதி சிவனென்பேன்

[1] சைவத்தின் சமரசம், பக்கம் 29.

பருகுசதா சிவனென்பேன் சத்திசிவ மென்பேன்
பரமமென்பேன் பிரமமென்பேன் பரப்பிரம மென்பேன்
துருவுசுத்தப் பிரமமென்பேன் துரியநிறைவென்பேன்
சுத்தசிவ மென்பன் இவைசித்துவிளை யாட்டே'

என்று தம் பொதுமை உள்ளத்தைத் திறந்து காட்டுகிறார்.

பொதுமை நெறிக்கு அடிப்படையாக வேண்டப்படுவது சன்மார்க்கம் என்பதும் சைவப் பெரியோரால் வலியிறுத்தப்படுகின்றது. சன்மார்க்கம் என்பது உண்மைநெறி என்ற பொருளைத்தரும். எல்லார்க்கும் பொதுவில் நடமாடும் சத்தாய—உண்மைப் பொருளாகிய இறைவனை உணர்தற்குப் பொது உள்ளம், பொது நோக்கு, பொது வாழ்க்கை அவசியமாகும். சன்மார்க்கமும் சமதர்மமும் தொடர்புடையனவாக இருத்தலே இன்றைய உலகின் தேவை என்பர் திரு. வி. க.[1]

(ஈ) அழகோம்பும் பண்பு

இயற்கையோடு இயைந்த வாழ்வுநடத்திய தமிழ் மக்கள் அவ்வியற்கையில் இழைந்தோடும் அழகினை வியந்து போற்றினர்! ஓம்பி வாழ்த்தினர். அப்பேரழகில் இறைமையைக் கண்டனர். அதனை முருகு என்றனர். அச்சொல்லுக்கு அழகு, இளமை, மணம், இறவாமை என்று பொருள் சொல்வர். இந்நான்கினையும் தொகுத்தடக்கும் இயற்கை வழியே இறைவனைக் கண்டனர் தமிழ் மக்கள். முருகு என்னும் சொற்கு அன் விகுதி சேர்க்கப்பெற்று முருகன் என்னுஞ் சொல் ஏற்படலாயிற்று.

இறைவன் முருகன் என்னுஞ் சொல்லால் குறிக்கப்படலானான். தமிழ் மக்கள் சிவனைச் சொக்கன் (அழகன்) என்னும் பெயரால் அழைத்து வந்துள்ள மாண்பும் இங்குக் கருதத்தக்கது.

'அழகனே ஆலவாயில் அப்பனே
அருள் செய்வாயே!'

என்பர் அப்பர்,

'தக்கன் வேள்வி தகர்ந்தருள் ஆலவாய்
சொக்கனே யஞ்ச லென்றருள் செய்யேனே'

எனப் பரவுவார் சம்பந்தர்.

அருணகிரி நாதரும் முருகக் கடவுளை,
'அழகான மேனி தாங்கிய வேளே!'
'சிவஞானப் பொருளூட்டு முண்டக அழகோனே!'
'அயிலு மயிலு மறமு நிறமு மழகு முடைய பெருமாளே!'

எனப் பலபடக் கூறி அவன் அழகுத் திறனை வியந்து நிற்கின்றார்.

[1] ஆலமும் அமுதமும், பக்கம் 20–21.

முருகனின் சிறப்புக்களைக் கூற எழுந்த நூல் கந்த புராணம் ஆகும். இந்நூல் முருகனைச் சிவபிரானின் மைந்தனாய்ச் சுட்டிக் காட்டுகின்றது. 'பெம்மான் முருகன் பிறவான் இறவான்' என்னும் கந்தரனுபூதி மொழிக்கு அது முரண்பட்ட போக்காகவே தோன்றுகிறது. ஆயின் புராண முருகன், சிவனின் திருக் கண்களினின்றும் தோன்றிக் காற்றாலும், நெருப்பாலும் தாங்கப்பெற்று நாணற்பொய்கையில் குழந்தையாய், மண்ணில் திருவிளையாடல் புரிந்தான் என்று புராணம் கூறுகின்றது. இதனை ஆய்ந்தால் முருகன் மண், புனல், தீ, வளி, வெளி ஆகிய ஐம்பூதங்கட்கும் காரணன் என்பது புலனாகும். முருகப்பெருமான் இயற்கை முதல்வன் என்பதைக் கதை வாயிலாகப் புராணம் அறிவுறுத்தும் நுட்பத்தை ஞான நூல் துணைகொண்டு ஆராய்ந்து உணரவேண்டுவது அறிஞர் கடமை என்பர் திரு. வி. க.[1]

முருகனைச் சிவமைந்தனாய்ச் சித்தரிப்பதன் உட்கருத்தும் இங்ஙனமே ஊன்றி யுணர்தற்குரியது என்பர் அவர். பரம் பொருள் சச்சிதானந்தனாய் உளன். சத்—சித்—ஆனந்த நிலை உண்மை—அறிவு—இன்பம் ஆகியவற்றைச் சுட்டும். இதனையே புராணம் தந்தை—தாய்—மைந்தன் என எடுத்தோதுகின்றது. சோமாஸ்கந்த மூர்த்தம் என்பது இதனையே உணர்த்தும். உமையோடும் கூடிய ஒருவனும் கந்தனும் என்பது அத்தொடர் உணர்த்தும் பொருள் ஆகும்.

'சிவனே குகன் (முருகன்) முருகனே சிவன்' என்பது கந்த புராணத்தில் கூறப்படாமலில்லை.

'ஈச னேயவ னுடலான் மதலையா யினன்காண்
ஆசி லாவவ னறுமுகத் துண்மையா லறிநீ
பேசி லாங்கவன் பரனெடு பேதக னல்லன்
தேசு லாவகன் மணியிடைக் கதிர்வரு திறம்போல்'

என்ற பாடல் இதற்குத் தக்க சான்று ஆகும்.

(உ) உலகப் பொருண்மைத் தெளிவு

சைவம் உலகையும் அதனில் வாழப்பெறும் வாழ்க்கையையும் இழித்துப் பழிக்கும் மதம் அன்று. உலகம் தோன்ற முதற் காரணமாய் இருப்பது மாயை என அது கூறும். அதனைப் பொருண்மையுடையதொன்றாய் சைவம் ஏற்கின்றது. மாயையைப் பொருளாகக் கொண்ட சைவம் அம் மாயையினின்றும் இறைவனால் படைக்கப்பெறும் உலகை எங்ஙனம் ஒதுக்கித் தள்ளமுடியும்? உயிர்கள் தங்கள் அறியாமை நீங்கப்பெறுதற்காக இறைவன்

[1] முருகன் அல்லது அழகு, பக். 151.

அவற்றுக்குத் தனுகரண புவன போகங்களை—உடல், உலகு ஆகிய வற்றைத் தருகின்றான் எனச் சைவம் அறுதியிட்டுக் கூறுகிறது.

சைவத்தின் இந்தப் பொருண்மைத் தெளிவு, உலகை துறத்தல்பற்றிக் கூறும் கொள்கைக்கு முற்றிலும் முரணானது என்பது நோக்கத் தகுந்தது. அவ்வாறே, உலகமே பொருள்; அதனின் வேறுபட்ட செம்பொருள் ஏதுமில்லை எனக் கூறும் உலகாயதக் கொள்கையினின்றும்கூட அது மாறுபட்டதேயாகும். உயிர்கள் யாவும் உய்வு நிலையினை எய்துதற்கென்றே இறைவன் உலகையும், வாழ்க்கையையும் அருளியிருக்கின்றான். அவை யிரண்டும் உய்வுநிலை அடைதற்கு கொழுகொம்பாய் உள்ளன எனக் கூறிச் சைவம் அவற்றை ஏற்கின்றது.

'மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல் லகதிக்கு யாதுமோர் குறைவில்லை
கண்ணினல் லஃதுறங் கழுமல் வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை இருந்தே'

எனப் பாடுகின்றார் சம்பந்தர்.

'இறைகளோ டிசைந்த இன்பம்
இன்பத்தோ டிசைந்த வாழ்வு
பண்மயத்த மொழிப்பரவை சங்கிலிக்கும் எனக்கும்
பற்றாய பெருமானை மற்றாரை யுடையேன்!'

எனத் தம் உள்ளத்து உணர்ச்சியை வெளிப்படுத்துகிறார், இல்லறத்தில் நின்றொழுகிய சுந்தரர்.

சைவம் சடத்தையும் உண்மைப் பொருளாய் ஏற்கின்றது. சத்தாகிய சித்துக்கும் உண்மை கூறுகின்றது. சித்தானது சடத்தில் கலந்துறைகின்றது; அதற்கு மேலும் கடந்து செல்கின்றது என அது கூறும். 'உலகெலாமாகி வேறாய் உடனுமாய்' என்பது சாத்திர உரை.

(ஊ) சித்த மார்க்கம்

சைவம் சித்த மார்க்கத்துள் அடங்கும். சித்த மார்க்கம் தமிழகத்தில் தொன்றுதொட்டே இருந்துவருவதொன்றாகும். இது முதலில் உலகம் முழுவதிலும் பரவி நின்ற மரபு என்பர் திரு. வி. க.[1] இது தமிழ் மார்க்கம் என்று போற்றப்பெறுவது கருதத்தகுந்ததாகும்.

'மூப்பற்றுச் செவி . . . .
வாய்ப்புற் றத்தமிழ் மார்க்கத் திட்பொருள்
வாய்குச் சித்திர முருகோனே'

என்பது அருணகிரியார் பாடல்.

[1] பரம்பொருள் அல்லது வாழ்க்கை வழி, பக்கம் 210.

ஆழ்ந்த ஆன்மீகக் கருத்துக்களைச் சித்தர்களின் பாடல்கள் எடுத்தோதுகின்றன. சைவ சமயத்தின் மிகப் பழைய நூல்களில் ஒன்றுன திருமந்திரத்தை எழுதியுள்ள திருமூலர் ஒரு சித்தர் ஆவர். அவருடைய பாடல்களில் சித்தாந்த உண்மைகள் ஆழ்ந்த விளக்கங்களோடு தரப்படுகின்றன. அவரைத் தொடர்ந்து வந்த பல சித்தர்களும் சிவனைப்பற்றியே பாடியுள்ளார்கள். வைணவர்களுள்ளும் நாதமுனிகள் ஒரு சித்தர் என குரு பரம்பரை கூறும்.

'கடவுளைக் காண முயல்கிறவர்களைப் பக்தர்கள் என்றும், கண்டு தெளிந்தவர்களைச் சித்தர்கள் என்றும் தேவாரம் வேறு பிரித்துக்கூறும்....சித்தர்களின் அனுபூதி அனுபவத்தில் வேற்றுமை இல்லை. அதைக் கூறும் வருணனையிலேயே வேற்றுமை உள்ளது. ஆதலின், சித்தர்கள் எல்லாச் சமயத்திற்கும் அப்பாற்பட்ட சர்வ சமய சமரச சன்மார்க்கத்தினைப் பாடக் காண்கிறோம்' எனத் தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர் 'கலைக் களஞ்சியம்' நான்காவது தொகுதியில் 'சித்தர்கள்' பற்றித் தாம் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிடுகிறுர்.

சித்தர் மரபு தமிழ்நாட்டில் சிறப்பிழக்கும் நிலை எய்தியபோது அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோருடன் மாணிக்கவாசகரும் தோன்றி அம் மரபினுக்கு ஆக்கம் தேடினர். இந் நால்வர் பாக்களிலும் சித்தர் மரபின் உயிர்நாடியான கருத்துக்கள் காணக் கிடக்கின்றன. அவர்கள் மரணமிலாப் பெருவாழ்வுபற்றிப் பேசுகின்றுர்கள்.

'பூவார்ந்த சென்னி............
சாவாமே காத்தென்னை ஆண்டாய் போற்றி'

என்றும்,

'பிறப்பு மூப்புப் பெரும்பசி வான்பிணி
இறப்பு நீங்கியின் கின்பம்வந் தெய்திடும்
சிறப்பர் சேறையுட் செந்நெறி யான்கழல்
மறப்ப தின்றி மனத்தினுள் வைக்கவே'

என்றும் அப்பர் பாடுகின்றுர்.

'சாதலும் பிறத்தலும் தவிர்த்தெனை வகுத்துத்
தன்னருள் தந்தஎந் தலைவனை..........
மழைக் கரும்பு..........
..........பிறவாமைப்
பெருமை பெற்றேன்..........
மருப்பற் றெனக் கின்றி..........

பெற்றலும் பிறந்தேன் இனிப்பிறவாத
தன்மைவந் தெய்தினேன்'

என்பர் சுந்தரர்.

நால்வரும் மரணம் வந்துருமலேயே இறைவனோடு ஒன்றி மரணமிலாப் பெருவாழ்வு பெற்றோர் என்பதுநூற் குறிப்புக்களால் அறியப்படும்.

இவர்களைத் தொடர்ந்து தாயுமானுர், பட்டினத்தடிகள், அருணகிரியார், வள்ளலார் போன்றோர் சித்தர் மரபில் தோன்றி யோர் ஆவர்.

'வாழையடி வாழையென வந்ததிருக் கூட்ட
மரபினில்யான் ஒருவ னன்றோ....'

என்பது இராமலிங்க சுவாமிகளின் வாக்கு. பத்திரகிரியார், சிவ வாக்கியர், பாம்பாட்டிச் சித்தர், இடைக்காட்டுச் சித்தர், அகப் பேய்ச் சித்தர், குதம்பைச் சித்தர் போன்றோரின் பாடல்கள் யாவரும் பாடும்வண்ணம் இயற்றப்பட்டவை. அவை பேருண்மை களை அடக்கி நிற்கும் இனிய பாடல்கள் ஆகும்.

2. சைவ இறையியல்

(அ) அருளா அறிவா?

சைவத்தின் இறையியல் கருத்துக்களை விளங்கிக்கொள்வதற்குத் துணையாக உள்ள நூல்கள் இரு வகைப்படும். அவற்றுள் ஒரு வகை நூல்கள் இறையனுபவம் பெற்ற சைவப் பெரியார்களின் பாடல்களையும் வரலாறுகளையும் கொண்டவை ஆகும். மற்றொரு வகையிலடங்கும் நூல்கள் மெய்யறிவியல் நேயக்கோடு சைவத்தின் அடிப்படைக் கொள்கைகளை ஆராய்கின்றவையாகும். அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் போன்றோரின் பாடல்களும் சேக்கிழாரின் பெரிய புராணமும் முதல் வகையைச் சேர்ந்த நூல்களாகும். இவையும் இன்னும் சில நூல்களும் பன்னிரு திருமறை என்ற பகுப்பில் அடங்கும். மெய்கண்டாரின் சிவஞான போதம் அருணந்தி சிவாசாரியர் எழுதியுள்ள சிவஞான சித்தியார், உமாபதியார் இயற்றிய சிவப்பிரகாசம் ஆகியவும் வேறுசில நூல்களும் இரண்டாம் வகையைச் சேர்ந்த நூல்களாகும். இவை பதினான்காகும். இவற்றை மெய்கண்ட சாத்திரம் என்பர்.

இவ்விரு வகை நூற்களில் முன்னையவற்றை பன்னிரு திருமுறையிலடங்கும் நூல்களை—வேதம். ஆகமம் போன்று வெளிப்பாட்டு நூல்களாகக் கருதுதல் வேண்டும். அவை சைவப் பெரியார்களின் ஆன்மீக அனுபவத்தை உள்ளவாறே தருகின்றன. ஆண்டவன் அடியார்க்கு எளியன்; அன்பு வலையிற் படுவோன்; அருள் நிறைந்து செயற்படுவோன்; தடுத்தாண்டு திருவருள் கூட்டுவோன் என்பன போன்ற ஆழ்ந்த ஆன்மீக உண்மைகள் இந் நூல்களில் காணக்கிடக்கின்றன.

மெய்யறிவு நோக்குடைய சாத்திர நூல்கள், திருமுறை நூல்கள் கூறும் இறையனுபவம் அறிவு நெறிக்குப் புறம்பானவை அல்ல என்று எடுத்துக்காட்டுவன ஆகும். அவை ஆன்மீக அனுபவங்களை அறிவு வழி நின்று விளக்கும் நூல்களாக உள்ளன. இறைவன் மாட்டு அடியவர்க்கு உள்ள பற்றும் பிடிப்பும் அறிவு விளக்கத்துக்கு முரண்பட்டவையாக இருக்கவேண்டிய அவசியமில்லை என்பது இதன்மூலம் விளங்குகின்றது.

அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பேரிடம் தந்தால் இறைவனைப் பற்றிய உயரறிவு கிட்டி அதன்மூலம் அவன் மாட்டுப்பற்று எழும்

எனச் சைவப் பெரியார்கள் யாண்டும் கருதிலர். ஏதுக்களாலும் எடுத்துக்காட்டுகளாலும் இறைவன் உள்ளான் என்பதை உணர்தல் இயலாது; அவன் அன்பு வலையிற்படுவோன்; தன் அருளினாலேயே தன்னைத் தம் அன்பர்களுக்குக் காட்டுவோன் என்ற தெளிவினை அவர்கள் பெற்றிருந்தார்கள்.

'மறையினான் அயனான் மாலான்
மனத்தினான் வாக்கான் மற்றும்
குறைவிலா அளவி னாலுங்
கூறொணா தாகி நின்ற
இறைவனார் கமல பாதம்
இன்றுயான் இயம்பும் ஆசை
நிறையினார் குணத்தோர்க் கெல்லாம்
நகையினை நிறுத்து மன்றே'

என்ற அவையடக்கத்தோடு தம் நூலினை ஆரம்பிக்கின்றார் அருணந்தியார் (சித்தியார், பக்கம் 4).

வேதங்களாலும், தேவர்களாலும், மனத்தினாலும், வாக்கினாலும் அனுமானத்தினாலும் அறிதற்கு அரிதாக நிற்கின்றவன் இறைவன். அவனது கமல மலர்போலும் பாதம் எனப்படும் இயல்பை யான் எடுத்துரைக்க விரும்புவது சார்புடைய பெரியோர்க்கெல்லாம் நகைப்பையே விளைவிக்கும் என்கின்றார்.

இறைவனின் இயல்பு அத்தகையதாயினும், அவ்விறைவன் நூலெனப்படும் சிவகாமம் கற்ற குரு அருளும் உபதேசத்தால் அவன் மாண்பைக் கேட்டறியலாம்; கேட்டதனை அதற்கு அனுகூலமான அளவையால் சிந்திக்கலாம். சிந்தித்ததனைத் தன்னறிவின் கண்ணே சிவஞானத்தால் மாசுகள் நீங்கத் தெளிந்தும் அறியலாம் என்று அவர் தொடர்ந்து கூறுகின்றார்:

'அருளினால் ஆக மத்தே
அறியலாம் அளவி னாலுந்
தெருளெலாஞ் சிவனை ஞானச்
செய்தியாற் சிந்தை யுள்ளே
மருளெலாம் நீங்கக் கண்டு
வாழலாம் பிறவி மாயா
இருளெலாம் இரிக்க லாகும்
அடியரோடு இருக்க லாமே.'

ஆக, சைவ இறையியல் இறைவனின் அருளுக்கு முதலிடத்தையும் அறிவுக்கும் ஆய்வுகளுக்கும் அதற்கடுத்த இடங்களையும் தருகின்றது.

சைவம் இறைவனை மெய்யறிவியல் ஆராய்ச்சிகளின் விளைவாகக் காணப்பெறும் ஒருவனாகக் காட்டுதலில்லை. அவன் இத்தகையன் என்பது அவன் அருளினால் மட்டுமே புலனாக முடியும் என்பதை அது வலியுறுத்துகின்றது.

'...ஒப்புடையனல்லன், ஒருவனல்லன், ஓரூரனல்லன்
ஓருருவம் அவனல்லி
அப்படியவன் அவ்வுருவன் அவ்வண்ணத்தன்,
அவனருளே கண்ணாகக் காண்பதல்லால்
இப்படியன் இவ்வுருவன் இவ்வண்ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே'

என்னும் திருநாவுக்கரசர் பாடல் ஈண்டுக் கருதத்தக்கது.

'அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்பர் மணிவாசகரும்.

சைவத்தின் இறையியற் கருத்துக்களை வகைப்படுத்திக் காண முற்படும்போது அது அருட்சமயம் என்பதனை நினைவுறுத்திக் கொள்ளல் அவசியமாகின்றது. மெய்கண்ட நூல்களில் உள்ள மெய்யறிவியல் விளக்கங்களை மட்டும் கொண்டு சைவ இறையியலை புரிந்துகொள்ள முடியாது. உயிர்ப்பும் துடிப்பும் மிகுந்த வாழ்விலக்கியத் தொகுப்பாகிய பன்னிரண்டு திருமுறையும் பிற நூல்களும் சைவ இறையியலின் மாண்பினைப் பேரளவுக்கு எடுத்துக் காட்டுகின்றன. அவற்றுக்கு முதலிடம் தந்து சைவ இறையியலை ஆராய்வதே பொருத்தமாகும்.

(ஆ) ஒருவனே இறைவன்

சைவம் ஓரிறைக்கொள்கை படைத்ததொரு சமயம் ஆகும். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற முழக்கம் சைவ நூல்களுள் பழையதான திருமந்திரத்தில் எழுகின்றது. உலகம் அனைத்தையும் படைத்து நிறுத்திக் காப்போனாய் ஓர் இறைவன் இருக்கின்றான் என்ற தெளிவு சைவத்தில் செறிந்து கிடக்கின்றது. 'சிவன்' என்னும் சொல்லால் முழு முதற் செம்பொருளான இறைவனே குறிக்கப்பெறுகின்றான். திரிமூர்த்திகளுள் ஒருவனான அரன்— சிவன், சைவத்தின் செம்பொருள் அல்லன். சைவம் வழுத்தும் இறைவன் மூவர்க்கும் முதல்வோன் ஆவான்.

'தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி'

என இறைவனை வாழ்த்துகின்றார் மாணிக்கவாசகர். எந்நாட்டவர்க்கும் இறைவனாயிருப்போனே இங்குத் தென்னாட்டில் சிவனென

அறியப் பெறுகின்றான். சிவன் என்னும் அவ்விறைவன் யாவர்க்குமே உரியன் என அவர் கூறுகின்றார்.

(1) அனைத்துங் கடந்தோன்

ஓரிறைக் கொள்கைத் தெளிவுபெற்ற சைவர் இறைவனை அனைத்துங் கடந்தவனாகப் போற்றுவர். 'கந்தழி' என்னும் தொல்காப்பியச் சொல், அவன் கட்டுகள் அற்றநிலையில் இருப்போன் என்பதைச் சுட்டும். அவனைக் 'காலம் மூன்றையும் கடந்த கடவுள்' என்பர் பட்டினத்தடிகள்.

அவனைப்பற்றிய உரைகளையும் அவன் கடந்து நிற்கின்றான்.

'உரைக்கும் கடந்திங் குணர்வரியான்'

என்பர் அப்பர்.

இங்ஙனம் தனிநிலையில் உள்ள இறைவன் 'பிறவா யாக்கைப் பெரியோன்' எனப் போற்றப்படுகின்றான் (சிலப்பதிகாரம்).

'பிறப்பாதி யில்லான்'—சம்பந்தர்.
'பிறவாதே தோன்றிய பெம்மான்'—அப்பர்

திருமாலும் பிரம்மனும், பிற தெய்வங்களும் பிறப்பிறப்புடையவராகவே கொள்ளப்படுகின்றார்கள்.

'நூறுகோடி பிரம்மர்கள் நொந்தினார்
ஆறுகோடி நாராயண ரங்கனே
ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரன்
ஈறி லாதவன் ஈசன் ஒருவனே'

என்கிறார் திருநாவுக்கரசர்.

ஈசன் என்னும் சிறப்புப் பெயரால் குறிக்கப்பெறும் சிவன்,

'தாயுமிலி தந்தையிலி தான்தனியன்'

என வாதவூரரால் வாழ்த்தப் பெறுகின்றான்.

(2) அறிதற்கரியோன்

அனைத்துங் கடந்து அதியுயர்ந்த நிலையில் இருக்கும் இறைவன் அறிதற்கு அரியவன் ஆவான்.

'தெரிவரி தாகிய தெளிவே'

என்றும்,

'நினைப்பரிய தனிப்பெரியோன்'

என்றும்,

'பாரார் விசும்புளார் பாதாளத்தார்
புறத்தார் ஆராலுங் காண்டற் கரியான்'

என்றும் அவனைக் குறிப்பர் மாணிக்கவாசகர்.

'அரிய நான்மறை அந்தணர் ஓவாது
அடிபணிந்தறிதற் கரியானை' . . .

என்பது சுந்தரர் வாக்கு.

'இன்ன தன்மையன் என்றறி யொண்ணு எம்மான்'

என்றும் அவர் கூறுவார்.

இங்ஙனம் அனைத்துங் கடந்தோனுய் அறிதற்கரியனுய் இருக்கும் இறைவன் தூரத்துப் பொருளாக மட்டும் வைத்துப் போற்றப் பெறவில்லை. எத்தனை உயர்ந்தோனுய் தனியனுய் அவன் இருந்திடினும் உலகு, உயிர் ஆகியவைமாட்டு அவன் தொடர்புகொண்டு அவற்றுள் உள்ளியங்கியாகவும் இருக்கின்ருன் என்றும் சைவ பக்தர்கள் அறிந்துணர்ந்து ஓதுகின்ருர்கள். சைவத்தில் இறைவனின் கடப்புத்தன்மையோடு (Transcendence) இருப்புத் தன்மையும் (Immenance) வலியுறுத்தப் பெறுகின்றது.

(3) எங்கும் நிறைந்தோன்

கடவுள் என்னுஞ் சொல் இறைவன் அனைத்தையுங் கடந்தவன் என்ற உண்மையை உணர்த்தும். அங்ஙனமே இறைவன் என்னுஞ் சொல் அவன் எங்கும் தங்கி நிற்கின்ருன் என்னும் உண்மையை எடுத்தியம்புகின்றது. உலகும் உயிர்களும் அனுதியானவை என்றும் அழிய முடியாதவை என்றும் சைவம் கூறுகின்றது. இறைவனைப் போன்றே அனுதியுடையனவாக அவை இருந்தாலும் இறைவனின் முன் அவை உயிரற்றவையாகவே கருதப்படும். அவற்றின் ஆற்றல்—அறிவு—யாவும் இறைவனின் பேராற்றல், பேரறிவு ஆகியவைமுன் நிற்றல் ஆகாது. அவற்றுக்கு வேருயும் தானுயும் உடனுயும் இருந்து இறைவன் அவைகளை இயக்குவிக்கிருன் என்பது சைவ பக்தி இலக்கியத்திலும் மெய்யறிவியல் நூல்களிலும் ஒருமுகமாகக் கூறப்படுகின்றது.

'ஆருர்சுவை ஏழோசையோடு
எட்டுத்திசை தானுய்
வேருயுடன் ஆனுனிடம் . . .'

என்பது சம்பந்தர் பாடல். இதனையே,

'அவையே தானே யாய்இரு வினையிற்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே'

என்று சூத்திரமமைத்துக் கூறுகின்றார் மெய்க்கண்டார் (சிவஞான போதம், சூத்திரம் 2).

உயிர்-உலகு ஆகியவற்றோடு இறைவனுக்குள்ள இத்தொடர் பினைச் சைவப் பெரியார்கள் அகரத்துக்கும் பிற எழுத்துகட்கும் இடையே உள்ள தொடர்பு போன்றது எனக் கூறுவார்கள்.

'அகர முதல எழுத்தெல்லாம்
ஆதிபகவன் முதற்றே யுலகு'

என்னும் வள்ளுவர் குறள் ஈண்டு உன்னுதற்கு உரியதாகும்.

அவரைத் தழுவியே சுந்தரரும்
'அகர முதலின் எழுத்தாகி நின்றாய்'

எனப் பாடுகின்றார்.

அகரம் பிற எழுத்துகளினின்றும் தனித்தும் அவற்றோடு ஒன்றியும் உடனும் இயங்குந் தன்மை கருத்துக்கு உரியதேயாகும்.

'உலகெலா மாகி வேறாய் உடனுமாய்'

என்ற மெய்கண்ட சாத்திர வாசகத்தை உமாபதி சிவாசாரியார் தமது 'திருவருட்பய'னில்,

'அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில்இறை நிற்கும் நிறைந்து'

என்று விளக்குகின்றார். சிவனின் தன்னியல்புபற்றிப் பேசும்போது அவன் 'அறிவுப்பொருள்' 'சித்'தாக இருப்போன் என்பது மனத்திற்கொள்ளப்படல் வேண்டும்; அகரம் பிற எழுத்துக்களுக்கெல்லாம் உயிராக நிற்பதுபோல், அனைத்து உயிர்களுக்கும் அறிவுக்கறிவாகி எங்கும்—சடசித்துப் பொருள்களிலெல்லாம் இறைவன் நிறைந்து நிற்கின்றான் எனச் சைவம் கூறுகின்றது.

'அங்ஙனமாயின், உலகம் கடவுளா?' 'உயிர் கடவுளா?' என்ற வினக்கள் எழலாம். சைவம் இதற்கு 'ஆம்' 'இல்லை' என இரண்டு விடைகளைத் தருகின்றது. உலகிலும் உயிர்களிலும் இறைவன் நீக்கமற நிறைந்திருத்தலால் 'ஆம். அவை (கலப்பால்) கடவுள்தாம்' என்று சைவம் கூறும். உலகம் சடப்பொருள் ஆதலாலும் உயிர்களுக்கு அறியாமை உண்டு ஆதலாலும், 'அவை (பொருளால்) கடவுளல்ல' என்றும் சைவம் விடைதரும்.

ஆகாயம் என்னும் சூக்கும பூதம் காற்று, தீ, நீர், மண் ஆகிய நான்கு தூல பூதங்களிடை நீக்கமற நிறைந்திருத்தல், அருவப் பொருட்கள் ஒரே இடத்தில் இருப்புப்பெறுதல் கூடும் என்பதனை எடுத்துக்காட்டுகின்றது. அங்ஙனமே இறைவன் உலகு-உயிர் ஆகியவற்றில் உறைகிறான் என்பர் சைவப் பெரியார்.

மரத்தால் செய்யப்பட்ட யானை ஒன்றை இருவர் காண்கின்றனர். ஒருவன் மரத்தைப்பற்றிய உண்மைகளை அறிந்தவன். மற்றவன் யானை வடிவத்தில் நாட்டம்கொண்டவன். முன்னவன் மர யானையைப் பார்த்து, 'இது சந்தன மரமன்று, வேறு மரம்' என்கின்றான். பின்னவன், 'இந்த யானையின் துதிக்கை சரியாக அமையவில்லை' என்கிறான். முன்னவன் உள்ளத்தில் மரம் உள்ளது; யானை இல்லை. பின்னவன் உள்ளத்தில் யானை உள்ளது; மரம் இல்லை. இங்ஙனமே உலகும் சிவமும் காட்சிதரும் எனக் கூறுகின்றார் திருமூலர்.

'மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே'

என்பது அவர் பாடல்.

இந்த நோக்குடனேயே இறைவனை இயற்கையிடத்தும் உயிர்கள் மாட்டும் சைவ அடியார்கள் கண்டு தங்கள் அனுபவங்களைக் கூறுகின்றார்கள்.

'இன்றெனக் கருளி இருள்கடிந்துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றும்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே'

என்பது திருவாசகப் பாடல். கீழ்க்காணும் பாடல்களும் தொடர்களும் இங்குக் கருதத்தகுந்தவை ஆகும்.

'ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி'
'நள்ளும் கீழுளும் மேலுளும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும் போல்நின்ற எந்தையே'
'மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க'

'வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனன தென்றவ ரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே'

—மாணிக்கவாசகர்

2

'களியாய்க் கடலாய்க் கலனாய் நிலனாய்க்
கலந்த சொல்லாகிப் பலவாய்க் காற்றாய்'
'மறைகளாயின நான்கும்
மற்றுள பொருள்களும்
எல்லாம் . . . ஆய . . . ஆதி' —சுந்தரர்

'கடுவெளியோ டோரைந்தும் ஆனார் போலும்'
'விண்ணொடு மண்ஆகாசம் ஆயினானை'
'மனத்தகத்தான் தலைமேலான் வாக்கிலுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடும் தொண்டர் இனத்தகத்தான்...'
—அப்பர்

'எண்ணு யிரத்தாண்டு யோக மிருப்பினும்
கண்ணு ரமுதினைக் கண்டறி வாரில்லை
உண்ணாடி யுள்ளே ஒளிபெற நோக்கிடில்
கண்ணாடி போலே கலந்திருந் தானே' —திருமூலர்

'பார்க்கின்ற இடமெங்கு மொருநீக்கமற நிறைகின்ற
பரிபூரணானந்த . . .'
'. . . பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி' —தாயுமானார்

'எட்டுத் திசையும் பதினாறுகோணமும் எங்கும் ஒன்றாய்
முட்டித்ததும்பி முளைத்தோங்கும் சோதியை'
—பட்டினத்தடிகள்

'ஆதியாய் நடுவு மாகி அளவிலா அளவு மாகிச்
சோதியாய் உணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகி . . .'
—சேக்கிழார்

இங்ஙனம், அனைத்துக்கும் மேம்பட்டோனாகிய இறைவன் யாவினும் கலந்துறைகின்றான் என்னும் கருத்தினைக் கூறி மகிழாத சைவக் கவிஞர்களோ பக்தர்களோ இல்லை எனலாம். இறைவனின் உயர் பர நிலையையும், உலகு-உயிர் ஆகியவற்றில் ஒன்றியுறையும் நிலையையும் எடுத்தியம்ப அவர்கள் எடுத்தாளும் சொற்களும் தொடர்களும் பலப்பல. அவற்றுள் மிகச் சிறந்து நிற்பது ஒளி என்னுஞ் சொல். இறைவன் 'பரவொளி' 'உள்ளொளி' எனப் பல்லாயிரம் முறை அவர்கள் பாடல்களில் குறிப்பிடப் பெறுகின்றான். இறைவன் அனைத்துங் கடந்தோன், எங்கும் நிறைந்தோன் என்னும் அடிப்படைத் தெளிவினின்றும் 'அவன் ஒளி' என்ற கொள்கை எழுகின்றது.

(4) ஒளியாய்த் திகழ்வோன்

அனைத்திருளும் நீக்கும் ஆற்றல் படைத்த இறைவன் பரவொளியாய்-பரஞ்சோதியாய்-பேரொளியாய்ப் போற்றப் பெறு

கின்றான். அவன்மாட்டு விளங்கும் ஒளி கதிரவனொளி போன்றது. உயிர்களிடம் காணப்பெறும் ஒளி கண்ணொளி போன்றது. கீழ்க் காணும் தொடர்களும் வரிகளும் கருத்துக்கு உரியவை ஆகும்.

'அமுதூறு பரஞ்சுடர்'
'அரும் பெரும் சோதி'
'ஆதிமுதற் பரமாய பரஞ்சுடர்'
'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதி'
—மாணிக்கவாசகர்

'அண்டத்தார்க் கறிவொண்ணாது
அப்பால் மிக்க சோதியனை'
'அளவில் சோதி மின்னவன் காண்'
'உலகங்கட் கொரு சுடர்'
'உலகோம்பும் ஒண்சுடரே'
'எண்டிசைக்கும் ஒண்சுடராய்
நின்றாய் நீயே'
'பாரொளியை' —அப்பர்

'அமரர்க் கரிய சோதியை'
'எண்டிசைக் கொருசுடர்'
'சோதியிற் சோதி எம்மான்'
'மாசறு சோதியன்'
'யார்க்கும் சொல்ல ஒண்ணாச்சோதி' —சுந்தரர்

'அருட்பெருஞ்சோதி' —வள்ளலார்

இத்தொடர்கள் இறைவன் பரவொளியாய்—பாரொளியாய்—பேரொளியாய் உளன் என்பதை எடுத்தியம்புகின்றன. அவ்விறைவன் உலகு-உயிர் ஆகியவற்றுக்கு உள்ளொளியாகவும் இருந்து இருள் நீக்குகின்றான் என்பதும் பக்தர்களின் அனுபவ மொழியாகும். கீழ்வரும் தொடர்களை உன்னுவோம்.

'உலகத் துயிர்க் கெல்லாம் ஒளியானை' —சுந்தரர்

'உள்ளத்துள் ஒளியுமாகும் கோவே'
'உளமெலாம் ஒளியாய்'
'பளிங்கின் நிழலுட் பதிந்த சோதியானை'
'மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்' —அப்பர்

'உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே'
'எங்கும் நிறைந்தமு தூறு பரஞ்சுடர்'
'ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே'
'வஞ்சப் புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின்றென்னுள் எழு பரஞ்சோதி' —மணிவாசகர்

'கண்ணொளியே மோனக் கரும்பே கவலையறப்
பண்ணொளிக்கும் உள்ளொளியாம் பான்மையினை . . .'
—தாயுமானார்

'இறைவன் ஒளியே' என்ற தெளிவு சைவத்தில் சிறந்து நிற்கின்றது. அவனுடைய இயல்பையும் தன்மையையும் உள்ளவாறே உணர்தற்கு அவன் ஒளிவடிவினன் என்ற கொள்கை துணை செய்தல் தெளிவு. அவன் தன்மையை அறிதற்கு ஏதுக்களும் மெய்யறிவியல் வாத-விவாத விளக்கங்களும் முக்கியம் எனக் கருதுதல் கூடாது. சுடர்விடும் சோதியாக அவன் தன்னை வெளிப்படுத்தி நிற்கின்றான், இருளகற்றுகின்றான் என்ற தெளிவே முக்கியம் என்கின்றார் ஆளுடைய பிள்ளையார்:

'ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா; சுடர்விட்டுளன் எங்கள் சோதி'
—சம்பந்தர்

இனி, உலகிற்கும் உயிர்கட்கும் ஓங்கு பரவொளியாகவும் உள்ளுறு சோதியாகவும் விளங்கும் இறைவன் அவற்றோடு எத்தகைய தொடர்பில் பிணைப்பில் நிற்கின்றான் என்பதனையும் சைவம் சிறப்புற எடுத்துக்காட்டுகின்றது. உள்பொருளாய் (சத்) அறிவுப் பொருளாய் (சித்) அரியனாய் பெரியனாய் உள்ள இறைவன் உயிர்களுக்கு அண்மியனாய்-அடியார்க்கு எளியனாய் அவர்களோடு நேர்த்தொடர்பு கொள்பவனாய் உள்ளான் என்பதையும் பலபட விளக்குகின்றது.

(5) அன்பே சிவம்

'அன்பே சிவம்' என்னும் தொடரில் சைவத்தின் கடவுட் கொள்கை முழுவதும் அடங்கும் எனக் கூறலாம்.

'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்திருந் தாரே'

என்பது சைவ நூற்களில் மிகப் பழமையான திருமந்திரத்தில் திருமூலர் கூறும் அரிய உண்மை ஆகும். உண்மை அறிவு இல்லாதவர்கள் தாம் அன்பு வேறு; சிவம் வேறு என்பார்கள். அன்பே சிவமாக இருப்பதை அறிந்த பிறகு எல்லாரும் சிவமாகவே இருப்பார்கள் என்பது இப்பாடலின் கருத்தாகும்.

'அன்பினுள் ளான்புறத் தானுட லாயுளான்
முன்பினுள் ளான்முனி வர்க்கும் பிரானவன்
அன்பினுள் ளாகி யமரு மரும்பொருள்
அன்பினுள் ளார்க்கே யணைதுணை யாமே'

என வரும் அவர் பாடலும் கருதத் தக்கதாகும். 'அரும் பொரு' ளாக உள்ள இறைவன் அன்பில் உள்ளான் என்பதனையுணர்ந்த நிலையில்தான் தேவாரத் திருவாசகப் பாசுரங்கள் எழுந்தன; திருமுறை வைப்பிலுள்ள பிற நூல்கள் பாடப்பட்டன. தாயுமானூரும், பட்டினத்தடிகளும், குமரகுருபரரும், வள்ளலாரும் பிறரும் இறைவனை அன்பு வடிவினனுக—அடியாரோடு நேர்த் தொடர்புகொண்டு தன் அன்பைப் பொழிபவனுகவே கண்டார்கள். அந்த அன்புக்கு ஆட்பட்டுத் தலைவணங்கி அதன் திறத்தை வியந்து போற்றுகின்றார்கள். மணிவாசகர்:

'மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடை அன்பே'

எனப் பாடித் தம் உள்ளத்தைத் திறந்து அன்பே என இறைவனை விளிக்கின்றார். இறைவனின் அன்பைச் சுவைக்கச் சுவைக்க அவன் மாட்டு அடியவர்க்கு அன்பு சுரந்துகொண்டே இருக்கும். அவனேடு அன்புப் பிணைப்பு இறுக இறுக அவனே அவர்க்கு அனைத்துமாகி விடுகின்றான்.

'அப்பன்நீ அம்மைநீ ஐயனுநீ
அன்புடைய மாமனு மாமியுநீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளுநீ
ஒருகுலமுஞ் சுற்றமுமோ ரூருநீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய்நீ
துணையாயென் னெஞ்சந் துறப்பிப்பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்துநீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன்நீயே'

என உருகிப் பாடுகிறார் அப்பர்.

'அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில் புகும் அரசே
அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்தபே ரொளியே
அன்புரு வாம்பர சிவமே'

என அன்பில் தவழ்ந்திழையும் இறைவனை வாழ்த்தி அவ்வன்பில் மூழ்கித் தம்மையே மறக்கின்றார், வள்ளலார்.

'அன்பைப் பெருக்கி எனதாருயிரைக் காக்க வந்த
இன்பப் பெருக்கே இறையே பராபரமே!'

எனப் பாடுகின்றார் தாயுமானவர்.

கடவுளிடம் அடியார்கள் காண்கின்ற இவ்விறையன்பின் தன்மையும் திறமும் ஆய்தற்குரியவை. இதன் ஆற்றலைச் சிவனடியார்கள் வியந்து போற்றுகின்றார்கள். இறையன்பு பொங்கித் ததும்பிப் பாய்ந்தெழுந்து ஈர்க்கும் தன்மையது என்பதனை அவர்கள் ஒருமுகமாகக் கூறுகின்றார்கள். அதன் துடிப்பும், வேகமும் எத்தகையன, அது வழங்கும் இன்பமும் பேறும் எப்பேர்ப்பட்டவை என்பவைகளை அடியார்களின் பக்திப் பாசுரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

இறையன்பு ஆட்கொள்ளும் அன்பு என்ற கருத்து—அனுபவ விளக்கம்—சைவ நூல்களில் காணக்கிடக்கின்றது. தனி மனிதனிடம் அது செலுத்தப்பெறும் மாண்பினை வியந்து பாடுகின்றார்கள் அடியார்கள். 'என்னையும்' 'எளியேனையும்' 'நாயேனையும்' 'கடையேனையும்' இறைவன் ஆண்டுகொண்டான் எனக் கூறும் தேவார—திருவாசகப் பாடல்கள் நெஞ்சைத் தொடுபவை ஆகும்.

'வஞ்சகப் புலையனேனை வழியறத் தொண்டிற் பூட்டி
அஞ்சலென் றாண்டு கொண்டாய் அதுவுநின் பெருமையன்றே'

என்றும்,

'நாயினுங் கடைப்பட்டேனை நன்னெறி காட்டி யாண்டாய்
ஆயிரம் அரவ மார்த்த அமுதனே அமுதமொத்து
நீயுமென் நெஞ்சினுள்ளே நிலவினாய் நிலவிநிற்க
நோயவை சாருமாகில் நோக்கிநீ அருள்செய்வாயே'

என்றும் இறைவன் தம்மை ஆட்கொண்ட மாண்பினைச் சொல்லிக் காட்டுகிறார், அப்பர். இறையன்புக்கு ஆட்பட்ட அனுபவத்தை நினைந்து நினைந்து மகிழ்ந்தவர் மாணிக்கவாசகர்.

'அன்பினால் அடியேன் ஆவியோடாக்கை
ஆனந்தமாய்க் கசிந்துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யானிதற் கிலனோர் கைம்மாறு
ஆவியோடாக்கை புரைபுரை கனியப்
புகுந்து நின்றுருகிப்
பொய்யிருள் கடிந்த மெய்ச்சுடரே'

என்று அவர் உருகிப் பாடுகின்றார்.

'என்னைநின் அடியானுக்கினுய் போற்றி'

'கட்டறுத்தெனை யாண்டு கண்ணுர நீ
றிட்ட அன்பரோ டியாவரும் காணவே
பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டினே டிரண்டும் அறியேனையே'

'கடையேனைத் தொண்டாகக் கொண்டருளும் கோகழி
எங்கோமாற்கு நெஞ்சமே, உண்டாமோ கைம்மாறுரை'

'நான்ஆர் என்உள்ளம்ஆர், ஞாலங்கள்ஆர்,
என்னை யார் அறிவார்
வானோர் பிரான் என்னை ஆண்டிலனேல்...'

என்றெல்லாம் வரும் அவர் திருவாசக மொழிகள் இறையன்பு ஆட்கொள்ளும் அன்பு என்பதைப் பலபட விளக்கிக் காட்டுகின்றன.

'நேசத்தினுல் எனையாண்டு கொண்டார்'

என இவ்வனுபவத்தைக் கூறுவார் சுந்தரர்.

'மண்ணின்மேல் மயங்கிக் கிடப்பேனை
வலியவந்தெனை ஆண்டுகொண்டானே'
'ஆண்டவன் ஆண்டவன் ஆமாத்தூரையும்
என்னைம்மாட் பூண்டவன் பூண்டவன்'

'பொய்யே செய்து புறம்புறம்பே திரிவேன் தன்னை போகாமே
மெய்யே வந்திங் கெனையாண்ட மெய்யா!'

எனப் பலப்பல தொடர்களால் ஆட்கொள்ளும் இறையன்பின் திறத்தை அவர் வியந்து பாடுகிறுர்.

வள்ளலார் பாடல்கள் பலவும் அவர் இறைவனுல் ஆட்கொள்ளப்பெற்ற மாண்பினை எடுத்தோதுகின்றன:

'......................என்னை
ஆண்டாறு மூன்றுண்டில் ஆண்டுகொண்ட
அருட்கடலே என்உள்ளத் தமர்ந்த தேவே'

'ஏதும்ஒன் றறியாப் பேதையாம் பருவத்
தென்னைஆட் கொண்டெனை உவந்தே
ஓதும்இன் மொழியால் பாடவே பணித்த
ஒருவனே...'

'ஆதியிலே எனைஆண்டென் அறிவகத்தே அமர்ந்த
அப்பாஎன் அன்பேஎன் ஆருயிரே அமுதே'

'அருட்சோதித் தெய்வமெனை ஆண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற தெய்வம்...'

போன்ற அடிகள் குறிப்பிடத்தகுந்தவை ஆகும்.

இங்ஙனம் அன்பால் ஆட்கொள்கின்ற இறைவனை ஆண்டு கொண்டவனாக — உடையோனாக — வல்லவனாக மட்டுமல்லாமல் இனியவனாகவும் காண்கின்றார்கள் சைவ அடியார்கள். இறைவனைக் கரும்பே, தேனே, அமுதே, கன்னலே என்றெல்லாம் அடியார்கள் பாடும் பாடல்கள்தாம் எத்தனை! இறையன்பு இனிக்கும் அன்பு—தெவிட்டாத இன்பத்தை என்றென்றும் ஊட்டுவது என்பது ஒருமுகமாகப் பக்தர்களின் பாடல்களில் கூறப்படுகின்றது.

'கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறிநின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெம்மான்'
'நினைத் தொறுங், காண் தொறும், பேசும் தோறும் எப்போதும்
அனைத்தொலும் புள்நெக ஆனந்தத்தேன் சொரியுங்
குனிப்புடையான்'
'உன்னை உள்குவார் மனத்தில்
உறுசுவை யளிக்கும் ஆரமுதே'
'தேனாய்இன் அமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்'

போன்ற திருவாசகத் தொடர்கள் இறையன்பின் இனிப்புத் தன்மை எத்தகையது என்பதைக் கேட்பார் செவியிலும் சிந்தையிலும் சுவையூறும் வண்ணம் எடுத்துக்காட்டுகின்றன.

'அடைந்தவர்க் கமுதாயிடுவானை'
'எழுமையும் மனக்கினியவன்'
'கற்ற கல்வியிலும் இனியானை'
'பண்ணிடைத் தமிழொப்பாய்'
'பேசினாற் பெரிதும் இனியானை'

போன்றவை சுந்தரரின் தேன்மொழித் தொடர்கள் ஆகும்.

'தேனினும் இனியர் பாலன நீற்றர்
தீங்கரும்பனையார்...'

என்பர் சம்பந்தர்.

'பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப்
பக்கம்நின்று கேட்டாலும் பரிந்துள் உணர்ந்தாலும்
ஈர்த்தாலும் பிடித்தாலும் கட்டியணைத்தாலும்
இத்தனைக்கும் தித்திக்கும் இனித்தசுவைக் கரும்பே
வேர்த்தாவி மயங்காது கனிந்தநறுங் கனியே
மெய்ம்மையறி வானந்தம் விளங்குமருள் அமுதே
தீர்த்தாஎன் நண்பர்எலாம் தொழப்பொதுவில் நடிக்கு
தெய்வநடத் தரசேஎன் சிறுமொழிஏற் றருளே'

என்னும் வள்ளலாரின் பாடலைப் படித்தாலும் கேட்டாலும் உள்ளத்தில் இன்பத்தேன் ஊறாதிருக்குமோ!

இனிக்கும் தமிழில் இறைவனை இனியவராய்—அமுதின் சுவை படைத்தவராய்—எத்திக்கும் தித்திப்பவராய்க் காட்டும் சைவ சமயப் பாடல்கள் ஆயிரமாயிரம் உள்ளன. இறைவன் இனியவர் என்ற அடிக்கருத்தைக் கொண்டுதான் அகப்பொருள் துறையிலும் அடியார்கள் பாடல்கள் அமைத்து அவர் அன்பை விளக்க முற்பட்டார்கள்.

'உன்னை உசப்பன் குயிலே
உன்துணைத் தோழியும் ஆவன்...
பெருந்துறை மேய சீர்ப்புயங்கன்
வரக் கூவுவாய்'

'சூடுவேன் பூங்கொன்றை, சூடித் திரள்தோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்
றூடுவேன், செவ்வாய்க் குருகுவேன், உள்ளுருகித்
தேடுவேன்; தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன், பேர்த்து மலர்வேன்'

என்பன போன்ற பாடல்கள் வாசகரின் அகப்பொருள் பாக்களுக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும். வாசகரைப் போன்றே வள்ளலாரும் தலைவி பாவத்தில் நின்று இறைவனைத் தலைவனுகக் கண்டு ஆனந்தத் தழுந்துகிறுர்.

'காண இனியார் என் இரண்டு கண்கள் அனையார் கடல் விடத்தை
ஊணின் உகந்தார் உயர்ந்தார்நல் ஒன்றித் தியாகப் பெருமானுர்
மாணவீதி வருகின்றுர் என்றுர் காண வரும்முன்
நாண எனைவிட்டு என் மனந்தான் நயந்து அங்கவர் முன் சென்றதுவே'

'அருட்சோதித் தலைவர்எனக்கு அன்புடைய கணவர்
அழகியபொன் மேனியைநான் தழுவிநின்ற தருணம்
இருட்சாதித் தத்துவங்கள் எல்லாம் போயினவால்
எங்கணும்பேர் ஒளிமயமாய் இருந்தன ஆங்கவர்தாம்
மருட்சாதி நீக்கிஎனைப் புணர்ந்ததொரு தருணம்
மன்னுசிவா னந்தமயமாகி நிறைவுற்றேன்
தெருட்சார்பில் இருந்தோங்கு சமரச சன்மார்க்கத்
திருச்சபைக்கண் உற்றேனென் திருக்கணவர் உடனே'

என்பன போன்ற பாடல்கள் பலவற்றை வள்ளலார் இயற்றியுள்ளார்.

இனி, ஆட்கொள்ளும் இறையன்பு அணைக்கும் அன்புமுமாகும் என்பதனை சைவப் பெரியார்களின் பாக்கள் விரிவாக எடுத்துக்

காட்டுகின்றன. அடியார்கள் தங்கள் பிழைகளை யுணர்ந்து அவற்றை இறைவனிடம் அறிக்கை செய்து மன்றுட்டு நிகழ்த்தும் போது இறையன்பு அவர்களுக்கு அணைக்கும் அன்பாக—குற்றங்களை மன்னித்தருளும் பேரன்பாகப் பாலிக்கப் பெறுகின்றது.

இறைவனின் திருமுன்றில் அடியார்க்கு எத்தனை நடுக்கம்! செய்த பாவங்கள் எத்தனை கொடியவை, செய்யாதொழிந்த நலன்கள் எத்தனை எத்தனை என்ற உணர்ச்சி அவர்களுக்கு ஏற்படுகின்றது. அந்நிலையினின்றும் வெளிப்படும் அறிக்கைப் பாடல்கள் அவர்கள் நெஞ்சைப் பிளந்துகொண்டு வெளிவருகின்றன. கண்ணீரில் தோய்ந்தெடுத்த பாடல்களாய் அவை முகிழ்க்கின்றன. மனத்திருப்பத்தின் மாண்பை அவை எடுத்துக்காட்டுகின்றன. எடுத்துக்காட்டுக்குச் சில பாடல்களைக் காண்போம்:

'ஆமாறுன் திருவடிக்கே
அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன்
புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான்நின் திருக்கோயில்
தூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன்
சதுராலே சார்வானே'
'யானே பொய்என் நெஞ்சும்
பொய்என் அன்பும் பொய்
ஆனல் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே...' —மணிவாசகர்

'குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும் பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன் கோலமாய
நலம் பொல்லேன் நான்பொல்லேன் ஞானியல்லேன்
நல்லாரோ டிசைந்திலேன் நடுவேநின்ற
விலங்கல்லேன் விலங்கல்லா தொழிந்தேனல்லேன்
வெறுப்பனவும் மிகப்பெரிதும் பேசவல்லேன்
இலம்பொல்லேன் இரப்பதே ஈய மாட்டேன்
என்செய்வான் தோன்றினேன் ஏழையேனே!' —அப்பர்

'அழுக்குமெய் கொடுன் திருவடி யடைந்தேன்
அதுவும்நான் படப்பால தொன்றுனல்
பிழுக்கைவாரியும் பால்கொள்வார் அடியன்
பிழைப்பனுகிலும் திருவடிப் பிழையேன்

வழுக்கி வீழினும் திருப்பெயரல்லால்
மற்றுநான றியேன் மறுமாற்றம்
ஒழுக்க என்கணுக் கொருமருந்து
உரையாய் ஒற்றியூரெனும் ஊருறைவானே.'
—சுந்தரர்

'தடித்தவோர் மகனைத் தந்தையீண் டடித்தால்
தாயுடன் அணைப்பள்; தாயடித்தால்
பிடித்தொரு தந்தை யணைப்பன்இங் கெனக்குப்
பேசிய தந்தையும் தாயும்
பொடித்திரு மேனி அம்பலத் தாடும்
புனிதநீ யாதலால் என்னை
அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும்
அம்மையப்பா இனி ஆற்றேன்!' —வள்ளலார்

'கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சிஏகம்பனே!'
—பட்டினத்தார்

இத்தகு முறையீடுகளுக்கு இரங்கும் வகையில் இறையன்பு அணைக்கும் அன்பாக வெளிப்படுகிறது. குறை தீர்வும் மன்னிப்பும் புதுவாழ்வும் பெருவாழ்வும் பெற்றுக்கொண்ட நிலையில் அடியார்கள் இறையன்பை வியந்து போற்றுகின்றார்கள்.

'மண்ணதனிற் பிறந்தெய்த்து மாண்டுவிழக் கடவேனை
எண்ணமிலா அன்பருளி எனையாண்டிட்டு என்னையுந்தன்
தண்ண வெண்ணீறு அணிவித்துத் தூய்நெறியே சேரும்
வண்ணம்
அண்ணல் எனக்கு அருளியவாரார் பெருவார்...'
'அருள நனி சுரக்கும் அமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க'
என முழங்குகிறார் வாதவூரர்.

'அறிந்திலை யோஎன் பாடெல்லாம் என்றே
அழைத்தனன் அப்பனே என்னை
எறிந்திடா திந்தத் தருணமே வந்தாய்
எடுத்தணைத் தஞ்சிடல் மகனே
பிறிந்திடேம் சிறிதும் பிறிந்திடேம் உலகில்
பெருந்திறல் சித்திகள் எல்லாம்
சிறந்திடல் உனக்கே தந்தனம் எனஎன்
சென்னிதொட் டுரைத்தனை களித்தே'

'போற்று கின்றவென் புன்மை யாவையும்
பொறுத்த நின்பெரும் பொறுமை போற்றியென்
ஆற்றுவேன் உனக்கு அறிகிலேன் எனக்கு
அறிவு தந்தபேர் அறிவ போற்றிவான்
காற்று நீடழல் ஆதி ஐந்துநான்
காணக் காட்டிய கருத்த போற்றிவன்
கூற்றி வைத்துநீர் தழுவி லாவுருக்
கொள்ள வைத்தநின் கொள்கை போற்றியே'

என வள்ளலார் இறையன்பில் இழைந்தோடும் பொறுமையும் மன்னிப்பருளும் மாண்பும் எத்தகையன என்பதை எடுத்துக் காட்டுகிறார்.

அணைக்கும் இறையன்பின் ஆழத்தைக்காட்ட திருவிளையாடற் புராணத்தில் வரும் 'மாபாதகந் தீர்த்த படலம்' ஒரு சிறந்த சான்று ஆகும்[1]. தந்தையைக் கொன்று தாயைப் புணர்ந்தவன் ஒருவன் சில காலம் கழிந்தபின்னர் நல்லோர் இணக்கத்தால் தான் செய்த பாவத்தின் கொடிய தன்மையை உணர்கின்றான். அலறுகின்றான். நெஞ்சு நெக்குருகக் கண்ணீர்விட்டு அரற்றுகின்றான். தனக்குக் களைகண் — அடைக்கலம் ஆண்டவன்தான் என்பதையுணர்ந்து இறைவனிடம் தன் பாவத்தை அறிக்கையிடுகிறான்; மனத் திருப்பம் காண்கிறான். இறைவன் அவனுக்கு மன்னிப்பருளி அவனை அடியனாய் ஏற்றுக்கொள்கிறார்.

'ஐயவிக் கொடியோன் செய்த பாவத்துக்களவில் காலம்
வெய்ய நாலேழுகோடி நரகிடை வீழ்ந்தானேனும்
உய்வகை யிலாத பாவியினுக் கென்னுய்யுந் தேற்றம்
செய்வகையென்று கேட்பச் செங்கண்மால் விடையோன்
செப்பும்.'

'அடுபழியஞ்சா நீசராயினும் நினைக்கினச்சம்
படுகுழியஞ்சா செய்தபாதகத் தொடக்குண்டெங்கும்
விடுவகையின்றி வேறுகளைகணுமின்றி வீயக்
கடவனைக் காப்பதன்றோ காப்பென்றான் கருணைமூர்த்தி''
—திருவிளையாடற் புராணம்.

சிவபெருமானின் கண்டம் கருத்ததனைக் கூறும் புராணத்தில் இறையன்பு அன்பர்களின் முறையீட்டுக்கு இரங்குவதோடு நில்லா

---

[1] இக் கதைபற்றித் திரு. வி. க. தமது நூலொன்றில் தரும் சிறு குறிப்புக் கோடற்பாலதாகும்: 'அக்கதையை யான் முதன் முதல் படித்தபோது, அஃது அடங்கியுள்ள பக்கங்களை கத்தரியால் வெட்டிவிட்டேன். நாளடைவில் அக்கதையின் உள்ளுறை எனக்கு விளங்கலாயிற்று, விளக்கத்துக்குக் கருவியாயிருந்தது கிறிஸ்து பெருமான் போதனை.'' உள்ளொளி, பக்கம் 233.

மல் அவர்களுக்கு வரும் துன்பத்தையும் கேட்டையும் தானே ஏற்றுக்கொள்ளும் பெருந்திறம் உடையது என்பது விளக்கப் படுகின்றது.

தேவர்கள் பாற்கடலைக் கடைந்தார்கள். பெரு மலையொன்று அவர்களுக்கு மத்தாகவும் பாம்பொன்று அதில் கட்டும் கயிறாகவும் அமைந்தன. பாற்கடலைக் கடையக் கடைய அதினின்றும் காளவிட விடம் — ஆ ல கா ல ம் — எழுந்தது. அதனைக் கண்ட வானவர் பயந்து ஓடினர். சிவபெருமானிடம் சரண்புகுந்து தங் களுக்கு வருந் துன்பத்தை நீக்கவேண்டுமென்று முறையிட்டனர். பாற்கடலில் மேலெழுந்து வந்த நஞ்சு உலகையே அழித்துவிடும் என்பதைத் தெரிந்துகொண்டு சிவபெருமான் அதனை உண்டார். அதைத் தமது கண்டத்திலேயே நிறுத்தி வைத்துக்கொண்டார். ஆகவே அவரது கண்டம் கறுத்தது. அது நீல நிறமுடையதாயிற்று. பிறர் நலம் பேணித் துன்பத்தைத் தானே ஏற்றுக்கொண்ட சிவ பிரான் 'நீலகண்டர்' என்ற சிறப்புப் பெயர் பெற்றார்.

'நஞ்சே அமுதா நயந்தாய் போற்றி'
'சிற்றுயிர்க் கிரங்கிக் காய்ச்சின ஆலமுண்டாய்
அமுதுண்ணக் கடையவனே''
'வார்த்த நஞ்சயின்று வானோர்க்கு அமுதம்ஈ வள்ளல்
போற்றி''
'ஆலாலம் உண்டிலனேல் அன்றையன்மால் உள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ'

போன்ற திருவாசக அடிகள் கருத்துக்கு உரியவை ஆகும்.

'ஆலமுண்டாய் அமுதுண்ணக் கடையவனே''
'தந்தது உன்தன்னை கொண்டது எந்தன்னை'

என்னும் இரண்டு அடிகளை இணைத்துப் பார்த்து அவ்விணைப்பில் வெளிப்படும் கருத்தினைத் திரு. வி. க. இங்ஙனம் கூறுகிறார்:

'யான் உன் அருளாகிய அமுதம் உண்ண என் பாவமாகிய ஆலத்தை நீ உண்டாய். . .ஆலமுண்டதை எப்பொழுதோ நடந்த தென்று புராணம் கூறுகிறது. அக்கதை ஒரு குறிக்கோளாக நிற்பது. வெறுங்கதைமீது மட்டுங் கருத்துச் செலுத்தலாகாது. அந்நிகழ்ச்சி உயிரிடை ஆங்காங்கே நடந்தவண்ணம் இருப்பது.''[1]

ஆலமுண்டு அமுதருள்வோன் இறைவன் என்ற தெளிவுடன் திரு. வி. க. ஏறெடுக்கும் மன்றாட்டு ஜெபம் ஒன்றும் இங்குக் குறிப்பிடத்தகுந்ததாகும்:

'ஆலாலப் பெருமானே! மதுரை அரசே! மறிகடல் விடமுண்ட வானவா! நாங்கள் உன்னை மறந்தோம்; உன் அருளை

[1] ஆலமும் அமுதமும், பக்கம் 13, 14.

மறந்தோம்; பாவங்களில் புரண்டோம், நாங்கள் குறைபாடுடைய வர்கள்; வழுக்கி வீழ்கிறேம்; என் செய்வோம்! எங்கள் பாவங்க ளெல்லாந் திரண்டு திரண்டு குண்டு மழையாகப் பொழிகின்றன: எரிகிறேம்; எரிகிறேம், உன்னை அடைந்து நிற்கிறேம்; நீ பன்றிக் குட்டிக்குப் பால் கொடுத்தவன்; மாபாதகனுக்கு அருள் செய்தவன். நாரைக்கும் கரிக்குருவிக்கும் விடுதலை அளித்தவன், உன்னடியில் அடைக்கலம் புகுகிறேம். அடைக்கலம்! அடைக்கலம்! ஆண்டருள்க. பொங்கிவரும் யுத்த ஆலத்தை ஒடுக்கியருள்க; புது உலக அமுதைப் பொழிந்தருள்க.'[1]

இறையன்பின் திறம், ஆட்கொள்ளுதலிலும் அணைத்தலிலும் மட்டுமல்லாமல் அருளிலும் வெளிப்படுகின்றது என்பதைச் சைவம் பலபட எடுத்துக்காட்டுகின்றது, இறையன்பு, அருளும் அன்பு. அருள், அன்பின் வழிப்பட்டதாகும், 'அருளெனும் அன்பீன் குழவி' என்பர் திருவள்ளுவர். அன்பின் இயக்கம் அருட் செயலாகப் பரந்து விரிகின்றது. சைவம் இறைவனை ஐந்தொழில் உடையவனுய்க் காண்கின்றது. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகியவை இவனுடைய ஐந்து தொழில்கள் ஆகும். இவை அனைத்தும் சக்தியின் துணைகொண்டு சிவனுல் செய்யப்பெறுபவை. அச்சக்தி அருளேயன்றி வேறில்லை.[2] சிவன் சக்தி; பரமசிவன்—பார்வதி; அம்மை—அப்பர்; அர்த்தநாரீஸ் வரர் ஆகிய இத்தொடர்கள்—சிறப்புப் பெயர்கள் கூறும் பேருண்மை இதுவேயாகும்.

பகலவனும் அவன் கதிரும் போன்று சிவனும் சக்தியும் இணைந் துள்ளனர். சிவன் அருளின்றி இருத்தல் ஆகாது. அங்ஙனமே அருள் சிவனின்றி இருத்தல் கூடாது.

'அருளது சத்தியாகும் அரன்தனக் கருளையின்றித்
தெருள் சிவமில்லை யந்தச் சிவமின்றிச் சத்தியில்லை.
மருளினை யருளால் வாட்டி மன்னுயிர்க் களிப்பன் கண்கட்கு
இருளினை யொளியா லோட்டும் இரவியைப் போலவீசன்.'

எனச் சிவஞான சித்தியாரில் அருணந்தி சிவாசாரியார் கூறுவது இங்குக் கருதத்தகுந்தது ஆகும்.

---

[1] ஆலமும் அமுதமும், பக். 36.
(1943-இல் மதுரையில் நிகழ்த்திய சொற்பொழிவு)

[2] 'அழிப்பினைப் பாற்றல் ஆக்கம் அவ்வவர் கன்மமெலாம்
கழித்திடல் நுகரச்செய்தல் காப்பது கன்மவொப்பில்
தெழித்திடல் மலங்களெல்லாம் மறைப்பருள் செய்திதானும்
பழிப்பொழி பந்தம் வீடுபார்த்திடின் அருளே எல்லாம்.'

—சிவஞான சித்தியார்

இறைவன் அருள்கொழிக்க ஐந்து தொழில்களைச் செய்கிறான் என்பதனைச் சுட்டுவதே சிவபெருமானின் நடராசத் தோற்றம். அம்பலவாணனாய் — கூத்தபிரானாய் — தாண்டவராயனாய் அவன் ஆனந்த நடமிடும் காட்சி அண்டங்கள் யாவினையும் அவன் படைத்துக் காத்து அழித்து மறைத்து அருளும் வெற்றியை எடுத்தோதுகின்றது. மூன்று கரங்கள்: ஒன்று துடியினை ஏந்திக்கொண்டுள்ளது. உறுதி கூறும் வெற்றியில் தோன்றுகிறது இன்னொரு கரம். எரியேந்திக் கொண்டிருக்கின்றது மற்றொரு கரம். இவற்றோடு ஊன்றிய நிலையில் ஒரு கால்; தூக்கியெடுத்த நிலையில் மற்றொரு கால். இந்த வடிவத்துக்குத் தரப்படும் விளக்கத்தினைக் காண்போம்.

'தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்கார - ஊற்றமா
ஊன்றுமலர்ப் பதத்தில் உற்றதிரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு'

என்கிறார் 'உண்மை விளக்க' ஆசிரியர்.

'அரன்துடி தோற்றம் அமைத்தல் திதியாம்
அரன் அங்கி தன்னில் அறையிற்சங் காரம்
அரனூற் றணைப்பில் அருமருந் திரோதாயி
அரனடி யென்றும் அனுக்கிரகம் என்னே!'

எனக் கூறுகின்றார் திருமூலர். கூத்தபிரானது துடிசேர் கரம் படைத்தலையும், அபயகரம் காத்தலையும், தீயேந்திய கரம் அழித்தலையும் சுட்டுவன. அங்ஙனமே ஊன்றிய திருவடி மறைத்தலையும், தூக்கிய திருவடி அருளலையுஞ் சுட்டும்.

இத்திருக்கூத்தின் முறைமையை எடுத்தோதும்போழ்து 'உண்மை விளக்க' ஆசிரியர்,

'மாயை தனைஉதறி வல்வினையைக் காட்டுமாம்
சாய அமுக்கியருள் தானெடுத்து - நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்பரதம் தான்'

என்று கூறுகின்றார்.

உடுக்கை ஏந்திய கையால் இறைவன் மாயையை நீக்குகின்றனன்; தீயேந்திய கரத்தால் வல்வினையைச் சுட்டெரிக்கின்றனன்; ஊன்றிய திருவடியால் மலம் மேலிடாமல் அமுக்குகின்றனன்; தூக்கிய திருவடியால் அருள் வழங்குகின்றனன்; நேயத்தால் அமைந்த கரத்தினால் ஆன்மாவை ஆனந்த வெள்ளத்தில் அழுந்துமாறு செய்கின்றனன்; இதுவே எந்தையாம் இறைவன் தம் திருக்கூத்து முறைமை ஆகும் என்கிறார்.

சிற்றம்பலத்தில் சிவபெருமான் ஆடும் நடம் அண்டங்கள்-பஞ்ச பூதங்கள் அனைத்திலும் அருள்நடமாக அமைகின்றது. அஃது அடியார்களின் அகச்சிற்றம்பலத்தே நிகழ்கின்ற நடமே என்பது சைவத்தில் வலியுறுத்தப்படும். 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்னும் முதுமொழி அருள்திரு நடத்தின் சிறப்பைக் காட்டவே எழுந்ததாகும். அண்டத்தில் ஆடுவோன் பிண்டத்திலும் ஆடுகின்றனன். உலகில் ஆட்டமும், அசைவும், இயக்கமும் எழுச்சியும் எங்கெங்கே உள்ளனவோ அங்கெல்லாம் அருள்நடம் நிகழ்கின்றது என்னும் உண்மை இதினின்றும் போதரும். இதனைத் திருமூலர்,

'எனக்குந் திருமேனி எங்குஞ் சிவசத்தி
எங்குஞ் சிதம்பரம் எங்குந் திருநடம்
எங்குஞ் சிவமா யிருத்தலால் எங்கெங்கும்
தங்குஞ் சிவனருள் தன்விளை யாட்டதே'

என்னும் பாடலில் அழகுற உணர்த்திக் காட்டுகின்றார்.

இப்பேருண்மைத் தெளிவு ஏற்பட்ட நிலையிலேயே அடியார்கள் இறைவனின் திருக்கூடத்தைத் தில்லைச் சிற்றம்பலத்தில் கண்டு களித்துத் தங்கள் அனுபவத்தை வெளியிடுகின்றார்கள்.

'கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோல் நீட்டி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பரவி யோம மாகும் திருச் சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி'

என்பர் சேக்கிழார்.

'குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போற் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே'

எனக் கூறுவர் அப்பர்.

ஐந்து தொழில்கள்மூலம் வெளிப்படும் இறையருளில் இறையறமும் இழைந்தோடுவது இனிதே சைவத்தில் விளக்கப்படும்.

ஆட்கொள்வோனாய் - அணைப்போனாய் - அருள்வோனாயுள்ள இறைவன் அறங்காப்போனாயும் நீதி, நியதி ஆகியவற்றை நிர்வகிப்போனாகவும் உளன் எனச் சைவம் கூறும். கர்மம் எனப் பெறும் மலத்தின் இயக்கம் இந்தப் பின்னணியுடனேயே ஆயப்படுதல் வேண்டும் என்பர் சைவ அறிஞர் அருணந்தி சிவாசாரியார்.

'உருவருள் குணங்களோடும் உணர்வருள் உருவிற்றேன்றும்
கருமமும் அருளரன்தன் கரசரணுதி சாங்கம்
தருமருளு பாங்க மெல்லாம் தானருள் தனக்கொன்றின்றி
அருளுரு உயிர்க்கென்றே ஆக்கினன் அசிந்தனன்றே.'

எனக் கூறுதல் கருத்துக்குகந்ததாகும். இறையன்பில் அருள் மட்டுமல்லாது நீதியும் கலந்துள்ளது என்பதனைக் காட்டவே சிவனுக்குப் போகி, யோகி ஆகிய வடிவங்களோடு (உமா மஹேஸ்வரி, தட்க்ஷிணமூர்த்தி வடிவங்கள்) காமாரி வடிவமும் (கோர வடிவமும்) தரப்பெற்றுள்ளது.

இக்கோர வடிவம் அவன் கோபம் எத்தகையது என்பதைக் காட்டுவதாகும். உயிர்கள் இயற்றும் தீவினைகளுக்கு ஏற்ப அவன் தண்டனை தருகிறுன் என்பது இவ்வடிவத்தினின்றும் அறியப்படும். கர்மம் தானுகவே செயல்படுதல் ஆகாது. அது சித்துப் பொருள் அன்று. அது மும்மலங்களுள் ஒன்று. ஆகவே அஃது உயிர்களுக்கு உடல் முதலியன அளித்தல் கூடாது. இறைவனே அதனைக் கருவியாக இயக்குகின்றனன். கர்மத்தின் இயக்கம் அம்பின் இயக்கம் போன்றதாகும். அது தானுகவே பாய்ந்தோட முடியாது. அதனை எய்வதற்கு ஒருவன் இருந்தாக வேண்டும். அருளின் வழிநின்று நீதியை நிலைநாட்டும் இறைவன் உயிர்களை கர்ம நியதிகளுக்குக் கட்டுப்படுத்துகின்றுன்.

கர்மத்தை வென்று மேற்செல்வதற்கு ஒரே வழி அதற்கு உட்படுதல்தான் என்பது சைவக்கொள்கை ஆகும். பேராயர் சபாபதி குலேந்திரன் இதனை விளக்கும்போழ்து அழகிய உவமை ஒன்றனைக் கூறுகிறுர். கடற்பயணம் செய்யும்போது கடற் காய்ச்சல் ஏற்படும்; ஆயின் அதனைத் தவிர்ப்பதற்கு ஒரே வழி கடற்பயணத்தைத் தொடர்வதேயாகும் என அவர் கூறிக் காட்டுகின்றுர்.

'இறைவனின் திருவருள் கர்மத்தை அழிப்பதாகச் சைவச் சித்தாந்தம் கூறவில்லை. அவ்வருள் கர்மத்தில் இயங்குகின்றது என்றே அது நிறுவுகின்றது' என அவர் கூறுவதும் இங்கு நோக்கத் தகுவதாகும்.[1]

(6) அருவாய்—உருவாய்—அருவுருவாய்த் திகழ்வோன்

இறைவனை இம்மூன்று நிலைகளிலும் வைத்துச் சிறப்பிக்கின்றது சைவம். அருவம் கண்ணுக்குப் புலனுகாத உருவம். உருவம் கட்புலனுய்த் திணைபால் உணரும் தன்மையில் திகழ்வது. அருவுருவம் கட்புலனுகியும் திணைபால் உணர ஒண்ணு நிலையது.

[1] Sabapathy Kulendran, Grace (A Comparative Study), p. 217

'அன்றும் திருவுருவம் காணாதே யாட்பட்டேன்.
இன்றும் திருவுருவம் காண்கிலேன் - என்றுந்தான்
எவ்வுருவோன் நும்பிரான் என்பார்கட் கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவம் ஏது?'

என்னும் அருமையான பாடலுடன்,

'அருவும் உருவம் அறிஞர்க் கறிவாம்
உருவம் உடையான் உளன்'

என்னும் உமாபதி சிவாசாரியார் கூற்றும் சேர்த்தெண்ணத் தகுவதாகும்.

இறைவனின் உருவநிலையை எடுத்துக்காட்டுவது அவரது நடராசக் கோலம் ஆகும். அவ்வுருவநிலையைத் தெரிவிப்பது சிவக்கொழுந்து எனப்பெறும் சிவலிங்கமாகும். இறைவனின் அருவம், சிவம், சக்தி, நாதம், விந்து ஆகியவற்றில் விளங்கும்.

இம்மூன்று உருவங்களுள் முதல் இரண்டனையும் முற்பகுதிகளில் ஒருவாறு கண்டுகொண்டோம். மூன்றாவதான அருவுருவம் இங்கு தனித்து ஆயத் தகுந்ததாகும்.

இறைவனின் அருவுருவத்தை விளக்கச் சிவாலயங்களில் திகழ்வது சிவலிங்கம் ஆகும். அஃது ஆண்குறியைச் சுட்டுவது என்போர் கூற்றுக்குச் சைவ நூல்களுள் ஆதாரம் ஏதுமில்லை. திணை, பால், ஏதும் அறியமுடியாதபடியும், உருவம், அருவம் என வரையறை செய்து சொல்ல முடியாவண்ணமும் விளங்குவது சிவலிங்கம். சிவன் ஒளிப் பிழம்பு வடிவில் பிரம்மாவுக்கும் விட்டுணுவுக்கும் காட்சியளித்ததைச் சுட்டும் சின்னமே இலிங்கம் என்பதை அறியச் சில குறிப்புகள் உள்ளன.

'காணாத அருவினுக்கும் உருவினுக்குங் காரணமாய்
நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்
நாணாது நேடியமால் நான்முகனும் காண்நடுச்
சேணாருந் தழற்பிழம்பாய்த் தோன்றியது தெளிந்தாராய்''

என்கிறார் சேக்கிழார், சாக்கிய நாயனார் புராணத்தில்.

ஆலயங்களில் சிவலிங்கம் சிறப்பிடம் பெறுவதையும், வழிபாட்டில் அது உயர்நிலை பெறுவதையும் எடுத்துக்காட்டும் பாடல்கள் பல உள்ளன. அப்பர் பெருமான் உடலையே கோயிலாகக் கொண்டு பாடும் பாடல் இங்கு இலிங்கத்தின் சிறப்புக் காணுதற்கு ஓதத் தகுவதாகும்.

'காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறைய நீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் பொற்றவிக் காட்டினோமே'

என்பதே அப்பாடல்.

ஆலயத்தில் இலிங்கம் இறைவனையும் நந்தி ஆன்மாவையும் பலிபீடம் மும்மலமும் விட்டொழிக்கப்பெறுகின்ற இடத்தினை யும் சுட்டும் எனத் திருமூலர் கூறிக் காட்டுகிறார்:

'ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவும் அடலே றெனநிற்கும்
ஆய பலிபீடம் ஆகுநற்பாசம்
ஆய அரன்நிலை ஆய்ந்து கொள்வார்க்கே'

அடியார்களின் நிலைக்கு ஏற்ப இறைவன் தன் உருவினை உரு—அரு—அருவுரு எனக்காட்டுகின்றனன். அவன் அம்மூன்றனையுங் கடந்த முழு முதல்வோன் ஆவான். அவனை முழுமையாய்ப் புரிந்துகொள்ளுதலென்பது அடியார்களால் ஆகாதவொன்றாகும். கடலில் நீந்தி விளையாடுவோர் கடலை அறிவர். ஆயின் அதன் ஆழத்தையும் அகலத்தையும் அவர்கள் அறியமுடியுமோ? அங்ஙனமேதான் இறைவனைப் பற்றிய நம் அறிவும் இருக்கும் என்கின்றது சைவம். நம் கருத்துக்குச் சேயனாய் இருந்தே இறைவன் செயற்படுகின்றனன் என்னும் உண்மையை அது சிறப்பிக்கின்றது.

'கடல் அலைத்தே ஆடுதற்குக் கைவந்து நின்றுங்
கடல் அளக்க வாராதார் போலப் — படியில்
அருத்தி செய்த அன்பரை வந்தாண்டதுவு மெல்லாம்
கருத்துக்குச் சேயனாய்க் காண்' —திருக்களிற்றுப்படியார்

(இ) மனிதப் பிறவியும் வேண்டுவதே!

இறைவன் ஒருவனே என்னும் உயரிய கொள்கையின். அடிப் படையில் எழுந்தியங்கும் சைவம் மனிதனையும் — மனிதப்பண்பு களையும் — மனித ஈடுபாடுகளையும் உரிய முறையில் மதித்துப் போற்றுகின்றது. 'மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம் மானிலத்தே!' என்பது அப்பர் வாக்கு.

மனிதனின் இயல்புநிலையையும் சார்புநிலையையும் சைவம் விளக்கமாக எடுத்துரைக்கின்றது. கடவுள் எங்ஙனம் அனாதியாகச் சித்துருவாய் உள்ளாரோ அங்ஙனமே உயிர்களும் அனாதியானவை; அவை எண்ணிலடங்காதவை எனச் சைவம் கூறுகின்றது. உயிர் கள் அனாதியானவை என்றாலும் அவை இறைவனுக்கு இணையா னவை அல்ல; உயிரும் இறைவனும் ஒன்றாக முடியாது என்னும் உயரிய கொள்கை சைவத்தில் உண்டு. உயிர்களும் இறைவனும் ஒருவரையொருவர் சார்ந்து உள்ளனர் என்பதைச் சைவம் அழகுற விளக்குகின்றது. திருத்தொண்டர் அகஸ்தீன் (St. Augustine) 'இறைவனின்றி நாம் எதையும் செய்தல் முடியாது; நம்மையின்றி

எதனையுஞ் செய்ய இறைவன் சித்தங்கொள்ளார்'' ('Without God, we cannot; and without us God will not') எனக் கூறிக்காட்டும் நிலை சைவத்தில் காணக்கிடக்கின்றது.

மனிதன் பாவக்கறை அற்றவன் அல்லன்; இயல்பாகவே பாவத்தளையுடையோன் என்னும் தெளிவும் சைவத்தில் உள்ளது.

இறைவனுக்கும் உயிர்களுக்குமிடையே உள்ள தொடர்பு பற்றிச் சைவம் கூறுவனவற்றை ஒட்டுநிலை, கட்டுநிலை, உய்வுநிலை என மூவகைப்படுத்தி ஆராயலாம்.

(1) ஒட்டு நிலை

கடலில் நீர் இருக்கின்றது. நீரில் உப்பு உள்ளது. கடல் - நீர் - உப்பு ஆகிய இம்மூன்றும் எங்ஙனம் ஒன்றில் ஒன்று அடங்கி நிற்கின்றன? இவ் அடக்கநிலையை மூன்று தொடர்களால் விளக்கலாம்: கடல் மீநிறைவு (வியாபகம்) கடல் நீர் வீழ்நிறைவு (வியாப்பியம்) உப்பு மிடைநிறைவு (வியாப்தி). இங்ஙனமேதான் சைவம் கூறும் முப்பொருள்கள் — இறை, உயிர், தளை (பதி, பசு, பாசம்) என்பன மூன்றும் ஒன்றனுள் ஒன்று நிறைந்து நிற்கின்றன. இறைவனும் உயிர்களும் உள்பொருட்கள்; அறிவுப்பொருட்கள். ஆகவே அவை இரண்டும் இணைந்து நிற்பது சடப்பொருட்களின் கூட்டுப்போன்றதன்று. சித்துப் பொருட்களாகிய அவற்றின் கலப்புத் தன்மையை இறையனுபவம் பெற்ற அடியார்களின் வாய்மொழியாலேயே அறியமுடியும். ஆழ்ந்த அனுபவங்களை அழகுற எடுத்தோதும் தாயுமானவடிகள்,

'எனக்குள் நீ என்னும் இயற்கையாப் பின்னும்
உனக்குள் நான் என்ற உறுதிகொள்வ தெந்நாளோ'

எனக் கூறுகின்ருர். இவ்வுணர்வின் வழிபட்டதே பேரின்பம் என்றும் அவர் எடுத்துக்காட்டுகிருர்.

'ஆவிக்குள் ஆவியெனும் அற்புதனுர் சிற்சுகந்தான்
பாவிக்குங் கிட்டுமோ சொல்வாய்நீ பைங்கிளியே'

என்பதும் அவர் பாடல்.

ஒட்டுநிலையில் உயிர்கள் — ஆன்மாக்கள் இறைவனேடும் தம்மைப் பிணிக்கும் கட்டுக்களோடும் தொடர்புகொண்டுள்ளன. இறைவனைப் போன்றே உயிரும் உள்பொருள் என்ருலும் அவனெதிரே அதன் உட்பொருள் தன்மை இல்பொருள் தன்மையாகவே கணிக்கப்படும். அங்ஙனமே, அதன் அறிவும் இறைவன் முன்பு அறிவல்லதாகவே கணிக்கப்படும் — சூரிய ஒளிமுன் கண்ணெளி ஒரு பொருட்டாகக் கருதப்படாமை போன்று.

உயிர்கள் தாங்கள் சார்கின்றவைகளை ஒத்துநிற்கும் தன்மையுடையன. இறைவனைச் சாரும்போது அவனைப்போன்றேயும் தளைகளைச் சார்ந்து நிற்கும்போழ்து அவையேபோன்றும் அவை விளங்கும்.

இங்ஙனம் இறைவனோடும் தளைகளோடும் ஒட்டுநிலையில் உள்ள உயிர்கள் தளைகளோடுள்ள ஒட்டுதலை நீக்கி இறைவனில் அழுந்துதலே அவற்றிற்குக் கிட்டும் பெரும்பேறாக அமையும்.

இனி, உயிர்களின் கட்டுநிலை எத்தகையது, அதனின்றும் விடுதலைபெறும் பற்றுநிலை எத்தன்மையது என்பவைகளைக் காண்போம்.

(2) கட்டு நிலை

'மனிதன் சுதந்திரமுடையோனாய்ப் பிறக்கிறான். ஆயின், அவன் எங்கும் கட்டுகளோடு இருக்கிறான்' எனக் கூறினார் ரூஸோ. உண்மையில் மனிதன் கட்டு ஏதுமின்றிப் பிறக்கின்றானா என்பது சிந்தனைக்குரிய கேள்வியாகும். மனிதன் என்பவன் கட்டு அற்றவனல்லன் என்கிறது சைவம். இயல்பாகவே கட்டுகள் அற்றோனாய் இருப்போன் இறைவன் ஒருவனே என அது நிறுவுகின்றது. இறைவனுக்குக் கந்தழி என்னும் பெயரைப் பழந்தமிழர் தந்து போற்றியது குறிப்பிடத்தகுந்ததாகும்.

தன்னைப் பிணிக்கும் கட்டினை அறிந்துகொள்ளவே முடியாமல் மனிதன் வாழ்கின்றான் என்பதைச் சைவம் சுட்டிக்காட்டுகிறது. அவனைப் பிணிக்கும் மூன்று கட்டுகளுள் — பாசம் எனத் தொகுத்துக் கூறப்பெறும் மூன்று மலங்களுள் மூல மலமாக இருப்பது ஆணவம் என்பது. அது அனாதியே உயிர்களில் படர்ந்து நின்று அவற்றின் அறிவொளியை மறைக்கின்றது. நெல்லில் உமியும் செம்பில் களிம்பும் இருத்தல் போன்று ஆணவ மலம் உயிர்களில் படர்ந்து நிற்கின்றது. ஆன்மாக்களைப் பசுக்கள் எனக் கூறும் சைவம் இம்மலத்தைப் பசுத்துவம் என்னும் அளவுக்கு இம்மலம் உயிர்களில் நிறைந்து நிற்கின்றது.

'. . . அனாதியே மறைந்து நிற்கும்
பசுத்துவம் உடையன் ஆகிப் பசுவென நிற்கும் ஆன்மா'

என்பர் அருணந்தி சிவாசாரியார்.

மனிதனில் காணப்பெறும் இப்பாவத்தன்மை எத்தகையது என்பதைக் கீழ்வரும் அடிகள் தெளிவுற எடுத்துக்காட்டுகின்றன:

'உறுதிபயக்குங் காரியங்களொடு காலத்துஞ் செய்ய
வொட்டா(து)
இறுதி பயக்கும் காரியமே எக்காலத்து நிகழ்விக்கும்
செறியும் உயிரினல்லறிவை யெக்காலத்துஞ் சிதைத்துவரும்
மறிய உயிர்க்குப் புகரறிவை யெக்காலத்தும் வளர்ப்பிக்கும்
தூய நினைவைத் தூமொழியைத்தூய தொழிலைத் தோற்ருது
தீயநினைவைத் தீமொழியைத்தீய தொழிலைத்தவத்
தோற்றும்.'
—நந்தியுபதேசப் படலம்

சிந்திக்கத் தகுந்தவைகளைச் சிந்தியாமல் சிந்திக்கத் தகாதவைகளைச் சிந்திக்கவும், சொல்லத் தகுந்தவைகளைச் சொல்லாமல் சொல்லத் தகாதவைகளைச் சொல்லவும், செய்யத் தகுந்தவைகளைச் செய்யாமல் செய்யத் தகாதவைகளைச் செய்யவும் மனிதனை ஆட்டுவிப்பது இவ்வாணவமே யாகும்.

இவ்வாணவ மலம் இருள் மலம் என்றுங் கூறப்படும்.

'ஒரு பொருளுங் காட்டா திருளுருவங் காட்டும்
இரு பொருளுங் காட்டா திதி'

என்பர் உமாபதி சிவாசாரியார்.

இருள் அனைத்துப் பொருளையும் மறைத்துத் தன்னைக் காட்டும். ஆயின், இருண்மலமோ உயிர்களை மறைப்பதோடு தன்னையுங் காட்டாது என்று அவர் எடுத்துரைக்கின்ருர்.

இங்ஙனம் உயிர்களில் ஆணவம் இரண்டறக் கலந்து நிற்கும் நிலை அத்துவித நிலை எனக் கூறுவர் தாயுமானவடிகள்.

'ஆணவத்தோ டத்துவித மானபடி மெஞ்ஞானத்
தாணுவினே டத்துவிதஞ் சாருநாள் எந்நாளோ'

என்பது அவர் பாடல். ஆணவ மலத்தோடு ஒன்றியிருப்பது போன்று இறைவனேடு என்று நான் ஒன்றுவேனே என அவர் கூறிக் காட்டுகிருர். அங்ஙனம் ஒன்றுவதென்பது இறைவனின் அருளால் மட்டுமே கிட்டுவதாகும் என்பதனையும் அடிகள் கூறத் தவறவில்லை.

'ஏதுந் தெரியா தெனைமறைத்த வல்லிருளை
நாதநீ நீக்கவொரு ஞானவிளக் கில்லையோ'

என்பதும் அவர் வாக்காகும்.

உயிர்களைக் கட்டிப் பிணைக்கும் இவ்வாணவ மலம் இறைவன் அருளால் அகல்வதாகும். செம்பில் ஏறிநிற்கும் களிம்பு பாதரசத்தால் மறைதல் போன்று அது நிகழும். ஆயின், அது என்றும் அழியாப் பொருளாக இருந்தே வருகின்றது. இவ்வுண்மையை

விளக்கவே கந்தபுராணத்தில் சூரபன்மன் சுற்பிக்கப் பெறுகின்றான். இறைவன் அவனைத் தோற்கடிக்கின்றான் என்றாலும் அவன் வேண்டுகோளுக்கிணங்கி அவனைத் தன் வாகனமாக — மயிலாக ஆக்கிக்கொள்கின்றனன். சூரபன்மன் ஆணவ மலத்தைக் குறிப்பவனே ஆவான்,

கட்டுக்களுள் இரண்டாவதாகக் கூறப்படுவது கன்மம் ஆகும். உயிர்கட்கு இருவினை உண்டு என்பதே இதன் மூலம் வலியுறுத்தப் படுகின்றது. உயிர்கள் தாங்கள் இயற்றும் நல்வினை தீவினைகளுக்கு ஏற்பப் பயன் துய்த்துப் பேரின்பப்பேற்றை நாடும் பயணத்தைத் தொடருமாறு செய்கின்றனன் இறைவன். உயிர்கள் உடலில் உடம்பேற்று எழுவகைப் பிறவிகளாக விளங்கிக் கன்மத்தின் பயனை அனுபவிக்கின்றன. இப்பிறவிகள் பற்றிப் பேசும்போது மணிவாசகர்,

'பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்'

என்று கூறுகின்றார்.

'யாரும் யாவையும் எனக்குத் தனித்தனித்
தாய ராகியும் தந்தைய ராகியும்
வந்தி லாதவ ரில்லை யான் அவர்
தந்தைய ராகியும் தாய ராகியும்
வந்தி ராதது மில்லை. முந்து
பிறவா நிலனு மில்லை. அவ்வயின்
இறவா நிலனு மில்லை'

என்பது பட்டினத்தடிகள் பாடல்.

'உறங்குவது போலும் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு'
'எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
எழுமம் துடைத்தவர் நட்பு'

என்னும் குறட்பாக்களும் ஈண்டு ஒப்புநோக்கத் தகுந்தனவாகும்.

சைவம் கூறிடும் எழு பிறப்புக்கள்: தேவர், மக்கள், விலங்கு, புள், நீர் வாழ்வன, ஊர்வன, மரம் என்பனவாகும்.

நல்வினையையும் அதன் மறுதலையாகிய தீவினையையும் அறியக் கூடியவன் இறைவன் ஆதலினால் அவனே அவற்றைக்கொண்டு உயிர்களுக்குப் பலனளிக்கின்றான்.

'இதம்அகி தங்கள் என்ப திகமன வாக்குக் காயத்து
இதமுயிர்க் குறுதி செய்தல் அகிதமற் றதுசெய் யாமை
இதமகி தங்க ளெல்லாம் இறைவனே யேற்றுக் கொண்டிங்கு
இதமகி தத்தால் இன்ப துன்பங்கள் ஈவன் அன்றே'

என இதனை அருணந்தி சிவாசாரியார் கூறிக் காட்டுகின்றார். இதம் எனப்பெறுவது மறைகளில் விதித்தவற்றைச் செய்யும் நல்வினை; அவைகளின் மறுதலையைச் செய்தலே அகிதம் அல்லது தீவினை, இவை உயிர்களை ஒட்டியோ அன்றி இறைவனை ஒட்டியோ செய்யப்பெறலாம். உயிர்களை ஒட்டிச் செய்யப்பெறும் நற் கருமங்களினின்றும் கிடைக்கும் புண்ணியம் பசு புண்ணியம் என்றும் இறைவனை ஒட்டிச் செய்யப்பெறும் நல்வினைகளினின்று எழும்புண்ணியம் சிவபுண்ணியம் என்றும் கூறப்படும். அங்ஙனமே தீவினையும் கடவுளுக்கு எதிராகவும் மனிதனுக்கு எதிராகவும் செய்யப்படுவனவாக அமையும். இங்ஙனம் மனிதன் செய்யும் வினை கள் ஆகாமியம் ஆகும். அவற்றினின்றும் எழும் பாவ புண்ணியங் கள் சஞ்சிதம் எனப்பெறும். வினைகளின்றெழும் இன்ப துன்பங்கள் பிராரத்தம் எனப்பெறும். சில வினைகள் விரைவில் பலன் தரும். சில வினைகள் நாட்பட்டுத் தம் பலனைத் தரும். தெங்கை வைத்த அதே நாளில் கீரையையும் விதைத்தால் கீரை பதினைந்து நாட்களில் பலன் தரும். தெங்கு பலன் தருவதற்கு ஐந்து ஆண்டுகளாவது செல்லும். இங்ஙனமே வினைகளும் பலன் தருகின்றன என்று 'சித்தாந்தக் கட்டளை' என்னும் நூல் கூறுகிறது.

வினைகளைச் செய்வோன் நானே என்னும் உணர்வு மனிதனுக்கு ஏற்படும்போது அவன் அவ்வுணர்வையே கட்டாகப் பெறுகின்றான். விளைவுகளை எதிர்நோக்கி வினைகளைச் செய்யாமல் நல்லன என்பதற் காகவே நல்வினைகளைச் செய்து தீயன என்பதற்காகத் தீவினைகளை ஒதுக்குவதே சிறப்பாகும்.

'வினைகளைச் செய்வோன் நானே' என்னும் உணர்வுதான் மேலும் மேலும் பாவ புண்ணியங்களை மனிதனுக்குக் கூட்டுகின்றது. வினைகளைத் தொலைத்தற்பொருட்டு எடுக்கப்பெறும் பிறவிகளில் வினைகளும் அவற்றின் பலன்களும் மேலும் மேலும் கூடுகின்றன. எனவேதான் உயிர்களுக்குப் பல பிறவிகள் இன்றியமையாதவை யாகின்றன.

'வினைகளைச் செய்வோன் நானல்லன்' என்னும் மெய்யுணர்வு ஏற்படும்போது ஆகாமியம் பெருகாது. சஞ்சிதம் செயற்படாது.

பிராரத்தமும் தன் பலனெடுங்கி நிற்கும். இவை யாவும் இறைவன் திருவருளால் நிகழ்வன. வினைச்சுழலில் உள்ள உயிர்கட்கு இறைவன் ஞானசிரியனாய் எழுந்து அவற்றினை வினைப் பிடிப்பி னின்றும் நீக்குகின்றான்.

மனங்கசிந்து அழுவோரின் முறையீட்டுக்கிணங்கி இறைவன் அவர்கள் வினைகளை நீக்குகின்றான் என்பதனையும் சைவப் பேரறிஞர் கள் வலியுறுத்துவார்கள்.

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் தம் உரை ஒன்றில் இங்ஙனம் கூறுகின்றார்கள்:

'பாவவினை யிழைக்கும் மகன் தன் வினையுணர்ந்து மனம் பதைத்துத் தந்தையாம் ஆண்டவனை நோக்கிக் கதறிக் கதறி அழுவானாயின், அவன் வினை நசிக்கும் . . . இவ்வுண்மை தேராதார் ஆற்றிய வினையை அனுபவித்தே தீரல் வேண்டுமென்று சொல்வர். குற்றத்தை யுணர்ந்து வருத்துவதினுஞ் சிறந்த அனுபவம் பிறி தில்லை. வருந்தும் வேளையில் இரக்கமுடைய இறைவன் வாளா இருப்பானோ? இரான்; இரான். அவன் திருவருளைப் பொழி கிறான் . . .'[1]

'தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பார்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவார்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே'

என்னும் திருமூலர் திருவாக்கு இங்குக் கருதற்பாலதாகும்.

வினைகள் எத்தனை பெரிதாகக் குவிந்து கிடந்தாலும் இறை வனின் அருளால் அவை அழியக்கூடியன என்பது சைவத்தில் இல்லாமலில்லை. வானளாவ அடுக்கிய விறகுக் குவியலைச் சாம்ப லாக்க ஒரு சிறு பொறி நெருப்புப் போதுமாப்போல வினைகளை இறையருள் தொலைக்கின்றது என்கின்றார் அப்பர். ஒரு சிறு கல் வீச்சினால், மரத்திலமர்ந்துள்ள காக்கைக் கூட்டத்தை விரட்ட முடிவதைப்போல இறையருளால் வினைகளைத் தொலைக்க முடிகின்றது என்கின்றார் தாயுமானவடிகள்.

'அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லைமா நகர்ச் சிற்றம்பலவனார்க்
கெல்லையில்ல தோரடிமை பூண்டேனுக்கே'

என்று முழங்குகின்றார் ஆளுடைய அரசர்.

[1] சைவத்தின் சமரசம்: பக்கம் 63.

கட்டுக்களில் மூன்ருவதாகக் கூறப்பெறுவது மாயை. இஃது ஒரு மலம் எனக் கூறப்பெற்ருலும் இஃது ஆணவம் போன்றதன்று. ஓரளவுக்கு ஒளிதருவதாய் இது அமைந்துள்ளது. ஆணவ இருள் மலத்தை நீக்க இது சற்றுத் துணைசெய்கின்றது.

‘விடிவாமளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத் துவந்து’

என உமாபதி சிவாசாரியார் ‘திருவருட்பய’னில் கூறுகின்ருர். பொழுது விடிந்து காரிருள் நீங்கும் வரைக்கும் விளக்குப் பயன் தருவதுபோன்று உயிர்கட்கு ஆணவமாகிய இருள் முழுமையாக நீங்கும் வரையும் மாயையானது (உடலும் உலகமுமாய்) அமைந்து அறிவு துலக்குகின்றது என்பது இப்பாடற் கருத்தாகும்.

மாயையானது உலகம், உடல் ஆகியவற்றுக்குக் காரணமாய் உள்ளது. அதினின்றே அவையிரண்டும் எழுகின்றன. இவை தனு - கரண - புவன - போகம் என விதந்தோதப்படும். அவை உய்வுநிலை எய்த உயிர்கட்கு வேண்டப்பெறுபவையே ஆகும். அவை உய்வுக்குத் துணையாக நிற்பவையாகையால் அவற்றை ஒரு கட்டாகக் கொள்ளமுடியாது. ஆயின், உயிரும், உடலும் போகப் பொருட்களாகக் கொள்ளப்படும்போதும் தன்னல நாட்டத்தோடு பயன்படுத்தப் பெறும்போதும்தான் அவை தளையாக அமைந்து விடுகின்றன.

‘மயக்கிடுமாயா காரியமிலையேல் வல்வினை நுகர்ச்சியுமில்லை
துய்க்குமவ் வினையின் கழிவுமாங் கெய்தாதொல்லையே
சூழ்ந்தவா ணவத்தின்
முயக்குமற் ருெழிதாரிதாகும் மூதுயிர் மாயைகாரியத்தி
னியக்குறலன்றி யிருவினை யீட்டாதிவையின்றி யவையு
மெய்தாவால்’
—நந்தியுபதேசப்படலம்

என்னும் பாடல் இங்கு எண்ணத்தகுவதாம்.

மாயை பற்றிப் பேசும்போழ்து தமிழ்ப் பெரியார் திரு. வி. க. ‘யான் தோன்றத் துணைநின்று, என்னுடன் உடலாய், அவ்வுடல் வழி யான் அறிவு விளங்கப்பெறவும் இன்பம் நுகரவும் செஞ்ஞாயிற் ருெளியாய், வெள்ளிய நிலவாய், எழின்மலையாய், மணிகொழிக் கும் அருவியாய், செழும்பொழிலாய், அழகிய மலராய், இனிய பெண்ணமுதாய், செம்பாவாய், பல்கலையாய் எனக்குறுதுணை செய்துவரும் எனது இயற்கை அன்னையை—மாயா தேவியை யான் எவ்வாறு பொய்யென்பேன்? இயற்கைத் தாயன்ருே தன் தலை

வனும் இறைவனின் உண்மையை அறிவிக்கின்றாள்? அவள் அளித்த வாழ்வன்றோ நமது வாழ்வு? அவ்வாழ்வோடிசைந்த இன்பமன்றோ இறையின்பம்?' என்கின்றார்.[1]

'இறைகளோ டிசைந்த இன்பம்
இன்பத்தோ டிசைந்த வாழ்வு'

என்பது சுந்தரர் வாக்காகும்.

மாயையின் காரியமாகிய உடல், பருவுடல், நுண்ணுடல், முதலுடல் என மூவகையாகப் பேசப்படும். பருவுடலுள் நுண்ணுடலும் நுண்ணுடலுள் முதலுடலும் உள்ளன. இவை அனைத்துமே உய்வுநிலைக்குச் சாதனங்களாய் அமைகின்றன. உடலை இழிவாகக் கருதும் கொள்கை சைவத்தில் கிடையாது. உய்வு நிலைக்குச் சாதனமாய் அமையும் உடலை ஓம்புதலே அதில் வலியுறுத்தப்பெறுகின்றது.

'உடம்பா ரழியி லுயிரா ரழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கு முபாய மறிந்தே
உடம்பை வளர்த்தே னுயிர்வளர்த் தேனே'

'உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயிற்கொண் டானென்
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே'

என்னும் திருமந்திரப் பாக்களில் உடலோம்புதலின் மாண்பைத் திருமூலர் விளக்குகின்றார்.

உடலைக் கோயிலாகக் கருதுவது சைவ மரபாகும். சிவாலயங்களின் அமைப்பு உடலமைப்பை ஒட்டியதாகும். ஆங்குப் புறவழிபாடும் உடல் - உள்ளம் - உயிர் ஆகியவற்றின் பிணைப்பில் அகவழிபாடும் நிகழும். 'உங்கள் உடல் இறைவனின் ஆலயம்' எனத் திருத்தொண்டர் பவுல் கூறுவதைப்போன்றே அப்பர் பெருமானும்,

'காயமே கோயிலாகக் கடிமனம் அடிமை யாக
வாய்மையே தூய்மை யாக மனமணி இலிங்க மாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈச னார்க்குப் போற்றவிக் காட்டி னோமே'

என்று அருளியுள்ளார்.

'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே'

என்பர் திருமூலர்.

---

[1] திரு. வி. க., சைவத்தின் சமரசம், பக்கம் 33, 34.

உலகமும் உடலும் போகப்பொருட்களாகக் கொள்ளப்படுதல் தவறு என்பதைக் காட்டும் பாடல்கள் அவ்விரண்டினையும் இழித்துரைப்பவைபோலத் தோன்றலாம். ஆணவம் - தன்னலம் - இன்றி உலகில் வாழவேண்டும்; உடலை ஓம்பவேண்டும் என்பதே அப் பாடல்களின் அடிக்கருத்தாகும். திருமூலர் உடலாகிய கோவிலுக்குக் காளா மணிவிளக்காக உள்ளவை ஐம்புலன்கள் என்கின்றார். அதே நேரத்தில் அவற்றைக் 'கள்ளப் புலனைந்தும்' என்று குறிப்பிடுகின்றார். அவற்றின் கள்ளத்தனமே சாடப்பெறுகின்றது. அவற்றின்வழி அலைக்கழிக்கப்பெற்று நிலையிழத்தலே கடியப்படுகின்றது. அவற்றையடக்கி இறைகளோடிசைந்த இன்ப வாழ்க்கை நடத்தவேண்டும் என்கிறது சைவம்.

புதிய ஏற்பாட்டில் ஊன் - மாம்சம் (சார்க்ஸ்) என்னுஞ் சொல்லும் உடல் (சோமா) என்னுஞ் சொல்லும் உலகம் (காஸ்மாஸ்) என்னுஞ் சொல்லும் ஆளப்பெற்றுள்ள பாங்கு இங்கு ஒப்புநோக்கத்தகுவதாகும்.

லூக்கா 24:39-ல் 'ஊன்' என்னுஞ் சொல் உடற்றசையைச் சுட்டுகிறது.

('என்னைத் தொட்டுப் பாருங்கள். எனக்கு ஊனும் எலும்புகளும் இருப்பதாக நீங்கள் காண்கிறீர்கள்.')

2 கொரிந்தியர் 7:5-ல் 'ஊன்' என்னுஞ் சொல் 'உடல்' என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

('எங்கள் உடலுக்கு இளைப்பாறுதல் ஒன்றுமில்லாமல் . . .')

ரோமர் 8:4-ல் ஊன் என்னுஞ் சொல் 'மனித சுபாவத்தை'ச் சுட்டுகிறது.

('மனித சுபாவத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் . . .')

1 கொரி. 10:3-ல் ஊன் என்னுஞ் சொல் உலக ஆசாபாசங்களைச் சுட்டுகிறது.

('. . . நாங்கள் உலக ஆசாபாசங்களைச் சார்ந்து போராடுகிறவர்களல்ல . . .').

இங்ஙனமே மத். 6:25 உடல் என்னுஞ் சொல் மனிதவுடலையும் கொலோசெயர் 2:11-ல் பாவக்களமாகிய உடலையும் குறிப்பிடுகின்றது.

இத்தொடர்களை இடம்நோக்கியும் அவற்றின் தொடர்புகளையொட்டியும் நாம் விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். அங்ஙனமே தான் 'காயமே கோயில்' என்னும் அப்பர் பாடலையும்,

‘ஊற்றைச் சரீரத்தை ஆபாசக் கொட்டிலை ஊன் பொதிந்த
பீற்றல் துருத்தியைச் சோறிடுந் தோற்பையைப் பேசரிய
காற்றிற் பொதிந்த நிலையற்ற பாண்டத்தைக் காதல் செய்தே
ஏற்றுத் திரிந்துவிட்டேன்’

என்னும் பட்டினத்தார் பாடலையும் உடலின் தன்மை தொடர்பு களை மனத்திற்கொண்டு விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

இறைவனின் கோயில் புலன்களில் கட்டுக்கடங்காத பாய்ச்ச லினாலும் தன்னலச் செயல்களினாலும் ‘கள்ளர் குகை’யாகி விடுகின்றது என்பதே இங்கு அறியவேண்டிய கருத்து.

யோவான் *3:16*-ல் ‘உலகம்’ என்னுஞ் சொல் மக்கள் கூட்டத் தையும் *1* யோவான் *2:15*-ல் அத்தொடர் உலகில் மலிந்து கிடக்கும் இழிந்தனவற்றையுங் குறித்தல் போன்றே சைவத்திலும் ‘நல்லுலகம்’ ‘மாயச் சந்தை’ என்ற கருத்துப்பட வரும் தொடர்கள் உலகின் இரு வேறு தன்மைகளை எடுத்துக்காட்டுகின்றன.

(3) உய்வு நிலை

கட்டுநிலையில் உள்ள உயிர்கள் விடுதலை அடைந்து இறைவனைச் சார்வதே உய்வுநிலையாகும். இந்நிலை திருவருளினால் கிட்டுவ தொன்றாகும் எனச் சைவம் வலியுறுத்திக் கூறுகின்றது.

ஓர் அரசிளங்குமரனைச் சிறு பருவத்தே வேடர்கள் தங்கள் பாடிக்கு எடுத்துச் சென்றுவிட்டனர். அவன் அங்கேயே வளர்ந்து வந்தான். தான் யாரென்பதை அவன் உணர்ந்துகொள்ளவில்லை. வேட்டுவர் வாழ்க்கை முறையையே தன் வாழ்க்கை முறையாகக் கொண்டான். ஒரு நாள் அரசன் ஆங்கு வருகின்றான். வேட்டு வனாகத் தன்னைக் கருதிக்கொண்டிருக்கும் இளைஞன் உண்மையில் அரசிளங்குமரன் என்பதை விளங்க வைக்கின்றான். அவ்வரசிளங் குமரன் வேட்டுவர் வாழ்க்கை முறையைக் களைந்தெறிந்துவிட்டு அரசிளங்குமரனாக வாழ்வைத் துவக்கலானான்.

இக்கதையைச் சொல்பவர் சைவ மெய்யறிவியல் அறிஞர் மெய்கண்டார் ஆவார். கட்டுநிலையிலுள்ள ஆன்மா நற்செயல் களால் இயங்கும்போழ்து இறைவன் குருவடிவில் வந்து, ‘ஐம்புல வேடர்களால் வளர்க்கப்பெற்ற நீ உண்மையில் யாரென்பதை அறியாது போனாய்’ என்று கூற ஆன்மா புலன்களின் பிடியினின்றும் நீங்கி இறைவனின் அடிகளைச் சார்கின்றது என அவர் கூறுகின்றார்.

‘ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல், குருவுமாய்த், தவத்தினி லுணர்த்தவிட்டு,
அன்னிய மின்மையின், அரன்கழல் செலுமே’

என்பது அவர் கூறும் வாக்கு (சிவஞானபோதம், எட்டாம் சூத்திரம்).

இதனைத் தாயுமானவடிகள்,

'காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற
கண்ணிலாக் குழவியைப்போல்
கட்டுண் டிருந்தஎமை வெளியில்விட் டல்லலாங்
காப்பிட் டதற்கிசைந்த
பேரிட்டு மெய்யென்று பேசுபாழ்ம் பொய்யுடல்
பெலக்கவிளை யமுதமூட்டிப்
பெரியபுவ னத்தினிடை போக்குவர வுறுகின்ற
பெரியவிளை யாட்டமைத்திட்
டேரிட்ட தன்சுருதி மொழிதப்பின் நமனைவிட்
டிடருற உறுக்கி இடர்தீர்த்
திரவுபக லில்லாத பேரின்ப வீட்டினில்
இசைந்துதுயில் கொண்மின் என்று
சீரிட்ட உலகன்னை வடிவான எந்தையே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே'

என விளக்கிக் கூறுகின்றார்.

'இருளாம் ஆணவ மலம் நிறைந்த கருவில் அறிவு விளங்கப் பெறுதநிலையிலுள்ள பச்சிளம் குழவியைப்போல் கட்டுப்பட்டுக் கிடந்தோம். அங்கிருந்து வெளியே வருமாறு எங்கட்குக் கட்டளை தந்தாய். அங்ஙனம் வெளிவந்த நிலையில் 'ஆருயிர்' என்று பெயர் சூட்டினாய். அவ்வுயிர் சார்ந்த உடல் வலுவுடன் நிலைநிற்கும்படி அதன் வளர்ச்சிக்கு வேண்டப்பெறும் இருவினையாம் அமிழ்தினை ஊட்டினை. பெருமைமிக்க களமாம் புவனத்தில் பிறப்பு இறப்பாம் போக்கு வரவுகள் இடையீடின்றிப் புரிந்துவருகின்ற பெரிய விளையாட்டினை அமைத்துத் தந்தாய். திரு மாமறை நூல்களில் விதித்த திருவாணைகள் தவறின் நமனைக்கொண்டு தண்டித்து, துன்பமகற்றி இன்பவமுதூட்டினாய் . . . அன்னையின் ஆரருள் வடிவானவனே, எங்கள் தந்தையே . . .' என அவர் கூறுகின்றார்.

கச்சியப்ப சிவாசாரிய அடிகளார் தாம் வழங்கும் கந்த புராணத்தில் இதனை ஒரு உருவகக் கதையின்மூலம் விளக்குகிறார். வள்ளியம்மைத் திருமணப் படலத்தில் தெய்வப் பிறவியாகிய வள்ளி வேடர்குல அரசனாகிய நம்பிராசனால் வளர்க்கப்பெறு கின்றாள். அவளை மணக்க வருகின்றான் முருகன். பல சுவையான நிகழ்ச்சிகளுக்குப்பின் அவளை அடைகின்றான். வள்ளி தான் உண்மையில் யாரென்பதை அறிந்துகொள்கிறாள். நம்பிராசனும் அவனைச் சேர்ந்தவர்களும்கூட அதனையறிந்து மகிழ்கின்றனர். கீழ் வரும் பாடல்கள் இக்கருத்தைத் தெரிவிக்கின்றன:

'அன்னதோர் வேலை தன்னில் ஆறுமுக முடைய வள்ளல்
தன்னுழை இருந்த நங்கை தனையரு ளோடு நோக்கக்
கொன்னவில் குறவர் மாதர் குயிற்றிய கோலம் நீங்கி
முன்னுறு தெய்வக் கோல முழுதொருங் குற்ற தன்றே.'
'கவலைதீர் தந்தை தானுங் கணிப்பில்லாச் சுற்றத் தாருஞ்
செவிலியும் அன்னை தானும் இகுளையும் தெரிவை மாரும்
தவலருங் கற்பின் மிக்கத் தம்மகள் கோலம் நோக்கி
இவள்எம திடத்தில் வந்த தெம்பெருந் தவமே என்றார்'.

—கந்தபுராணம்

திருத்தொண்டர் அகஸ்தின் அடிகள் (St. Augustine) 'இறைவா, உமக்காக எங்களைப் படைத்துள்ளீர். உம்மில் வந்துறும்வரை எங்கள் ஆன்மாவுக்கு நிம்மதி என்பதே கிடையாது' எனப் பற்று - உய்வுநிலைகளைக் கூறுவது இங்கு நம் நினைவுக்கு வருகின்றது அல்லவா?

உயிர்களில் மலம் நீங்கப்பெறுவதற்கான பக்குவநிலை ஏற்படும் போழ்தே இறைவன் திருவருள் கூட்ட எழுந்தருளுவான். வினைகளைச் செய்வோன் நான் என்னும் ஆணவநிலை ஒழிந்து வினைகளின் பலனைப்பற்றிய கவலையில்லாத நிலை ஏற்பட்ட அளவில் உயிர்கள் தாங்கள் இறைவனின் பணியாளர்களேயன்றி வேறில்லை என்ற நினைப்பில் அழுந்தி வாழும்; இறைவனோடு ஒன்றும் பக்குவநிலையினை எய்தும். அப்போழ்தே இறைவன் குருவடியில் எழுந்தருளுவான்.

இங்ஙனம் 'அருபரத்தொருவன் குருபரனாகி' அருளும் மாண்புகளை எடுத்துக்கூறுவதே திருத்தொண்டர் புராணம்.

சுந்தரரை ஆட்கொள்ளும்பொருட்டுச் சிவபெருமான் அந்தணர் வடிவங்கொண்டுவந்து அவர் திருமணத்தன்று அவரைத் தடுத்தாட்கொண்டார். திருநீலகண்ட நாயனாருக்கும் மறையவன் வடிவில் தோன்றி அவரையும் அவர் மனைவியாரையும் ஆட்கொண்டார். இளையான்குடி மாறநாயனாரை ஆட்கொள்ளும்பொருட்டுச் சிவபெருமான் துறவி வேடம் பூண்டுவந்து அவரையும் அவர் மனைவியாரையும் ஆட்கொண்டார். கண்ணப்ப நாயனாருக்கு இலிங்கத்திடமிருந்து தோன்றியருளினன். திருநாவுக்கரசரின் பசியை நீக்கும்பொருட்டுச் சிவபெருமான் அந்தணன் வடிவில் தோன்றி அவருக்குப் பொதிச்சோறு ஈந்தளித்தார். திருவையாற்றில் அவர்க்குச் சிவபெருமான் உமையோடும் காட்சியருளினார். இப்படிப் பலப்பல முறைகளில் பலப்பல கட்டங்களில் இறைவன் உய்வுநிலையாளர்க்கு அருள் கூட்டுகின்றார் என்பதைச் சைவ நூல்கள் விளக்குகின்றன.

'ஆட்பாவலர்க்கருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான் புகில் அளவில்லை கிளக்கவேண்டா'

என்பர் ஆளுடைய பிள்ளையார்.

உய்வுப் பேற்றுக்கு ஆளாகும் உயர்பக்குவ நிலையடைந்த அடியார்களின் மனநிலையும் வாழ்க்கை நிகழ்ச்சிகளும் பணிமாண்புகளும் குறிப்பிடத்தகுந்தவை ஆகும்.

ஆணவத்தின் பிடிப்புத் தளர்ந்தநிலையில் 'நான்' என்னும் கருத்தா உணர்வு நீக்கப்பெற்றும் பலன் கருதாது இயங்கும் உயர் நெறியில் அவர் நிற்பர்.

இறைவன்மீது அவர்க்குப் பேரன்பு இருக்கும். ஆயின் அஃது எக்காரணம் பற்றியும் எழும் அன்பாக—எந்த நன்மையையும் எதிர் நோக்கி எழும் அன்பாக இராது.

'கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடியா ரொடல்லால் நரகம் புகினும்
எள்ளேன் திருவருளாலே இருக்கப்பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லா தெங்கள் உத்தமனே'

என்று உருகிப் பாடி இவ்வன்பு நிலையைக் காட்டுகின்றார் மணிவாசகர்.

இங்ஙனமே வைணவப் பெரியார் ஒருவரும் பாடியுள்ள பாடல் ஈண்டுக் கோடற்பாலதாகும்.

'பச்சைமா மலைபோல் மேனி பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே ஆயர் தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகரு ளானே'

என்பது தொண்டரடிப்பொடி ஆழ்வாரின் பாடலாகும்.

இராபியா என்னும் முஸ்லீம் ஸுஃபி பக்தரான ஓர் அம்மையார் 'இறைவா, யான் நரக பயத்தைக் காரணமாகக்கொண்டு உன்னைத் தொழுதால் என்னை அந் நரகத்தீயிலேயே சுட்டெரித்துவிடு' என்று கூறியிருப்பதும் இங்கு நம் நினைவுக்கு வருகின்றது.

முக்தி நிலையாளராம் பெருமக்கள் இறை சிந்தனையில் அமிழ்ந்து கிடப்பர். இறைவன் அவர்கள் வேண்டுதல்களுக்கு அருளாதிருப்பினும்—அவர்களின் இடர்களைக் களையாதிருப்பினும்கூட இடையறாது அவனைப்பற்றிய சிந்தனையிலேயே மூழ்கிக்கிடப்பார்கள்.

'இடர்களையாரேனும் எமக்கிரங்காரேனும்
படரும் நெறிபணி யாரேனும்—சுடருருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு'

எனக் காரைக்காலம்மையார் பாடியிருக்கும் பாடல் உள்ளத்தை உருக்குவதாய் உள்ளது. இறைவன் என் துன்பத்தைக் களையவில்லையென்றால் என்ன? நான் நடக்கவேண்டிய பாதையை

எனக்குக் காட்டத் தவறினுரென்றாலும் என்ன? எந் நெஞ்சை அவர்க்கு அர்ப்பணித்துவிட்ட யான் எங்ஙனம் அவர்மீது அன்பு செலுத்தாமல் இருக்கமுடியும்? என்று அவர் அப்பாடலில் கேட்கின்ருர்.

முக்தி நிலேயாளர்களின் நிலேயைப் பட்டினத்தடிகள் இங்ஙனம் கூறிக் காட்டுகின்ருர்கள்.

'பேய்போல் திரிந்து பிணம்போல் கிடந்துஇட்ட
பிச்சையெல்லாம்
நாய்போல் அருந்தி நரிபோ லுழன்று, நன்மங்கையரைத்
தாய்போற் கருதித் தமர்போ லனைவர்க்குந் தாழ்மை சொல்லி
சேய்போ லிருப்பர்கண்டீர் உண்மை ஞானம் தெளிந்தவரே'

அத்தகையோர் இறை சிந்தனையில் மட்டுமின்றி இறைபணியிலும் ஈடுபட்டுக் கிடப்பார்கள். இதனை விளக்கும்போழ்து சேக்கிழார்,

'...பாரம் ஈசன் பணியல தொன்றிலார்
ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்'

என அவர்களைப்பற்றிக் குறிப்பிடுகின்ருர். இத்தகையோரே இறையன்பில் தலைமைப் பேறெய்தியவர்கள். இவர்களே நாயன்மார்கள் எனப் பெறுகின்ருர்கள்.

இவர்கள் இறைவனையும் உயிர்களையும் நேசித்துப் போற்றுகின்றவர்கள். பொன்னும் பொருளும் வாய்த்தால் அவை அடியாரைப் பேணவும் பசித்தோரை உண்பிக்கவுமே என்பதனை வாழ்வியல் அளவில் செயற்படுத்திக் காட்டிய பெரியார்கள் இவர்கள்.

இவர்களின் பேச்சிலும் பணியிலும் சொல்லிலும் செயலிலும் அடியார்களுக்கே உரித்தான பணிவும் துணிவும் இருக்கும்.

சேரமான் பெருமான் என்று ஒரு நாயனுர். அவர் ஓர் அரசர். ஒரு நாள் நகர்வலம் வந்தபோழ்து வெளுத்த வடிவினனுக ஓர் ஆள் போய்க்கொண்டிருப்பதைக் காண்கிருர். அவர் சலவைத் தொழிலர். தலைமீது உவர்மண் மூட்டை வைத்திருந்தார். மழையால் அது கரைந்து அவர் உடலில் படர்ந்திருந்தது. அஃது அவர் உடலில் நீறு பூசியதுபோல் தோன்றியது மன்னனுக்கு! உடனே யானையைவிட்டிறங்கி வந்து அவர் காலில் விழுந்தார். அவர் பதறிக்கொண்டு, 'அடியேன் வண்ணுன்' என்ருர். அரசன், 'அடியேன் சேரன்' என்று விழுந்து விழுந்து அவரை வணங்கினுர். திருத்தொண்டர்க்கே அமையும் பணிவு அல்லவா இது?

இன்னொரு நாயனர். அவரைத் துன்புறுத்த விரும்புகின்றன் அரசன். அமைச்சரை அனுப்பி அவரை அழைத்து வரச் சொல்கிறன். அதையறிந்தபோழ்து அவர் சிறிதும் நிலைகுலைகின்றரில்லை. பதிகம் பாடுகின்றர். எத்தகு சொற்கள்! எத்தனை வீரம்! என்ன துணிவு! அஞ்சாமை!

'நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதில்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே.'
'பாராண்டு பகடேறி வருவார் சொல்லும்
பணிகேட்கக் கடவோமோ!...'
'என்றுநாம் யாவர்க்கும் இடைவோ மல்லோம்
இருநிலத்தில் எமக்கெதிரா வாரும் இல்லை...'
'அஞ்சுவது யாதொன்று மில்லை அஞ்ச வருவதுமில்லை'
'வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்டு
ஊனம் ஒன்றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே'

இங்ஙனம் கூறும் நாயனர் யார்? பணிவே வடிவானவராய் உழவாரமும் கையுமாய் ஆலயங்கள்தோறும் அலைந்து சென்று அவற்றைத் தூய்மைப்படுத்துவதில் நாட்டம்கொண்டு வாழ்ந்தவர்! திருஞானசம்பந்தர் ஏறிவந்த பல்லக்கைத் தூக்கிய பெரியார்! திருநாவுக்கரசு நாயனர்! இறை சிந்தனையிலும் இறை பணியிலும் மூழ்கும் நாயன்மாரிடையே பணிவும் துணிவும் இழைந்து செயற்படுவதற்கு இவரே சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளார் எனலாம்.

இதற்குப் பக்தர்களின் கூட்டுறவு கிடைப்பதே ஒரு பெரும் பேறு என்பது சைவ நம்பிக்கை. இறைவனேடு சஞ்சரிக்கும் இப் பெருந்தகையாளரோடு இருப்பதும் அவர்க்குப் பணி செய்வதும் வாழ்க்கைப் பேறுகளாகக் கொள்ளப்படுகின்றன. மணிவாசகர்:

'உடையான் உந்தன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதனல்
அடியேன் உன் அடியார் நடுவுளிருக்கும்
அருளைப் புரியாய்'

என்று இறைவனிடம் வேண்டுகின்றார். இறையடியவர் திருக் கூட்டத்துள் இருந்திடும் பேரருள் கிட்டுமாறு கேட்டுக்கொள் கிறார்.

உய்வு நெறியாளர்கள் இறைவனின் பேரருளை வியந்து போற்றுவதோடு தங்கள் பாவங்களையும் அறிக்கை செய்கின்றார் கள். இறைத் தொடர்பில் உறுதிநிலை பெற்ற பெரியார்களான அப்பர், சுந்தரர், சம்பந்தர், வாசகர், பட்டினத்தடிகள், வள்ளலார் போன்ற பெரியார்கள் தங்களைக் கடையர்கள், குற்றமே பெரிதுடையோர்கள், நலம்பேணுதவர்கள், நங்கையர் மேல் நாட்டமுடையவர்கள் என்றெல்லாம் கூறுகிறார்கள் இறைவனை அண்டாதிருந்தபோழ்து அவர்கள் வாழ்க்கையும் சிந்தையும் இருந்த விதத்தை அவர்கள் சித்தரிப்பதாகக் கொள்ள இடமுண்டு.

'There is no saint without a past
and no sinner without a future'

என்ற அருமையான வாசகம் இங்கு எண்ணத் தகுவதாகும்.

அதே நேரத்தில் பக்தர்கள் இறைவனிடம் நெருங்க நெருங்க இறைவன் எவ்வளவு தூயவர்; மனிதன் எத்தனை கறையுடையவன் என்பதை உணர்ந்துகொள்கிறார்கள். 'நிர்ப்பந்தமான நிலையில் உள்ளவன் நான். இப்பாவ உடலினின்றும் என்னை விடுவிப்பார் யாரே' எனக் கதறுகின்றார் பெரும் பக்தரான பவுலடியார். இறை யனுபவம் முதிரப்பெற்ற நிலையில் 'பாவிகளில் பெரும் பாவி நான்' என்று தன்னைப்பற்றிக் கூறுகின்றார். அங்ஙனமே திருநாவுக் கரசரும்,

'குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும்பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன் கோலமாய
நலம்பொல்லேன் நான்பொல்லேன் ஞானியல்லேன்
நல்லாரோ டிசைந்திலேன் நடுவேநின்ற
விலங்கல்லேன் விலங்கல்லா தொழிந்தேன் அல்லேன்
வெறுப்பனவும் மிகப்பெரிதும் பேச வல்லேன்
இலம் பொல்லேன் இரப்பதே ஈயமாட்டேன்
என்செய்வான் தோன்றினேன் ஏழையேனே'

என்று முறையிடுகிறார். அத்தனை கொடியவரா அவர்?

'பொல்லாதவன் நெறிநில்லாதவன் ஐம்புலன்கள்தமை
வெல்லாதவன் கல்விகல்லாதவன் மெய்யடியவர்பால்
செல்லாதவன் உண்மை சொல்லாதவன் நின்திருவடிக்கன்பு
இல்லாதவன் மண்ணில்ஏன் பிறந்தேன் கச்சிஏகம்பனே!'

என்று முறையிடுகின்றார் திருவெண்காடர்–பட்டினத்தடிகளார். அவரா பொல்லாதவர்? ஐம்புலன்களை வெல்லாதவர்? இறைவன் திருவடிக்கன்பு இல்லாதவர்?

'யாரினும் கடையேன் யாரினுஞ் சிறியேன்
என்பிழை பொறுப்பவர் யாரோ
பாரினும் பெரிதாம் பொறுமையோய் நீயே
பாவியேன் பிழைபொறுத் திலையேல்
ஊரினும் புகுத லொண்ணுமோ பாவி
உடம்பை வைத்துலாவவும் படுமோ
சேரினு மெனைத்தான் சேர்ந்திடார் பொதுவாந்
தெய்வத்துக் கடாதவன் என்றே'

என்பது வள்ளலார் பெருமானின் முறையீடு. அவர் கூறுவது நமக்கு விளங்கவில்லையே! அவரா யாரினும் கடையர்? அவரா தெய்வத்துக் கடாதன செய்தவர்?

இப் பெரியார்கள் பிறர் குற்றங்களைத் தம் குற்றமாகவே கருதும் பெருநோக்குப் படைத்தவர்கள் ஆவார்கள். இறைவன் முன்பு அவர்கள் தங்களை நெறியாளர்களாக–நீதிமான்களாகக் காட்டிக்கொள்கின்றார்களில்லை. அவர் திருமுன்றில் வரும்போழ்து தங்களைப் பாவியர் கூட்டத்திலேயே சேர்த்துக்கொள்கிறார்கள். சமுதாயக் கூட்டுணர்ச்சி (Corporate feeling) அவர்களுக்கு உள்ளது. மனிதச் சமுதாயத்தில் தீயோரின் குற்றத்தை நல்லோர் தங்கள் குற்றமாக ஏறகவேண்டுமென்ற உயர்நோக்கினை அவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள். அவர்களும் பிறரும் யாண்டும் தங்களைத் தாங்களே ஆராய்ந்து பார்க்கவேண்டியவர்கள் என்ற உண்மையையும் அவர்கள் முறையீடுகள் உணர்த்துகின்றன. இதனைப் பற்றிக் கூறும்போழ்து பேராசிரியர் தேவசேனபதி அவர்கள், 'The saints in their large-heartedness blame themselves for the faults of others and indirectly show the need for self examination' என்று கூறுகின்றார்கள்.[1]

உய்வுநிலை எய்தியோரின் அனுபவம் இறைவனோடு இரண்டறக் கலக்கும் சாயுச்சிய நிலையாக இருக்கும் எனச் சைவம் கூறுகிறது. இறைவனோடு இரண்டறக் கலத்தல் என்றால் உயிர்கள் தங்கள் ஆள் தன்மையை முழுமையாக இழந்து கடலில் சேர்ந்த

[1] V. A. Devasenapathy, *Of Human Bondage and Divine Grace*, P. 71, 72. 'உய்வு நிலை' என்னும் இப்பகுதியில் தரப்பட்டுள்ள கருத்துக்கள் பல, பேராசிரியர் தேவசேனபதி அவர்களின் இந்நூலின் துணைகொண்டு எழுந்தவை ஆகும். இந்நூலில் அவர்கள் அடியார்களைப்பற்றி (Saints) எழுதியுள்ள பகுதி (PP. 58-84) ஆழ்ந்த உண்மைகள் பலவற்றை எடுத்துரைக்கின்றது.

ஆற்று நீர் போலாதலன்று. இறைவனில் அழுந்தும்போழ்தும் உயிர்கள் தங்கள் ஆள்தன்மையை இழக்காமலிருக்கும் என்பதே சைவக் கொள்கை. பக்தர்கள் என்றும் இறைவனின் தொண்டர்களாகவே இருப்பர். இறைவன் அவர்களைத் தன்னைப்போலாக்கிக் கொள்ளும்போதும் அவர்கள் அவன் அடியார்களாகவே இருப்பார்கள்.

இங்ஙனம் இறைவனோடு ஒன்றும் நிலையிலும் அடியார்கள் தங்கள் ஆள் தன்மையை இழப்பதில்லையாயின் அவர்களிடம் 'நான்' என்னும் உணர்வு அந்நிலையிலும் இருக்குமோ என்ற வினா எழலாம். ஆயின், நான் என்னும் ஆணவ உணர்வு வேறு; 'நான்' என்பது பற்றிய நிறைவான அறிவு வேறு. இறைவனோடு ஒன்றும் அடியார்கள் 'நான்' என்னும் உணர்வைக் கொண்டோர் அல்லர். அவர்கள் வாழ்வு இறைவனை மையமாகக் கொண்டதாக இருக்கும். 'இனி நான் அல்ல; இறைவனே...' என்பது அவர்கள் அனுபவமாக அமையும். பேராசிரியர் தேவசேனபதி அவர்கள் இதுபற்றிக் கூறுவன இங்குக் கருதற்பாலவையாகும்: Egoism is pernicious because it is ego-centred. But when the ego or the self is God-centred, then it is fulfilment of the ego. The cognitive, conative and affective functions of the soul are all God-centred. It is such a fulfilment that we find in the lives of the saints. The saints exemplify a successful pilgrimage from ego-centric existence to theo-centric existence.'[1] இங்ஙனம் தன்மைய நிலையினின்றும் இறைமைய நிலைக்கு வருவது இறைவனின் திருவருளால் நிகழ்வதொன்றாகும். அத்திருவருளே தளைகளையெல்லாம் தகர்த்தெறிந்து அடியரை இறைவனிடம் ஒன்றுமாறு செய்கின்றது. இதனை,

'செம்மை நலமறியாத சிதரொடுந்திரிவேனை
மும்மை மலம் அறிவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையும் ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவாறார் பெறுவார் அச்சோவே!'

என்று அழகுறக் கூறிக் காட்டுகின்றார் திருவாதவூரடிகளார்.

இறைவனுக்கும் உயிர்களுக்குமிடையே எழும் கலப்பு நிலையை—ஒன்றும் நிலையைப்பற்றிப் பேசும்போழ்து 'ஏகம் இரண்டு என்னுமல் சும்மாவிரு' என்று கூறுகின்றார் மெய்கண்டார். 'ஒன்றாகாமல், இரண்டாகாமல் ஒன்றுமிரண்டுமின்றாகாமல்...' என இதனை விளக்குவார் அருணந்தி சிவாசாரியார். உமாபதி சிவாசாரியார் இக் கலப்பு நிலை, தாள், தலை என்னும் இரு சொற்கள் தாடலை எனப்

[1] Dr. V. A. Devasenapathy, *Of Human Bondage and Divine Grace*, P. 52.

புணர்வது போன்றதொரு நிலை என்பர். தாடலை என்பது ஒரு சொல்லுமன்று; இரு சொல்லுமன்று; ஒன்றுமிரண்டுமல்லாத தொன்றுமன்று. இறைவன் தாளில் ஆன்மா பதிந்து நிற்கும் அனுபவமும் இத்தகைத்தே என்பர்.

'தாடலைபோற் கூடியவை தானிகழா வேற்றின்பக்
கூடலைநீ ஏகமெனக் கொள்'

என்பது அவர் வாக்கு (திருவருட்பயன் 74).

இப்பேரின்நிலை அன்பு வழிப்பட்டதொன்றுகும் என்றும் அப் பெரியார் கூறியருள்வது இங்கு உன்னுவதற் குரியதாகும்.

'இன்பில் இனிதென்றல் இன்புண்டேல் இன்புண்டாம்
அன்பு நிலையே அது' (திருவருட்பயன் 80)

அன்புடையார்க்கே அப்பேரின்பம் கிட்டும் எனச் சைவம் நிறுவுகின்றது. அன்பு செய்து பேரின்பப் பெற்றைப் பெறுதற்கே மனிதப் பிறவி வேண்டப்பெறுகின்றது.

(ஈ) ஐந்தெழுத்தே அனைத்தும்

(1) பொருள் மறை

சைவ இறையியற் கருத்துக்கள் அனைத்தும் ஐந்தெழுத்துள் அடக்கப்பெறும். இவ்வைந்தெழுத்துக்கள் 'திருவைந்தெழுத்து' எனச் சுட்டப்பெறும். இதனைச் சைவர்கள் பொருள் மறையாகக் கொண்டு ஜெபிக்கின்றார்கள். மறை அல்லது மந்திரம் இருவகைப் படும். அவற்றுள் ஒன்று பொருள் மறை, மற்றையது புகழ் மறை. மெய்ப்பொருள் உண்மை விளக்குவது பொருள்மறையாகும். கருதியவை கைகூட ஜெபிக்கப்பெறுவது புகழ்மறையாகும். பொருள் மறை இறை உயிர் தளை ஆகிய முப்பொருள் உண்மை கூறுவது. இம் முப்பொருளைக் குறிக்கும் மூன்றெழுத்துக்கள் அதில் இடம் பெறுகின்றன. அவை சியம ஆகியவை ஆகும். சிவயநம என்பதே திருவைந்தெழுத்து. இவ்வைந்து எழுத்துக்களும் ஐந்து சொற்களின் தனித்தனி முதலெழுத்துக்களாகும். அவ்வைந்து சொற்கள் சிவன், அருள், ஆன்மா, திரோதம், மலம்மாயை ஆகியவையாகும்.

'சிவனருள் ஆவி திரோதமலம் ஐந்தும்
அவன் எழுத்து அஞ்சின் அடைவாம்...'

என்பது உண்மை விளக்கச் செய்யுள்.

சிவயநம என்னும் திருவைந்தெழுத்தில் சிறப்பு, வனப்பு, யாப்பு, நடப்பு, மறைப்பு ஆகியவை உணர்த்தப்படுகின்றன என்பர்.[1]

---

[1] ப. இராமநாத பிள்ளை, திருவைந்தெழுத்து, பக்கம் 5.

சிறப்பு—சிவத்தைக் குறிக்கும் 'சிறப்பென்னும் செம்பொருள்' எனத் திருவள்ளுவர் இறைவனைச் சுட்டுதல் இங்கு ஒப்புநோக்கத் தகுந்ததாகும்.

வனப்பு—அழகு. இஃது உயிர்களை இறைவனுடன் இணைத்து அவற்றுக்குப் பேரின்பம் நல்கும் அருளைக் குறிக்கும்.

யாப்பு—பிணிப்பைச் சுட்டுவது. ஆணவ மலம் உயிர்கட்குப் பிணிபோல் தொன்மையே இருந்து வருகிறது. 'அப்பிணியினை நீக்குவிக்க ஆண்டவன் நோய்க்கு மருந்துபோல் இருவினையினையும், மருந்துக்கலம்போல் ஊணினையும் மருத்துவ இல்லம்போல் உலகினையும் கூட்டி யாப்புறுத்தினன்' என்கின்றார் இராமநாத பிள்ளை.[1]

நடப்பு—நடத்தல். உயிர்களை—மும்மலப் பிணிப்புடைய உயிர்களை—கைப்பிடித்து நடத்துதல், இங்ஙனம் நடத்துவது இறைவனின் அருட்சக்தியே ஆகும். அஃது ஆதி என்றும் அம்மை என்றும் குறிக்கப்படும்.

மறைப்பு—பண்டு தொட்டு உயிர்களைப் பற்றியிருக்கும் மூல மலம் அவைகள் இறைவனைக் காணாதவாறு மறைத்து நிற்கின்றது.

உயிர்கள் வீடு பேற்றை எய்துதற்கு நடப்பாற்றல் வனப்பாற்றலாக வேண்டும். அங்ஙனம் திகழும் முறையே சிவய சிவ என்பது. இதனை மீநுண் ஐந்தெழுத்து (ஆதிசூக்கும பஞ்சாக்கரம்) என்பர்.

'சிவாய நமனச் சித்தம் ஒடுக்கி
அவாயம் அறவே அடிமைய தாக்கிச்
சிவாயசிவ சிவ என்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே'

'சிவயநம' நுண்மை ஐந்தெழுத்து, 'நமசிவய' பருமை ஐந்தெழுத்து, 'சிவயசிவ' மீநுண் ஐந்தெழுத்து.

உலகிடைக் காணும் மந்திரங்கள் அனைத்துக்கும் தாய் போன்றது திருவைந்தெழுத்து என்பர். இறைவன்—உயிர்கள்—தளைகள் அவற்றுக்கிடையே உள்ள தொடர்பு முறைகள் அவை உய்வு நெறியை ஒட்டி மாறிய வகை யாவும் அதனில் சுருக்கமாகத் தொகுத்துச் சுட்டப்பெறுகின்றன. எனவேதான் உமாபதி தேவ நாயனார் தம்முடைய திருவருட்பயனில்,

'அருள்நூலும் ஆரணமும் அல்லாதும் ஐந்தின்
பொருள்நூல் தெரியப் புகின்' (81)

என்று கூறுகின்றார். ஆகமங்களும், வேதங்களும், சாத்திரங்களும் இவ்வைந்தெழுத்தில் அடங்குவனவற்றையே சொல்கின்றன என்பது இப்பாடற் கருத்தாகும்.

[1] ப. இராமநாத பிள்ளை, பக்கம் 6.

'மந்திரங்க ளானவெலாம் அருளிச் செய்து
மற்றவற்றின் வைதிகநூற் சடங்கின் வந்த
சிந்தைமயக் குறும்ஐயம் தெளிய எல்லாம்
செழுமறையோர்க் கருளியவர் தெருளும் ஆற்ருல்
முந்தைமுதல் மந்திரங்கள் எல்லாம் தோன்றும்
முதலாகும் முதல்வனுர் எழுத்தஞ் சென்பார்
அந்தியினுள் மாத்திரம்அஞ் செழுத்து மேயென்று
அஞ்செழுத்தின் திருப்பதிகம் அருளிச் செய்தார்'

எனத் திருஞானசம்பந்தரைப் பற்றிச் சேக்கிழார் குறிப்பிடுவது இங்கு எண்ணத் தகுந்ததாகும்.

அப்பர் பெருமான்,

'வைத்த பொருள்நமக் காமென்று சொல்லி
மனத்தடைத்துச்

சித்தம் ஒடுக்கிச் சிவாய நமஎன்(று)
இருக்கின் அல்லால்

மொய்த்த கதிர்மதி போல்வார் அவர்பா
திருப்புலியூர்

அத்தன் அருள்பெற லாமோ அறிவிலாப்
பேதை நெஞ்சே'

எனக் கூறுகின்ருர். அங்ஙனமே மணிவாசகப் பெருமானும்,

'நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனுய்இன் அமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற்கு அருள்செய்தான்
ஊனுரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே'

என்று திருவைந்தெழுத்தினைச் செப்புதலினுலெய்தப் பெறும் பேற்றினை அழகுற எடுத்துச் சொல்லுகின்ருர்.

தமிழ் மூதாட்டியார் ஔவையாரும்,
'சிவாய நமஎன்று சிந்தித் திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை—உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும்'

எனத் தம்முடைய நல்வழி என்னும் நூலிற் கூறியுள்ளார்.

துன்ப நீக்கம்—இன்பப் பேறு ஆகியவற்றுக்கும் எண்ணிய எண்ணியாங்கு எய்துதற்கும் திருவைந்தெழுத்தே துணையென்பது சைவக் கோட்பாடாகும்.

(2) ஆண்டவன் வடிவம்

இறைவனின் மூவகை வடிவங்களுள் உருவநிலையை அவருடைய இன்பக்கூத்து எடுத்துக்காட்டுகின்றது. இனி, இவ் வெழிலுருவம் திருவைந்தெழுத்தால் அமைந்தது என்பர். மெய் கண்ட நூல்கள் பதினுன்கனுள் ஒன்ருகிய உண்மை விளக்கம் என்னும் நூலில் இதுபற்றியதோர் அரிய விளக்கம் உள்ளது.

'எட்டும் இரண்டும் உருவான இலிங்கற்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள்—சிட்டன்
சிவாயநம என்னும் திருஎழுத்தஞ் சாலே
அவாய மற நின்ருடு வான்'

என்பது அந்நூலில் வரும் ஒரு பாடல்.

(எட்டு—அ: இரண்டு—உ: 'அ' இறைவனையும், 'உ' ஆற்றலையும் உணர்த்தும். இவ்விரு எழுத்துக்களும் ஓங்காரத்துள் அடங்குவதும் கருதற்பாலதாகும். எட்டும் இரண்டும் சேர்ந்தால் பத்து. பத்தைக் குறிக்கும் எழுத்து ய. இஃது உயிரைக் குறிக்கும் எழுத்து என்று கண்டோம்.)

இப் பாடலுடன் கீழ்வரும் உண்மை விளக்கப் பாடல்கள் இரண்டனையும் உன்னுவோம்:

'ஆடும்படி கேள்நல் அம்பலத்தான் ஐயனே
நாடும் திருஅடி யிலேநகரம்—கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமும் வாமுடியப் பார்'

'சேர்க்கும் துடிஏகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்—பார்க்கிலிறைக்கு
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனர்
தங்கும் மகரமது தான்.'

முதற்பாட்டு திருக்கோலத்தைக் கிழிருந்து மேனேக்குகின்றது. இரண்டாம் பாட்டு திருக்கோலத்தை மேலிருந்து கீழ்வரை விளக்கிக் காட்டுகின்றது.

முதற்பாட்டுக் கருத்துப்படி நாடுகின்ற திருவடியிலே ந கரமாகவும், திருவுந்தியிலே ம கரமாகவும், திருத்தோளில் சி கரமாகவும், திருமுகத்திலே வ கரமாகவும், திருமுடியிலே ய கரமாகவும் கொண்டு இறைவன் திருநடம் புரிகின்றனன்.

இரண்டாம் பாட்டுக் கருத்துப்படி, துடியுடைக் கரத்தில் சி கரமாகவும், வீசு கரத்தில் வ கரமாகவும், அபய கரத்தில் ய கரமாகவும், அக்கினி ஏந்திய கரத்தில் ந கரமாகவும், முயலகனே

மிதித்த திருவடியில் ம கரமாகவும் கொண்டு இறைவன் திருநடஞ் செய்கின்ருன்.

(3) ஐந்தெழுத்தே அனைத்தும்

பொருள்மறையாம் திருவைந்தெழுத்துள் இறைவனின் திருநடமே அடங்கிவிடும்போழ்து அதனில் அடங்காதனவும் இருத்தல் கூடுமோ? அண்டமும் பிண்டமும் அதனில் அடங்கும். ஐம்பூதங்களும் அனைத்துடல்களும் அதினில் அடக்கும். முன்பு கண்டவாறு அனைத்து மறைகளின் சாரமும் ஐந்தெழுத்தில் அடங்கிவிடும்.

இச் சிறப்பு நோக்கியே சைவர்கள் ஏது செய்யினும் திருவைந்தெழுத்து ஓதியே செய்தல் வேண்டும் என்னும் கொள்கை எழுந்தது. தண்டியடிகள் நாயனுர் திருவைந்தெழுத்தோதியே குளத்தில் மூழ்கிக் கண்பெற்ருர். அமர்நீதி நாயனுர் திருவைந்தெழுத்தோதியே தராசுத்தட்டில் ஏறி நேர்நிற்கச் செய்தார். திருவைந்தெழுத்தை ஓயாது ஓதுவாரைப் பிணி துன்பங்கள் வந்தடைய மாட்டா என்பர்.

மூவரும் ஐந்தெழுத்துப் பதிகங்கள் அருளியுள்ளனர். அவற்றுள் ஆளுடைய பிள்ளையார் அருளியவை இரண்டு. ஆளுடைய அரசர் அருளியது ஒன்று. ஆளுடைய நம்பியார் அருளியது ஒன்று ஆகும்.

'துஞ்சலும் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாடொறும்
வஞ்சகம் அற்றடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே'
'காதலாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மேய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே'

என்பன போன்ற பாக்களை அருளியுள்ளார் ஆளுடைய பிள்ளை.

ஆளுடைய அரசர்,

'ஏது மொன்று மறிவில ராயினும்
ஓதி யஞ்செழுத் தும்முணர் வார்கட்குப்
பேத மின்றி யவரவ ருள்ளத்தே
மாதுந் தாமு மகிழ்வார்மாற் பேறரே'

'இருந்து சொல்லுவன் கேண்மின்க ளேழைகாள்
அருந்த வந்தரு மஞ்செழுத் தோதினற்
பொருந்து நோய்பிணி போகத்து ரப்பதோர்
மருந்து மாகுவர் மன்னுமாற் பேறரே'

என்பன போன்ற பாடல்களை அருளியுள்ளார்.

'அந்தியும் நண்பகலும் அஞ்சுப தம்சொல்லி
முந்தி எழும்பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரிப்பாத் தென்திரு வாரூர்புக்
கெந்தை பிரானுரை என்றுகொல் எய்துவதே'

என்பது ஆளுடைய நம்பியாரின் பாடல்.

'போற்றியோ நமச்சிவாய புயங்கனே மயங்குகின்றேன்
போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிதொன்றில்லை
போற்றியோ நமச்சிவாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சிவாய சயசய போற்றி போற்றி'

என்பது ஆளுடைய அடிகளின் பாடல்.

திருவெண்காடராம் பட்டினத்தடிகள்,

'அஞ்சக் கரமெனுங் கோடாலி கொண்டிந்த வைம்புலனும்
வஞ்சப் புலக்கட்டை வேரறவெட்டி வளங்கள்செய்து
விஞ்சத் திருத்திச் சதாசிவ மென்கின்ற வித்தையிட்டுப்
புஞ்சக் களைபறித் தேன்வளர்த் தேன்சிவ போகத்தையே'

எனக் கூறுகின்றார்.

'அஞ்செழுத்தி னுண்மை யதுவான வப்பொருளை
நெஞ்சழுத்தி யொன்றாகி நிற்குநா ளெந்நாளோ'

என ஏங்குகின்றார் தாயுமானவடிகள்.

வடலூரடிகளாம் வள்ளலார் திருவைந்தெழுத்துப்பற்றி யருளியுள்ள ஒரு பாடல் உள்ளத்தை உருக்குவதாகும்:

'பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளை யைப்பெறுந் தாய்மறந் தாலும்
உற்ற தேகத்தை யுயிர்மறந் தாலும்
உயிரை மேவிய உடன்மறந் தாலுங்
கற்ற நெஞ்சங் கலைமறந் தாலுங்
கண்க ணின்றிமைப் பதுமறந் தாலும்
நற்றவ வத்தவ ருள்ளிருந் தோங்கு
நமச்சி வாயத்தை நான்மற வேனே!'

என்பதே அப்பாடல்.

இறைவனையும் அவன் அருளையும் அவ்வருளின் வழிபட்ட உய்வு நிலையினையும் எடுத்துரைக்கும் திருவைந்தெழுந்து மலைபோல் குவிந்துகிடக்கும் வினைகளைத் தொலைக்கவல்லது என்னுங் கருத்து சிந்திக்கற்பாலதாகும். கன்மம் எனப்பெறும் நியதி தவிர்க்க முடியாததொன்றாக இருப்பினும் அது அருளுக்குக் கட்டுப்பட்டதொன்றேயாகும். அருட்சக்தியால் அஃது அழிதல் கூடும். அருளியக்கத்துக்குள்தான் அதன் இயக்கம் இருத்தல் கூடும்.

ஐந்தெழுத்தே அனைத்தும் எனும்போழ்து இறைவனே தலைவன்: அருட்சக்தியே சக்தி. அனைத்துலக உயிர்களும் உய்வுப் பேற்றுக்குரியவை என்னும் சைவ அடிப்படைக் கருத்துக்கள் வற்புறுத்தப் பெறுகின்றன.

ஆளுடைய அரசராம் அப்பர் பெருமான் அருளியுள்ள நமச்சிவாயப் பதிகத்தினின்றும் ஒரு சிறந்த பாடலை எடுத்துக்கூறி இப்பகுதியை முடிக்கலாம்.

'விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே.'

3. சைவ மெய்யறிவியல்

சைவ சித்தாந்தம் எனப்பெறும் செம்பொருட்டுணிவை மெய்யறிவியல் தெளிவுடன் விளக்கிக்கூறும் நூல்கள் பதினான்கு ஆகும். இறை, உயிர், தளை என்னும் முப்பொருள்பற்றிக் கூறும் சமய நூலினைத் தமிழர் இறைநூல் என்றனர். பிற்காலத்தில் அத்தகு நூல்களுக்குத் தந்திரம், மந்திரம் என்ற பெயர்களும் சூட்டப்பெறலாயின. ஆகமம் என்னும் பெயரும் அவற்றை வந்தடைந்தன.

செம்பொருள் துணிவை மிக நுட்பமாகத் தொகை வகையால் எடுத்துரைக்கும் நூல்கள் பதினான்கினையும்பற்றிய செய்திகள் சிலவற்றைச் சுருக்கமாக காண்போம்.

(அ) மெய்யறிவியல் நூல்கள்

(1) திருவுந்தியார்

சித்தாந்த நூல்களுள் இதுவே மிகப் பழையதாகும். இது கி. பி. 1148-ல் எழுந்தது என்பர். இதனை இயற்றியருளியவர் திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் ஆவர். இது நாற்பத்தைந்து பாடல்களைக்கொண்ட நூலாகும். பாடல்கள் கலித்தாழிசையில் அமைந்துள்ளன. மூன்றடிகளைக்கொண்ட பாடல்கள்; ஈற்றடிகள் இரண்டின் இறுதிச் சீரும் உந்தீபற என அமைந்துள்ளன.

உந்தீ என்னும் சொல் உம் தீ (உமது கனல்) எனப் பொருள் தரும். மனித உடலின் மூலாதாரத்தில் குண்டலினி எனப்பெறும் தெய்வீகக் கனல் உள்ளது என்பது பல நூல்களில் கூறப்படுகின்றது. அதனைத் தூண்டி எழுப்பி புருவ நடுவாகிய உச்சிக் கமலத்துக் கேற்றுதலால் உடலில் அமுதவாரி எழும் என்றும் அது நரை, திரை, மூப்பு, மூர்ச்சை என்னும் பிணிகளைத் தவிர்த்துப் பரஞானத்தையும் சாகா வாழ்வையும் அளிக்கும் என்றும், அந் நூல்கள்—திருமந்திரம் உள்ளிட்ட யோக நூல்கள்—கூறும். ஆகவே, 'உந்தீபற' என்ற தொடர், 'உன் ஆதாரக் குண்டலியாகிய உந்திக்கனலை உயரப் பறக்கும்படி செய்வாய்' என்று பொருள்தரும் என்பர்.

இனி, உந்தி என்பது மகளிர் கூட்டமாகக் கூடி விளையாடும் ஒரு விளையாட்டு எனவுஞ் சிலர் கூறுவர். உந்தி என்பதனை 'உம்—

மும்மலங்களேயும்—பறக்கவிடுக' என்றும், 'உம்—தீமைகளெல்லாம்—பறந்துபோகும்படிக்குக் கருதி நிற்பீர்' என்றும் அவர் பொருள்கொள்வர்.

இந்நூலில் இறைவனின் தன்மைபற்றிப் பேசும் பாடல்கள் இரண்டனேக் காண்போம்:

'சொல்லும் பொருள்களும் சொல்லா தனவும் அங்கு
அல்லனுய் ஆனுன் என்று உந்தீபற
அம்பிகை பாகன் என்று உந்தீபற.'

பாவையை இடபாதியாகக்கொண்டோன் சொல்லால் உணர்த்தப்படும் பொருள் அல்லன். அங்ஙனம் உணர்த்தப்பெருத ஒன்றும் அல்லன். ஆயின் அவன் யாண்டும் நிறைந்திருக்கின்றனன். இதனே யுணர்ந்துகொண்டு உன் குண்டலியை உயர எழுப்பி உண்மை தெளிக என்பது இப்பாடற் கருத்தாகும்.

'மருளும் தெருளும் மறக்கும் அவன்கண்
அருளே மறவாதே உந்தீபற
அதுவே இங்கு உள்ளதென்று உந்தீபற.' (18)

இறைவனின் அகக்கண், மாயையின் காரியங்களாய் அழிய வல்லனவாய் உள்ள மனித ஞானத்தைக் காண்டல் இல்லே. அவன் பிரிக்கமுடியாமல் அருளோடு இணேந்துள்ளான். அவ்வருளே இவ்வுலகில் நின்று நிலவுகின்றது என்பதனே யுணர்ந்துகொண்டு உன் குண்டலியை உயர எழுப்பி உண்மை தெளிக என்பது இப்பாடற் கருத்தாகும்.

(2) திருக்களிற்றுப்படியார்

இந்நூலும் பன்னிரெண்டாம் நூற்றுண்டில் எழுந்தது. இது 1177-ல் எழுந்தது என்பர். இதனே இயற்றியவர் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனுர் என்பார் ஆவர். இது நூறு வெண்பாக்களேக்கொண்ட நூலாகும். முப்பொருள் விளக்கம் தருவதுடன், நால்வர், கண்ணப்ப நாயனுர், சண்டேசுர நாயனுர், மங்கையர்க்கரசியார் போன்ற அடியார்களேப்பற்றிய குறிப்புக்கள் சிலவற்றையும் இந்நூல் வழங்குகிறது.

உய்யவந்த தேவநாயனுர் இந்நூலேச் செய்து தில்லே கனக சபையில் அம்பலவாணர் முன்பு வைக்க, அங்குள்ள களிற்றுக்கை நிமிர்ந்து அதனே நடராசர் திருவடியில் சேர்த்தது என்று கூறுவர். இதுபற்றியே இந்நூல் திருக்களிற்றுப்படியார் என்னும் பெயர் பெறுவதாயிற்று என்றும் உரைப்பர்.

'அம்மையப்ப ரேயுலகுக் கம்மையப்ப ரென்றறிக
வம்மையப்ப ரப்பரிசே வந்தளிப்ப—ரம்மையப்ப
ரெல்லா வுலகுக்கு மப்புறத்தா ரிப்புறத்து
மல்லார்போ னிற்பா ரவர்'

என்னும் பாடலுடன் இந்நூல் ஆரம்பமாகின்றது.

இந்நூலிலுள்ள பாக்கள் திருவுந்தியாரின் கருத்தை விளக்கிக் காட்டுகின்றன.

(3) சிவஞானபோதம்

சைவ செம்பொருட்டுணிவைக் கூறும் நூல்களுள் மிகச் சிறந்ததாகப் போற்றப்படும் இந்நூல் பதின்மூன்றும் நூற்றாண்டில் எழுந்தது. இதனை இயற்றியவர் திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்ட தேவநாயனார் ஆவர். இந்நூல் இரௌரவ ஆகமத்தின் மொழிபெயர்ப்பு எனக் கூறப்பட்டுவந்த கருத்துத் தவறானது என்பது இப்போது அறிஞரால் நிறுவப்பெற்றுள்ளது. இந்நூல் தனித் தமிழ் முதல் நூல் என்பது அறிஞர் முடிவாகும். இந்நூலில் பன்னிரு சூத்திரங்கள் உள்ளன. பொது, உண்மை என இரு அதிகாரங்களையும், பிரமாண இயல், இலக்கண இயல், சாதனவியல், பயனியல் என நான்கு இயல்களையும் முப்பத்தொன்பது அதிகரணங்களையும், எண்பத்திரெண்டு வெண்பாக்களையும் கொண்டுள்ளது இந்நூல். செம்பொருட்டுணிவு கூறும் முப்பெரும் நூல்களுள் இது முதல்நூல் என்றும், சிவஞான சித்தியார் வழிநூல் என்றும், சிவப்பிரகாசம் சார்புநூல் என்றுங் கூறப்படும்.

போதத்திற்கு அழகிய அவையடக்கச் செய்யுள் ஒன்றனை இயற்றியுள்ளார் ஆசிரியர் மெய்கண்டார்:

'தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மை யுடைமை எமையிகழார்—தம்மை
யுணரார் உணரார் உடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்'

என்பது அப்பாடலாகும். அவர் இந்நூலை வடமொழியினின்றும் பெயர்த்துத் தந்திருப்பராயின் இங்ஙனம் அவையடக்கம் கூறியிருக்கமாட்டார் என்பது தெளிவு. தாம் வடமொழியினின்றும் இதனை மொழிபெயர்த்ததாகக் குறிப்பிட்டிருப்பார்.

இதனின்றும் சிவஞானபோதத்திலுள்ள பன்னிரு சூத்திரங்கள் எவராலோ வடமொழியிற் பெயர்க்கப்பெற்றன என்பது போதரும். அங்ஙனம் அவர் மொழிபெயர்த்த சூத்திரங்களின் இறுதியில், 'ஏவம் வித்யாச் சிவஞானபோதே சைவார்த்த நிர்ணயம்' (இங்ஙனமாகச் சிவஞான போதத்தில் சைவ சித்தாந்தப் பொருண்

முடிவை அறிந்துகொள்க) என்றும் எழுதிவைத்துள்ளார் (இரெளரவாகமம்).

(4) சிவஞான சித்தியார்

இந்நூலினை இயற்றியவர் திருப்பெண்ணுகடத்தைச் சேர்ந்த அருணந்தி சிவநாயனுர் ஆவர். இவர் மெய்கண்டாரின் மாணவர் ஆதலின் இவர் காலமும் அவர் காலமும் ஒன்றேயாகும். இந் நூலினை ஆசிரியர் விருத்தப்பாக்களால் அமைத்துள்ளார். 'பார் விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே, ஓர்விருத்தப் பாதி போதும்' என ஒரு பெரியார் இந்நூலின் சிறப்பை எடுத்துரைக் கின்ருர். 'பாதி விருத்தந்தான் இப் பார்விருத்தமாக வுண்மை சாதித் தார் பொன்னடியைத்தான் பணிவதெந்நாளோ!' என்று அருணந்தி யாரைப் போற்றுகின்ருர் தாயுமானவடிகள்.

சித்தியார், பரபக்கம் சுபக்கம் என்னும் இருபெரும் பகுதிகளை யுடையதாகும். பரபக்கத்தில் உலகாயதமும் செளத்திராந்திகர், யோகாசாரர், மாத்தியமிகர், வைபாடிகர் ஆகிய பெளத்த அகச் சமயத்தவர் மதமும் நிகண்டவாதியர், ஆசீவகர் ஆகியோரின் சமண் கருத்துக்களும், பட்டாச்சாரியன், மாயாவாதம் (அத்துவித வேதாந்தம்) சத்தப் பிரமவாதம், பாற்கரிய வாதம், நீரிச்சுர சாங்கியம், பாஞ்சராத்திரங்கள் என பதின்மூன்று பிற சமயங்கள் சித்தாந்த நெறிநின்று ஆயப்பெறுகின்றன. அவற்றுக்கான மறுதலைகளைத் தருகின்ருர் ஆசிரியர்.

சுபக்கத்தில், சைவ சித்தாந்த உண்மைகள்—செம்பொருட் டுணிவின் தெளிவு—விளக்கப்பெறுகின்றது.

சுபக்கப் பகுதி 328 விருத்தப்பாக்களால் ஆக்கப்பெற்றுள்ளது. போதம் போன்றே இதுவும் பன்னிரு சூத்திரங்கள்—கூறுகள்—கொண்டுள்ளது. பொது, உண்மை என இரு அதிகாரங்களும், பிரமாணம், இலக்கணம், சாதனம், பயன் என நூல் நான்கு இயல் களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

இந்நூலுக்கு உரை எழுதியோர் பலர். அவருள் அறுவர் (மறைஞான தேசிகர், சிவாக்கிர யோகியார், ஞானப்பிரகாசர், நிரம்ப வழகியார், மாதவச் சிவஞான யோகிகள், சுப்பிரமணிய தேசிக சுவாமிகள்) எழுதியுள்ள உரைகள் சிறப்புவாய்ந்தன. இவ் வாறு உரைகள் கருத்தினையும் ஆயும் ஆராய்ச்சி நூல் ஒன்றனைப் பேராசிரியர்—டாக்டர்—தேவசேனபதி அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்கள்.[1]

[1] SAIVA SIDDHANTA, as expounded in the *Sivajnana Siddhiyar and its six Commentaries*, V. A. Devasenapathy, University of Madras, 1966.

இந்நூலின் பாயிரப்பாடல் ஒன்றில் ஆசிரியர் வெளியிடும் உண்மையொன்று ஈண்டுக் குறிப்பிடத்தகுந்ததாகும்:

'அருளினு லாக மத்தே யறியலாம் அளவினுலும்
தெருளெலாஞ் சிவனை ஞானச் செய்தியாற் சிந்தை யுள்ளே
மருளெலா நீங்கக் கண்டு வாழலாம் பிறவி மாயா
இருளெலா மிரிக்க லாகும் அடியாரோ டிருக்க லாமே.'

சிவாகமங்களைக் கேட்டல், அங்ஙனம் கேட்டவற்றை அளவைகளால் சிந்தித்துணர்தல், சிந்தையில் எழும் சிவஞானத்தால் மாசறத் தெளிதல் என்ற மூவகைப்பட்ட சாதனங்களால் உயர் பரம்பொருளை அறிந்துகொள்ளலாம் என ஆசிரியர் இப்பாடலில் கூறுகின்றார்.

(5) சிவப்பிரகாசம்

இந்நூல் பதினன்காம் நூற்றாண்டில் எழுந்தது என்பர். இதன் காலம் 1313 எனக் கூறப்படும். இந்நூலினை இயற்றிய பெரியார் கொற்றவன்குடி உமாபதி சிவநாயனார் ஆவர். இவர் தில்லையில் வாழ்ந்த பெரியார். சிறு வயதிலிருந்தே சைவ நூல்களைப் பயின்று ஆலயத்தில் நாடோறும் தில்லை அம்பலக் கூத்தரைப் பூசித்து வந்தனர். அங்ஙனம் ஒருநாள் பூசையை முடித்துக்கொண்டு சிவிகையில் ஏறிக்கொண்டு அடியார் புடைசூழத் தம் மாளிகை திரும்பிக்கொண்டிருந்தார். அதுபோழ்து மறைஞான சம்பந்தர் என்னும் மறையாசிரியப் பெரியார் அவரைக் கண்டனர்.

'பட்ட கட்டையிற் பகற்குருடொன்று
சிட்டர் சூழ்தரச் செல்லுதல் பாரீர்'

என்று கூறிய சொற்கள் சிவிகையில் அமர்ந்திருந்த உமாபதியாரின் செவியில் விழுந்தன. உடனே சிவிகையினின்றும் குதித்தோடி மறைஞான சம்பந்தரின் அடிகளில் வீழ்ந்து வணங்கி அவருடைய சீடராயினர். மறைஞானம் கற்றுத் தில்லைக்கு அருகிலுள்ள கொற்றவன்குடியில் ஒரு திருமடத்திலிருந்து சிவநெறிச் சார்பு உண்மைகளை ஓதிவரலானர். சிவப்பிரகாசம் உள்ளிட்ட எட்டுச் சித்தாந்த நூல்களையும், கோயிற்புராணம், சேக்கிழார் நாயனார் புராணம், திருத்தொண்டர் புராண சாரம், திருமறை கண்ட புராணம், திருப்பதிகக்கோவை என்னும் நூல்களையும் அருளிச் செய்யலானர்.

சிவப்பிரகாசம், பொது உண்மை என இரு அதிகாரங்களைக் கொண்டுள்ளது. நூலில் தொண்ணூற்றென்பது திருவிருத்தங்கள் உள்ளன. சிவஞான போதத்தின் சூத்திரங்கள் பன்னிரெண்டினையும் இந்நூல் உட்தலைப்புகளாகக் கொண்டுள்ளது.

இந் நூற்கருத்து யாது என்பதனை ஆசிரியர் கூற வரும்போது,

'புறச்சமயத் தவர்க்கிருளாய் அகச்சமயத் தொளியாய்ப்
புகலளவைக் களவாகிம் பொற்பணிபோல் அபேதப்
பிறப்பிலதாய் இருள்வெளிபோல் பேதமும்சொற்
பொருள்போல்
பேதாபே தமும்இன்றிப் பெருநூல் சொன்ன
அறத்திறனல் விளைவதாய் உடலுயிர்க்கண் அருக்கன்
அறிவொளிபோல் பிறிவரும்அத் துவித மாகும்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறன் இங்குத் தெரிக்க லுற்ரும்'

எனக் கூறுகிருர்.

(6) இருபா இருபது

இந்நூலில் இருபது பாக்கள் உள்ளன. அவை வெண்பாவாலும் அகவலாலும் ஆகியவை. சைவச் செம்பொருட்டுணிவினை வினு - விடை முறையில் இந்நூல் விளக்கிச் செல்கின்றது. இந்நூல் அருணந்தி சிவாசாரியரால் இயற்றப்பெற்றது என்பர்.

(7) உண்மை விளக்கம்

இது, திருவதிகை மனவாசகங் கடந்த நாயனரால் அருளிச் செய்யப்பெற்றதோர் அரிய நூலாகும். இதனுள் ஐம்பத்து நான்கு வெண்பாக்கள் உள்ளன. இந்நூலுள் முப்பத்தாறு தத்துவங் களும், திருவைந்தெழுத்தின் சிறப்பும், அவ்வெழுத்துக்களால் அமைந்து ஐந்து தொழிலினை விளக்கும் அருள்நடத்தின் பெருமை யையும் அழகுறக் கூறப்பெற்றுள்ளன.

எஞ்சிய நூல்கள் ஏழினையும் உமாபதி தேவ நாயனர் இயற்றி யுள்ளார்.

(8) திருவருட் பயன்

சைவச் செம்பொருட்டுணிவின் மாண்புகளை எவரும் எளிதாக உணர்ந்துகொள்ளும்படி பத்துத் தலைப்புக்களின்கீழ் நூறு குறட் பாக்களாக வழங்குகின்ருர் ஆசிரியர். இந்நூலினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து G. U. போப் தமது திருவாசக மொழிபெயர்ப்பு நூலின் முன்னுரைப் பகுதியில் தருகின்ருர்.

ஆசிரியரின் கருத்தாழம் பொதிந்த இனிய நடையும் திட்ப முடைய கருத்துக்களை நுட்பமாகக் கூறிக்காட்டும் திறனும் போற்றுதற்குரியனவாகும். இறைவனின் தன்னியல்புபற்றிக் கூறும் குறட்பாக்கள் இரண்டனை இங்குச் சான்ருகக் காணலாம்:

'அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில்இறை நிற்கும் நிறைந்து'
'ஆஞ அறிவாய் அகலான் அடியவர்க்கு
வானடர் காணுத மன்.'

(9) வினு வெண்பா

பதின்மூன்று வெண்பாக்களினுலாகிய இந்நூல் இருபா இருபது போன்றே வினுமுறையான் செங்பொருட்டுணிவின் நுட்பங்களை விளக்கிச் சொல்கின்றது. தம்முடைய ஆசிரியர் மறைஞான சம்பந்தரை விளித்து இவ்வெண்பாக்களை அமைத் துள்ளார் உமாபதியார்.

'நீடும் ஒளியும் நிறை நிறையிருளும் ஓரிடத்துக்
கூடல் அரிது கொடுவினையேன் - பாடிதன்முன்
ஒன்றவார் சோலை உயர்மருதச் சம்பந்தா
நின்றவா றெவ்வாறு நீ'

என்னும் பாடலோடு இச்சிறுநூல் ஆரம்பமாகின்றது.

இருளும் ஒளியும் ஓரிடத்தில் கூடுதல் இல்லை; நீ சிவகுருவாய் எழுந்தருளி வந்து காட்சியளிப்பதற்குமுன் என்னிடத்துப் பொருந்தியிருந்தவாறு யாங்ஙனமோ என வினவுகின்முர். குருடன் கண்ணில் பகலவன் ஒளி படர்ந்தாலும் அது தெரியாதிருத்தல் போன்று மலம் உயிரை மறைத்திருக்கும் நிலையில் இறைவன் அவ் வான்மாவின்மேல் பொருந்தி நிற்கின்றனன் என்னுங் கருத்து இதனின்றும் பெறப்படும்.

நமச்சிவாயத் தம்பிரான் இந்நூலுக்கு உரை எழுதும்போழ்து, 'படலம் படர்ந்த கண்ணுக்கு மருத்துவம் பண்ணும் மருத்துவன் படலம் உரிக்கும்போதும் உடனிருப்பன். இருப்பினும் அப்படலக் கண்ணேன் காணுன். மருத்துவன், மருந்து, நோயாளி, நோய் அனைத்தும் ஓரிடத் தில் பொருந்துவன. நோய் மருத்துவனை ஒட்டாது. கண் நோயாளி நோய் நீங்கும்முன் மருத்துவனைக் காணுன். இவை ஒப்பாம்' என விளக்கம் தருகின்முர். இந்நூலிலுள்ள வெண் பாக்கள் ஒவ்வொன்றும் அரிய கருத்துக்களை உள்ளடக்கி நிற்கின்றன.

(10) போற்றிப் பஃறெடை

இந்நூல் கலிவெண்பாவால் இயற்றப்பெற்றுள்ளது. இதன் கண் தொண்ணூற்றைந்து கண்ணிகள் உள்ளன. இந்நூலிலும் ஆசிரியர் உமாபதியார் தம் சிவகுருவாம் மறைஞான சம்பந்தரைப் போற்றும் முறையில் பதினன்கு போற்றித் தொடர்களை வைத்

துள்ளார். சித்தாந்த உண்மைகளை ஆற்றொழுக்கான நடையில் கூறிச்செல்லும் இந்நூல் படித்தற்கு இனியதாகும். இதன் இறுதிக் கண்ணிகள் சிலவற்றைக் கீழே தருகிறோம்:

'நின்ற நிலையே நிகழ்த்தி ஒருபொருள்வே
றின்றியமை யாமை எடுத்தோதி - ஒன்றாகச்
சாதித்துத் தம்மைச் சிவமாக்கி இப்பிறவிப்
பேதந் தனில் இன்பப் பேதமுறாப் - பாதகரோ(டு)
ஏகமாய்ப் போகாமல் எவ்விடத்தும் காட்சிதந்து
போகமாம் பொற்றாளி னுட்புணர்த்தி - ஆதியுடன்
நிற்க அழியா நிலையிதுவே என்றருளி
ஒக்க வியாபகந்தன் னுட்காட்டி - மிக்கோங்கும்
ஆனந்த மாக்கடலில் ஆரா அமுதளித்து
தான்வந்து செய்யுந் தகுதியினால் - ஊனுயிர்தான்
முன்கண்ட காலத்தும் நீங்காத முன்னோனை
என்கொண்டு போற்றிசைப்பேன் யான்.'

'ஞானவொளியாய் நீ நிற்கும் நிலையை யுணர்த்தினாய். உயிரை இறைவனுடன் ஒன்றாகும்படி செய்தருளினாய்; தவறான கொள்கை யுடையரோடு சேராமல் எனக்குக் குருலிங்க சங்கமமாய்க் காட்சி தந்தாய்; உன் திருவருட் பாதத்தில் பிரியாமல் இருக்கும்படி செய்தாய்; அருள்நிலைக்கு என்னை அன்புடன் செலுத்தினாய்; என்னைத் தேடிவந்து அருளினால் எனக்குத் தகுதியளித்தாய்... உன்னை எங்ஙனமெல்லாம் புகழ்ந்து போற்றுவேன் நான்!' என்பது இக் கண்ணிகளின் திரண்ட கருத்தாகும்.

(11) கொடிக்கவி

இச்சிறு நூலில் நான்கே வெண்பாக்கள் உள்ளன. ஆலயத்தில் ஏற்றப்பெறும் கொடியின் சிறப்பு, அக் கொடியில் பொறிக்கப் பெறும் ஆனேறு, திருவைந்தெழுத்து ஆகியவற்றின் உட்பொருள் விளக்கம் ஆகியவை இந்நூலில் எடுத்தோதப்படுகின்றன.

(12) நெஞ்சுவிடு தூது

அகப்பொருள் துறையில் தம்மை ஆண்டருளிய ஞானாசிரியரிடம் தம் நெஞ்சினைத் தூது விடுகின்றார் ஆசிரியர். சைவச் செம்பொருள் துணிவிலடங்கும் அடிக்கருத்துக்கள் இந்நூலில் பேசப் பெறுகின்றன. கலிவெண்பா யாப்பில் எழுதப்பட்டுள்ள இந் நூலில் 134 கண்ணிகள் உள்ளன. இத்தூதுப் பாடல்,

'எரிந்த வழியாய்நின் இன்பக் கடற்கே - வேளை
தரித்து மதிமறந்த தையல் - வருத்தமெலாந்
தீராய் என உரைத்துச் செங்கமலப் பூத்திருந்தாள்

தாராய் எனப்பலகால் தாழ்ந்திறைஞ்சி - ஏர்ஆரும்
பூங்கொன்றை வாங்கிப் புகழ்ந்துபுரி நெஞ்சமே
ஈங்கொன்ற வாராய் இனி'

என முடிவுறுகின்றது.

(13) உண்மைநெறி விளக்கம்

இந்நூலில் ஆறு பாக்களே உள்ளன. அவற்றில் பதின் ஆக்கம் (தசகாரியம்) எனப்பெறும் தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் ஆகியவை எடுத்துரைக்கப்பெறுகின்றன.

சிவபோகம்பற்றிப் பேசுகின்ற இறுதிப் பாடல் இங்ஙனம் அமைந்துள்ளது.

'பாதகங்கள் செய்திடினும் கொலைகளவு கள்ளுப்
பயின்றிடினும் நெறியல்லா நெறிபயிற்றி வரினும்
சாதிநெறி தப்பிடினும் தவறுகள்வந் திடினும்
தனக்கெனஓர் செயலற்றுத் தான் அதுவாய் நிற்கில்
நாதன்இவன் உடல்உயிராய் உண்டுறங்கி நடந்து
நானுபோ கங்களையுந் தானாகச் செய்து
பேதமற நின்றிவனைத் தானாக்கி விடுவன்
பெருகுசிவ போகமெனப் பேசுநெறி இதுவே.'

(14) சங்கற்ப நிராகரணம்

சிவஞான சித்தியார் பரபக்கத்தில் புறச் சமய உண்மைகள் திறனாய்வு செய்யப்பட்டுக் கடியப்பெறுகின்றன. இந்நூலில் அகச் சமயக் கோட்பாடுகள் அங்ஙனம் ஆய்ந்தொதுக்சப்படுகின்றன. அவைகளை ஆய்தற்குமுன் மாயாவாதி சமயத்தை ஆசிரியர் ஆய்ந்து களைகின்றார். இந்நூலுள் ஆய்வு செய்யப்பெறும் அகச் சமயங்கள் (Saiva Heresies) வருமாறு: (1) ஐக்கியவாதி சமயம் (2) பாடாணவாதி சமயம், (3) பேதவாதி சமயம், (4) சிவசம வாதி சமயம், (5) சங்கிராந்தவாதி சமயம், (6) ஈசுவர அவிகார வாதி சமயம், (7) நிமித்தகாரண பரிணமவாதி சமயம், (8) சைவ வாதி சமயம்.

(ஆ) சைவச் செம்பொருட்டுணிவு

சித்தாந்த நூல்களுள் முதன்மையானதாகக் கொண்டாடப் பெறும் சிவஞான போதத்தின் பிழிவு இப்பகுதியில் தரப்படு கின்றது.

பன்னிரு சூத்திரங்களால் ஆகிய இந்நூல் பொது அதிகாரம் உண்மை அதிகாரம் என இரு பிரிவுகளாகப் பகுக்கப்படும்.

பொது அதிகாரம், பிரமாண இயல், இலக்கண இயல் என்றும் இரு கூறுகளையுடையதாகும்.

பிரமாண இயலில் முதல் மூன்று சூத்திரங்கள் அடங்கும். முதற் சூத்திரம் பதியுண்மைக்கும், இரண்டாம் சூத்திரம் பாசவுண்மைக்கும், மூன்றும் சூத்திரம் பசுவுண்மைக்கும் விளக்கம் தருகின்றன.

இலக்கணவியலில் நான்கு, ஐந்து, ஆறு எண்ணிட்ட சூத்திரங்கள் அடங்கும். நான்காம் சூத்திரம் பசு இலக்கணம் தருகின்றது. ஐந்தாம் சூத்திரம் பாச இலக்கணம் பற்றியது. ஆறும் சூத்திரம் பதி இலக்கணம் குறித்துப் பேசுகின்றது.

சாதனவியலில் அடங்குவன ஏழு, எட்டு, ஒன்பது எண்ணிட்ட சூத்திரங்கள் ஆகும். ஏழாம் சூத்திரம் சாதக உரிமை பற்றியும், எட்டாம் சூத்திரம் சாதகன் இயல்பு பற்றியும், ஒன்பதாம் சூத்திரம் சாதக முறை பற்றியும் பேசுகின்றன.

பயனியலில் பத்து, பதினொன்று, பன்னிரெண்டு எண்ணிட்ட சூத்திரங்கள் அடங்கும். பத்தாம் சூத்திரம் பெத்தநீக்கம் பற்றியும், பதினொன்றும் சூத்திரம் முத்திப்பயன் பற்றியும் பன்னிரெண்டாம் சூத்திரம் சீவனமுத்தி நிலை பற்றியும் பேசுகின்றன.

(இ) சைவச் செம்பொருட்டுணிவில் கூறப்பெறும் தத்துவங்கள்

முதல்வன் தன் அறிவாற்றலைக் (சித்சக்தி) கொண்டு உலகின் முதற்காரணமாகிய மாயையைக் கலக்குவன். மாய், ஆ என்னும் இரு எழுத்துக்களாலான இச்சொல்லில் 'மாய்' அழிதலையும் 'ஆ' தோன்றுதலையும் குறிக்கும். மாயை அசித்தும். அசத்துமான சடப் பொருள். அது உருவற்றது. பகுப்புக்கள் அற்றது. எனவே அது என்றும் அழியாதது. அது சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை என மூவகையாக அறியப்படும். முதல்வன் மாயையைக் கலக்கும்போது சொல் உலகமும் பொருள் உலகமும் தோன்றும். மாயையின் காரியமாகத் தோன்றும் இவை மாயேயம் எனப்பெறும். இவைகளே தத்துவங்கள் என்றும் குறிக்கப்பெறும்.

மாயையினின்றும் தோன்றும் தத்துவங்கள் முப்பத்தாறு எனச் சைவம் நிறுவுகின்றது. அவை ஆன்ம தத்துவங்கள், வித்தியா தத்துவங்கள், சிவ தத்துவங்கள் என மூன்று வகைப்படுத்தப்படும்.

(1) ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கு ஆகும். அவை வருமாறு:

ஐந்து பூதங்கள்	:	நிலன், விசும்பு, வளி, தீ, நீர்
ஐந்து தன்மாத்திரைகள்	:	சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்
ஐந்து ஞானேந்திரியங்கள்	:	கண், மூக்கு, செவி, நாவு, உடல்
ஐந்து கர்மேந்திரியங்கள்	:	கை, கால், வாய், எருவாய், கருவாய்
நான்கு அந்தக்கரணங்கள்	:	மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.

(2) வித்தியா தத்துவங்கள் ஏழாகும். அவை வருமாறு: காலம், நியதி, வித்யா, ராகம், கலா, புருடன், மாயா.

(3) சிவ தத்துவங்கள் ஐந்தாகும். அவை வருமாறு: நாதம், விந்து, சாதாக்கியம், மகேஸ்வரி, சுத்த வித்தியா.

இம் முப்பத்தாறு தத்துவங்களின் துணைகொண்டே ஆன்மாக்களுக்கு அறிவு நிகழ்கிறது. விளக்கு எரிதற்குத் திரியும், எண்ணெயும், கலமும் பிறவும் வேண்டப்பெறுவதுபோல் உயிருக்கு இத்தத்துவங்கள் வேண்டப்பெறுகின்றன.

தத்துவங்கள் வழித்தோன்றும் அறிவு உயிருக்கு ஒரு குறிப்பிட்ட வரையறை மட்டுமே பலன் வருவதாய் அமையும். உயிர் அவைகளைக் கடந்து செல்லுதல் வேண்டும்;

இங்ஙனம் அவை உயர்ந்து செல்லுதற்குச் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவை சாதனங்களாக அமைகின்றன எனக் கண்டோம்.

சரியை ஆலயப்பணி ஏற்றலைக் குறிக்கும். அது தாசமார்க்கம் எனப்பெறும். இறைவனோடு அடிமை - ஆண்டான் தொடர்பில் நிற்றலை அது குறிக்கும். இந்நெறி ஒழுகுவார்க்குச் சிவலோகப்பேறு (சாலோகம்) கிட்டும்.

கிரியை அல்லது சத்புத்திர மார்க்கம். ஆன்மாவை இறைவனோடு தந்தை - மகன் போன்று உறவுகொள்ள வைக்கின்றது. இதன்மூலம் கிட்டும் பேறு சிவனோடு நெருங்கி நிற்கும் பேறாகும் (சாமீபம்).

யோகம் எனப்பெறும் சகமார்க்கம் புலன்களை அடக்கி நிறுத்திச் சிவனை ஒருநிலைப்பட்ட மனத்துடன் சிந்தித்தலையுணர்த்தும். இறைவனை நண்பனைப்போல் பாவித்தல் இந்நெறியின் சிறப்பாகும். இந்நெறி ஒழுகுவார்க்குச் சிவரூபம் (சாரூபம்) கிட்டும்.

ஞானம் இம்மூன்று நெறிகளுக்கு மேம்பட்டு நிற்பது ஞான நெறியாகும். அது இருள்நிலை, மருள்நிலை இரண்டனையுங் கடந்த அருள்நிலை (சுத்தாவஸ்தை) எனப்படும். இந்நிலையில் ஆன்மா இறைவனோடு கலந்துறையும் நிலை இருவினையொப்பு, மலமரிபாகம், சத்திநிபாதம், சற்குரு தரிசனம் என்பவற்றால் விளக்கப்படும். இந் நெறி ஒருகுவார்க்குக் கிட்டும் பேறு சாயுச்சியம் எனப்படும். தத்துவங்கள் அனைத்தையும் கடந்து நிற்போன் இறைவன். அவன் தத்துவாதீதன் எனப்பெறுவன்.

சைவ சித்தாந்தம் தத்துவங்கள் பற்றிக் கூறும் கருத்தினை அப்பர் பெருமான் தம் தேவாரப் பாடலொன்றில் அழகுற எடுத் துரைக்கின்றார்:

'தத்துவந் தலை கண்டறி வாரிலைத்
தத்து வந்தலை கண்டலர் கண்டிலர்
தத்து வந்தலை நின்றவர்க் கல்லது
தத்து வனலன் தண்புக லூரனே.'

தத்துவங்களைக் கடக்கும் முயற்சியிலீடுபடுவோர் இல்லை; தத்துவங்கள் தலைக்குமேல் இருந்தால் காணப்பெறுவது ஏதும் இல்லை; தத்துவங்களைக் கடந்து அவற்றின் உச்சியில் நிற்போர்க்கு மட்டுமே இறைவன் உண்மையைக் காட்டுவோன் என்பது இப் பாடற் கருத்தாகும்.

(ஈ) வேதாந்தமும் சித்தாந்தமும்

சைவம் மிகப் பழைய காலந்தொட்டே தமிழகத்தில் தழுவப் பெற்ற சமயம் என்பதனை முதல் அத்தியாயத்தில் கண்டோம். தொல்காப்பியத்தில் இறைவனுக்குத் தரப்பட்டிருக்கும் 'கந்தழி' என்னும் பெயர் கட்டுகள் அற்றவனாய் அவன் விளங்குகிறான் என் பதனைக் குறிப்பதைக்கொண்டு பாசம் அல்லது கட்டுபற்றிய தெளிவு அக்காலத்தே இருந்திருத்தல் வேண்டும் என்று தெளிந் தோம். அன்றுதொட்டுச் சைவம் தமிழகத்தில் ஆக்கமும் வளர்ச்சி யும் வளமும் பெற்று வந்திருப்பதற்குச் சங்க இலக்கியம் போன்ற இலக்கிய நூல்களில் ஆதாரங்கள் காணக்கிடக்கின்றன. சங்க காலத்தில் (கி. பி. 1,2 நூற்றாண்டுகள்) தொகுக்கப்பெற்ற ஐங்குறு நூறு என்னும் நூலில் வரும் ஒரு பாடல் இவ்வாறு அமைந்துள்ளது:

'நீலமேனி வாலிழை பாகத்
தொருவ னிருதாள் நிழற்கீழ்
மூவகை உலகு முகிழ்த்தன முறையே.'

இப்பாடலில் வரும் சொற்கள் ஒவ்வொன்றும் சைவ சித்தாந்தத் தின் கருத்துக்களை உணர்த்துகின்றன. சிவன் அருளாகிய சக்தி

யோடு இணைந்து மாதொருபாகனைக் காட்சிதரும் மாண்பு முதல் அடியின் வரும் சொற்களால் அறியப்படும். மூன்றாவது அடியில் வரும் 'மூவகை உலகு முகிழ்த்தன முறையே' என்னுஞ் சொற்றொடர் மெய்கண்டாரின் முதற் சூத்திரம் கூறும் 'அவன், அவள், அது' என மூவகையாகச் சுட்டியறியப்படும் உலகினைக் குறிப்பதாகக் கொள்ள இடமுள்ளது.[1] இரண்டாம் அடியில் வரும் 'இன்தாள் நிழல்' என்னும் தொடர் இறையியைபுத் தன்மையைச் சைவ சித்தாந்தம் எடுத்தோதும் சொற்களால் ஆகியது என்பது குறிப்பிடத்தகுந்ததாகும்.

சைவ நூல்களுள் மிகப் பழையதான திருமந்திரத்தில் சித்தாந்தக் கருத்துக்கள் வகைப்படுத்தித் தரப்படுகின்றன. இந் நூலுக்கு முன்பே தோன்றிய திருக்குறளிலும் சைவ சமயக் கருத்துக்கள் பொதிந்துகிடப்பதை அறிஞர் விளக்குவர். திருவள்ளுவரைச் சைவர் திருவள்ளுவ நாயனார் என்றே கூறுவர்.

சைவ சித்தாந்தம் ஆகம நூல் கருத்துக்களை எடுத்தோதுகின்றது என அறிகிறோம். வேதக் கருத்துக்களும் ஆகமக் கருத்துக்களும் ஒன்றோடு ஒன்று முரணுவன அல்ல என்ற தெளிவு சைவப் பேரறிஞர்க்கு அன்றுதொட்டே இருந்து வந்துள்ளது. திருமூலர்,

'வேதமோ டாகமம் மெய்யா மிறைவநூல்
ஓதுஞ்சிறப்பும் பொதுவுமென் றுள்ளன
நாத னுரையிவை நாடி லிரண்டந்தம்
பேத மதென்பர் பெரியோர்க் கபேதமே'

எனக் கூறுகின்றார்.

'வேதம்பசு; அதன்பால் மெய்யாகமம்; நால்வர்
ஓதுந்தமிழ் அதனின் உள்ளுறுநெய்—போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்த தமிழ் நூலின் திறம்'

என்னும் பாடற் கருத்தும் ஆய்ந்து தெளிந்த சைவ வுள்ளத்தின் சிறப்பை எடுத்தோதுகின்றது.

நான்மறையின் வழியே வரும் செம்பொருட்டுணிவு அதன் சிறப்பியல்புகளைப் பிழிந்து தருகின்றது என்றும் அறிஞர் கூறுகின்றனர். வேதாந்தம் எனப்பெறும் உபநிடதக் கருத்துக்களின் உயர் சிறப்பினைச் சித்தாந்தம் சிறப்புற எடுத்துக்காட்டுகின்றது. எனவே அது வேதாந்தத் தெளிவு என்பர் உமாபதி வேதநாயனார்.

---

[1] *Introduction and History of Saiva Siddhanta*, G. Subramania Pillai, P.I ff in 'Collected Lectures.'

'புறச்சமயத்தவர்க் கிருளாய் அகச்சமயத் தொளியாய்ப்
புகல் அளவைக் களவாகிப் பொற்பணிபோல் அபேதப்
பிறப்பிலதாய் இருள்வெளிபோற் பேதமும்
சொற்பொருள்போல்
பேதாபேதமும் இன்றிப் பெருநூல் சொன்ன
அறத்திறனல் விளேவதாய் உடலுயிர்கண் அருக்கண்
அறிவொளிபோல் பிறிவரும் அத்துவிதமாகும்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாம் சைவ
சிந்தாந்தத்திறன் இங்குத் தெரிக்கலுற்ரும்'

என்பது அவர் வாக்கு.

அத்துவிதம் என்பதனே வேதாந்தம் விளக்கும் முறை சரியன்று: 'ஏகம் இரண்டு என்னுமல் சும்மாவிரு' எனச் சித்தாந்தம் விளக்கும் முறையே சரி என்பது சைவ அறிஞர் தம் முடிவாகும்.

சைவ சித்தாந்தத்தில் ஆழ்ந்த ஆன்மீக அனுபவங்கள் அறிவு நுட்பத்துடன் விளக்கப்பெறும் மாண்பு அதனேக் கற்போர் அனேவராலும்—மேனுட்டு அறிஞர்கள் உள்ளிட்ட பலராலும்—போற்றப் பெறுகின்றது. காரண-காரிய முறையில் கருத்துக்களே நுட்பமாக ஆயும் தெளிவும், வாழ்வியல் அளவில் மதமாகச் சைவத்தைத் தழுவுவதற்கான அறிவுத்தளம் அமைக்கும் சிறப்பும் சைவ சித்தாந்தத்தின் தனிச்சிறப்புக்கள் ஆகும். சித்தாந்திகளின் அறிவுத் தெளிவு எத்தகையது என்பதனே உமாபதியார் கூறிக் காட்டும் பாடலொன்றுடன் இவ்வத்தியாயத்தை முடிப்போம்.

'தொன்மையவாம் எனும் எவையும் நன்ருகா இன்று
தோன்றியநூல் எனும் எவையும் தீதாகா துணிந்த
நன்மையினர் நலங்கொள்மணி பொதியுமதன் களங்கம்
நவையாகா தெனஉண்மை நயந்திடுவர் நடுவாந்
தன்மையினர் பழமைஅழ காராய்ந்து தரிப்பர்
தவறுநலம் பொருளின்கட் சார்வாராய்ந் தறிதல்
இன்மையினர் பலர்புகழில் ஏத்துவர் ஏதிலருற்று
இகழ்ந்தனரேல் இகழ்ந்திடுவர் தகக்கென ஒன்றிலரே.'

4. சைவ வாழ்வியல்

(அ) வழிபாட்டுநெறி

சைவ வாழ்வியல், வழிபாட்டினை மையமாகக் கொண்டதாகும். வழிபாட்டுநெறியே அனைத்து அறத்துக்கும் ஒழுக்கத்துக்கும் ஊற்றாய்க் கருதப்படுகின்றது. அறிவு, ஆராய்ச்சிகளால் இறையனுபவம் பெறுதல் இயலாது; பக்தியின் வழிபட்ட தொழுகை ஒழுக்கத்தால்தான் அது கிட்டும் என்பது சைவத் தெளிவாகும்.

சைவம் வழிபாட்டினை இரு வகையாகக் காண்கின்றது. அவை ஆலய வழிபாடு, நினைப்பு வழிபாடு என்பனவாகும்.

(1) ஆலய வழிபாடு

தமிழகத்தில் பழங்காலந்தொட்டே ஆலய வழிபாடு இருந்து வந்துள்ளது. ஊரின் மையம் ஆலயமாகப் பல இடங்களில் அமைந்தது. சமுதாய, சமய வாழ்வின் உயிர்த்துடிப்புநிலையாக அது விளங்கியது. ஆலயப்பணி செய்வதில் மக்கள் ஆர்வம் காட்டலாயினர். பொன்னும் பொருளும் மட்டுமின்றித் தங்கள் கலை, இலக்கியப் படைப்பாற்றலையும் கலைஞர்கள் ஆலயத்தில் படைத்து அதன் அழகையும் சிறப்பையும் கூட்டினர். இதற்குச் சான்றாக இன்று தமிழகத்தில் பல சைவ, வைணவ ஆலயங்கள் உள்ளன. தேவாரப் பாடல்களும் பாடப்பெற்றது பலப்பல திருத்தலங்களில்தான்.

தமிழ் மக்கள் சிவபெருமான் கோவில் சென்று அங்குப் பூவும் நீரும் கொண்டு அவர்க்கு நீராட்டு நடப்பித்தனர். ஆலயத்துக்குத் திருவலகிட்டனர்; அதனை மெழுகி விளக்குகள் ஏற்றினர். கோவிலை வலம் வந்தனர். இறைவன் திருமுன்றில் நின்று இசைமாரி பொழிந்தனர். இறைபுகழ் பாடியதோடு இறைவனிடம் வேண்டுதல்களையும் மன்றாட்டுக்களையும் செய்தனர். தங்கட்கும் தங்குடும்பங்கட்கும் ஊரார்க்கும் தேவைப்படும் நலன்களையும் ஆசிகளையும் வழங்கியருளுமாறு இறைவனிடம் வேண்டினர். அனைத்துக்கும் மேலாக இறையன்புக்காகவும் அருள் நெறிக்காகவும் இறைவனிடம் வேண்டினர். சங்க நூல்களுள் ஒன்றான பரிபாடலில்,

'யாஅ மிரப்பவை
பொருளும் பொன்னும் போகமுமல்ல. நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பி னொலிதா ரோயே'

என வரும் அடிகள் கருத்துக்கு உரியவை ஆகும்.

மிகப் பழங்காலத்தொட்டே தமிழகத்தில் முருக வழிபாடு இருந்து வந்துள்ளமைக்குத் திருமுறுகாற்றுப்படையில் சான்றுகள் உள்ளன. அக்காலத்தில் வழக்கிலிருந்த வழிபாட்டு மரபுகள் சில இன்றும் சிவ, முருகத் தலங்களில் இருப்பதனைக் காண முடிகின்றது.

தமிழ்க் கடவுளான முருகனுக்கு வேலன் (பூசாரி) வெறியாட்டு விழா எடுத்த செய்தி பரிபாடலில் காணக்கிடக்கின்றது.

'மூவிரு கயந்தலை முந்நான்கு முழவுத்தோள்
ஞாயிற்றேர் நிறத்தகை நளினத்துப் பிறவியை
காஅய கடவுள் சேஎய் செய்வேள்
சால்வ தலைவ'

என அவன் முருகனை விளித்து வழிபட்டான். முருகப்பெருமானிடம் புலவர் பெருமக்கள் செய்யும் இனிய வேண்டுதல்கள் பரிபாடலில் உள்ளன. கடுவனிளநாகனார், குன்றம்பூதனார், நல்லழிசியார், நல்லச்சுதனார், கேசவனார் போன்ற பெரியோர்களின் கருத்தாழம் மிக்க பாடல்கள் வழிபாட்டுநெறியினைச் சிறப்பித்துக் காட்டுகின்றன.

'அன்னை யாகலி னமர்ந்தியாம் நின்னைத்
துன்னித் துன்னி வழிபடுவதன் பயம்
இன்னு மின்னுவவை யாருக
தொன்முதிர் மரபினின் புகழினும் பலவே'

என்னும் கேசவனாரின் பாடல் படிக்குந்தொறும் இன்பந் தருவதாகும்.

திருமூலர் ஆலய வழிபாட்டின் சிறப்பினைப் பலபட விளக்கியுள்ளார். சிவாலயம் சென்று தாமரை, நீலம், கழுநீர், நெய்தல், பூகம், மாதவி, மந்தாரம், தும்பை, மகிழ், மரபுன்னை, மல்லிகை, செண்பகம், பாதிரி, செவ்வந்தி ஆகிய மலர்கள் கொண்டு வழிபடுதல் வேண்டும் என அவர் கூறுவர். சந்தனம், குங்குமம், கற்பூரம், அகில் ஆகியவற்றை நீரில் குழைத்துச் சிவனுக்குச் சாத்துதல் வேண்டும்; அவனுக்குச் சோறும் படைத்து விளக்கேற்றிப் புகை தீபம் கொண்டு அவனைத் தொழுதல் வேண்டும் என்றும் அவர் கூறுவர்.

'இலைதொட்டுப் பூப்பறித் தெந்தைக்கென் றெண்ணி
மலர் தொட்டுக் கொண்டேன்'
'ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியும்
தேடியும் கண்டேன்'

என அவர் கூறும் அடிகளால் ஆலய வழிபாட்டில் அவர்க்கு இருந்த ஈடுபாட்டினைக் காணமுடிகின்றது. இவ்வனுபவத்தினைப் பெறுதற்கு அவர் மக்களை கூவியழைக்கின்றார்:

'கூடியும் நின்றும் தொழுதெம் இறைவனைப்
பாடியுள்ளே நின்று பாதம் பணிமின்கள்
ஆடியுள்ளே நின்று அறிவுசெய் வார்கட்கு
நீடிய வீற்றுப் பசுவது வாமே'

என்பது அவர் பாடல்.

சமய குரவர்கள் அனைவரும் ஆலய வழிபாட்டின் சிறப்பினைப் பலபடப் பாடியுள்ளனர்.

'சித்தந் தெளிவீர்கள், அத்தன் ஆரூரைப்
பத்தி மலர்தூவ முத்தியாகுமே'

என்கிறார் ஆளுடைய பிள்ளையார்.

'நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சேநீவா
நித்தலுமம் பிரானுடைய கோயில்புக்குப்
புலரவதன்முன் அலகிட்டு மெழுகுமிட்டுப்
பூமாலை புனைந்தேந்திப் புகழ்ந்துபாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீஎன்றும்
ஆரூரா என்றென்றே அலறாநில்லே'

எனத் தம் நெஞ்சுக்குக் கூறுகின்றார் ஆளுடைய அரசர்.

'மத்த யானை ஏறி மன்னர் சூழவரு வீர்காள்
செத்த போதி லாருமில்லை சிந்தையுள் வைம்மின்கள்
வைத்த உள்ளம் மாற்ற வேண்டி வம்மின் மனத்தீரே
அத்தர் கோயில் எதிர்கொள் பாடி என்பத டைவோமே'

என்பது ஆளுடை நம்பிகள் பாடல்.

'பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்

கூவுமின் தொண்டர் புறநிலாமே
குனிமின் தொழுமின்எம் கோன்எங்கூத்தன்
தேவியும் தானும்வந் தெம்மை யாளச்
செம்பொன்செய் கண்ணம் இடித்தும் நாமே'

என மக்களை ஆலய வழிபாட்டுக்குக் கூவியழைக்கின்றார் மணிவாசகர்.

சிவபிரானுக்குத் தமிழகத்தில் நூற்றுக்கணக்கில் ஆலயங்கள் உள்ளன. அவற்றுள் பஞ்சபூதத் தலங்கள் குறிப்பிடத்தகுந்தனவாகும். இவ்வைந்து ஆலயங்களில் இறைவனின் இருப்பு நீர், தீ, காற்று, மண், விசும்பு ஆகிய லிங்கங்களால் சிறப்பிக்கப் பெறுகின்றது.

திருவானைக்கா	—	அப்பு லிங்கம் (நீர்)
திருவண்ணமலை	—	தீ லிங்கம் (தீ)
காளஹஸ்தி	—	வாயு லிங்கம் (காற்று)
காஞ்சி	—	பிருத்வி லிங்கம் (மண்)
சிதம்பரம்	—	ஆகாச லிங்கம் (விசும்பு)

ஆலயஞ்சென்று இறைவனை வழிபடுமுன்னர் அடியார்கள் அதிகாலையில் துயிலெழுந்து நீராடி, தோய்ந்துலர்ந்த ஆடை அணிந்து நெற்றியிலும் உடலிலும் திருநீறு பூசி அமைதியான மனத்துடன் இருத்தல் வேண்டும் எனச் சைவர் வற்புறுத்துவர்.

ஆலயத்தை அணுகியதும் கோபுரத்தை நோக்கி வழிபடுவர். அதனைத் தூலலிங்கமாகக் கருதி அங்ஙனம் வழிபடுவர். மிதியடிகளைக் களைந்து ஆலயத்தினுள் நுழைந்ததும் கொடிமரத்தின் அருகில் தரையில் விழுந்து வணங்குவர். எழுந்து மணிவாசகரின் சிவபுராணப் பகுதிகளை ஓதியவண்ணம் அடியார்கள் சிலர் ஆலயத்தை ஒருமுறை வலம் வருவர். அடுத்து, கொடிமரத்திற்கு முன் அமைந்துள்ள பலிபீடத்தை நெருங்குவர். அங்கு நந்தி உருவம் இருக்கும். நந்திதேவரை வணங்கிவிட்டு உட்செல்வர். முதலில் பிள்ளையாரின் சந்நிதிக்குச் சென்று சிரத்தில் இரு கரங்களாலும் குட்டிக்கொண்டு மூன்று முறை தோப்புக்கரணம் போடுவர்.

இவைகளைச் செய்து முடித்தபின்னர் ஆலயத்தின் மூலத்தானத்தில் அமர்ந்துள்ள மூர்த்தியை இருகை கூப்பி வணங்குவர். அங்ஙனம் வணங்கும்போழ்து தேவார திருவாசகப் பாடல்களைச் சில அடியார்கள் ஓதுவார்கள். பின்னர், அம்பாளையும் உற்சவ மூர்த்திகளையும் வணங்கிவிட்டு ஆலயத்தை இரண்டாம் முறையாக வலம் வருவர். அங்ஙனம் வலம் வரும்போது பிராகாரத்தில் உள்ள நால்வர், அறுபத்துமூவர், சேக்கிழார் ஆகியோரின் மூர்த்திகளை வணங்குவர்.

ஆலயத்தை மூன்றும் முறை வலம் வரும்போது தட்சிணு மூர்த்தி சந்நிதியில் நின்று திருப்பாடல் ஓதுவர். அதன்பின்னர் ஆங்கு அமர்ந்து திருவைந்தெழுத்தைத் தியானம் செய்வர். இவற்றின் பின்னர் துர்க்கையை வணங்கி இறுதியாக சண்டேஸ்வரரை அடைவர். அச் சண்டேஸ்வரர் சிவத்தியானத்தில் மூழ்கியிருப்பவர் ஆதலின் மெல்லக் கைதட்டி அவரை எழுப்புவர். துதிப் பாடல் ஓதுவர். 'எம் வழிபாட்டை ஏற்று எமக்கு அருளல் வேண்டும்' என முறையிட்டு ஆலயத்தின் உட்பிரகாரத்தினின்றும் வெளிவருவர். அங்ஙனம் வரும்போழ்து கொடிமரத்தருகில் மீண்டும் தரையில் விழுந்து வணங்குவர். ஆலயத்தில் கண்டு வணங்கிய திருமூர்த்திகளை மனத்தில் நினைத்தவாறே ஆலயத்தினின்றும் வெளியேறி இல்லம் திரும்புவர்.

ஆலய வழிபாட்டுடன் தொடர்புடையது விழா வழிபாடு ஆகும். 'அட்டமிமுன் சீருடை ஏழு நாள்' என அப்பர் பெருமான் குறிப்பிடும் நாட்களில் சிவபிரானுக்கு வீதியில் புறப்பாடு நடந்ததென்று அறிகிறோம். அது தவிர, ஆதிரை நாள், உத்திர நாள், பங்குனி உத்திரம் ஆகிய நாட்களிலும் விழா எடுக்கப்பட்டது. விழாக் காலத்தில் மக்கள் ஆலயத்தில் திரண்டு இறைவழிபாட்டில் ஈடுபடும் வழக்கம் இன்றும் உள்ளது. விழாக்காலத்தில் ஊர் முழுவதனையும் அலங்கரிப்பர். விழாவில் கலந்துகொள்ளும் அடியார்கள் பக்திப் பரவசத்தில் மூழ்கிடுவர். இதனை அப்பர் பெருமான்,

> 'குணங்கள் பேசிக் கூடிப் பாடித் தொண்டர்கள்
> பிணங்கித் தம்மிற் பித்தரைப் போலப் பிதற்றுவார்'

என்றும்,

> 'செந்துவர் வாயார் செல்வன் சேவடி சிந்திப்பார்'

என்றும் கூறிக் காட்டுகின்றார்.

பலதிறப்பட்ட அடியார்களின் கூட்டம் விழாக் காலத்தில் திரளும்.

> 'நணியார் சேயார் நல்லார் தீயார் நாடோறும்
> பிணிதான் தீரும் என்று பிறங்கிக் கிடப்பாரும்'

என ஆளுடை அரசர் அவர்களைக் கூறிக்காட்டுகிறார். அவர் காலத்து விழாக்களில் மணிப்பொற்கவரி, வெண்கொடி, சுடர்மா மணிகள், முத்துத்தாமங்கள், விதானங்கள் ஆகியவை அலங்கரிப்புக்காகப் பயன்படுத்தப்பட்டதாகக் குறிப்பிடுகின்றார். இன்றைய விழாக்களில் மின்விளக்குகள் கண்ணைப் பறிப்பதும், ஒலிபெருக்கிகள், மின்உந்துத் தேர்கள் ஆகியவை இடம்பெறுவதனையும் காண்கின்றோம்.

தமிழகத்தில் விழாக்கள் நடந்த திருத்தலங்கள் பல. அவற்றுள் பல இடங்களில் இன்றும் விழா நடைபெறுகிறது. திருவாரூர், திருவொற்றியூர், காஞ்சி, மதுரை போன்ற தலங்கள் குறிப்பிடத் தகுந்தவை ஆகும்.

இன்று தமிழகத்தில் மக்கள் திரண்டு வழிபாடு நடத்தும் ஆயிரக்கணக்கான ஆலயங்களுள் சிறப்புடை ஆலயங்கள் சில வற்றை அவை இருக்கும் இடம், எழுந்தருளியுள்ள இறைவர்—இறைவி பெயருடன் கீழே தருகிறோம்:

1. **தில்லை:—** நடராசர் [அதிகாலை பூசையின்போது சிற்றம்பலத்தின் வாயிற் கதவுகள் திறக்கப்படும். நடராசர் தரிசனம் கிட்டும்]

2. **சீர்காழி:—** **தோணியப்பர், பெரியநாயகி** [ஞான சம்பந்தர் தோன்றிய இடம். திருமுலைப் பால் உற்சவம் நடைபெறுகிறது. ஊழிக்காலத்தில் சிவபெருமான் பிரணவத்தையே தோணியாகக் கொண்டு கடலில்மிதந்து இத்தலம் வந்துறைவார் ஆயினர். எனவே அவர்க்குத் தோணியப்பர் என்னும் பெயர்]

3. **திருப்புன்கூர்:—** **சிவலோகன்** [நந்தனுர்க்கு நந்தி விலகித் தரிசனத்துக்கு வழிசெய்த தலம். இங்கு வடபக்கம் விலகியிருப்பதைக் காணலாம்.]

4. **திருவெண்காடு:—** **அகோர சிவம்** [இது ஆதி சிதம்பரம் எனப்பெறும். பட்டினத்தடிகள் வழிபட்ட திருத்தலம்]

5. **திருக்கடவூர்:—** **காலசம்ஹாரர், அபிராமி** [மார்க்கண்டர்க்கு அருள்செய்யக் காலனை அழித்ததால் இப்பெயர் பெற்றார்]

6. **திருவாரூர்:—** **தியாகேசர்** [நால்வராலும் சிறப்பித்துப் பாடப்பெற்றுள்ள திருத்தலம். கமலாலயம் என்னும் திருக்குளம் மிகப் பெரியது. கோயில் ஐந்து வேலி, குளம் ஐந்து வேலி, செங்கழுநீர் ஓடை ஐந்து வேலி]

7. **தஞ்சை:—** **பெருவுடையார்** [பெரிய கோவில் எனப் படும். இங்குள்ள நந்தி 12 அடி உயரம்,

20 அடி நீளம், 8 அடி அகலம், 25 டன் நிறை. இஃது ஒரே கல்லில் வடிக்கப் பட்டுள்ளது. இராஜராஜ சோழன் கட்டிய கோவில். அவன் தமக்கை குந்தவை பொருளுதவி செய்தனள்]

8. திருவையாறு:— ஐயாறப்பர் [ஐயாறு என்பது ஐந்து ஆறுகள் அல்ல. அழகிய காவிரி ஆறு என்று அது பொருள் தரும். அப்பர்க்கு கயிலை காட்சி கிட்டியது இங்குத்தான்.]

9. பேரூர்:— பட்டீசர், பச்சைநாயகி [இங்குத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் 1953-ல் தமிழில் அர்ச்சனையைத் துவக்கிவைத்தார்.]

10. மதுரை:— மீனாட்சி, சொக்கநாதர் [சிவபெருமானின் அறுபத்திநான்கு திருவிளையாடல்கள் நடைபெற்றது ஆலவாய் என்னும் இத்திருத்தலத்திலேயே ஆகும். இப்பேராலயத்தில் நாற்பத்திநான்கு கல்வெட்டுக்களும் நூற்றுக்கணக்கான சிற்பங்களும் ஆயிரங்கால் மண்டபம் ஒன்றும் உள்ளன. நால்வரும் இத் திருத்தலம் வந்து வழிபட்டுள்ளனர். சொக்கநாதர் அங்கையற்கண்ணியை மணந்த விழா சித்திரைத் திங்களில் கொண்டாடப்பெறுகின்றது.]

11. குற்றாலம்:— குற்றாலநாதர், குழல்வாய்மொழி அம்மை [ஐயாயிரம் அடி உயரமுள்ள மலை குற்றால மலை. முச்சிகரங்கள் உடையதாதலின் திரிகூடமலை எனப்பெறும். தேனருவி, செண்பகாதேவி அருவி ஆகியவை மிக்க உயரத்தினின்றும் வருகின்றன. அருவிக்கரை அருகில் கோவில் உள்ளது. திருக்குற்றால நாதர் லிங்க வடிவில் காட்சி தருகின்றார். வலப்பக்கத்தில் குழல்வாய்மொழி அம்மைக்குக் கோவில் உள்ளது. கோவிலின் வடபுறத்தில் சித்திர சபை உள்ளது. திருவாலங்காட்டில் இரத்தின சபையிலும், தில்லையில் பொன்னம்பலத்திலும்,

மதுரையில் வெள்ளியம்பலத்திலும், திருநெல்வேலியில் தாமிர சபையிலும் ஆடும் கூத்தர் இங்குச் சித்திர சபையில் ஆடுகின்றனர்.]

12. கன்னியாகுமரி:— பகவதி அம்மை [இங்குக் கன்னிக் குமரியாம் சக்தி, கிழக்கு நோக்கியவண்ணம் தவக்கோலத்தில் நிற்கின்றாள். அவள் அணிந்துள்ள மகுடத்தில் பிறை சந்திரன் ஒளி உமிழ்கின்றான்.]

13. காஞ்சி:— ஏகம்பரர், ஏலவார் குழலி [வரலாற்றுச் சிறப்புடைய இத்திருத்தலத்தில் கர்ப்ப கிரகத்தில் பிருதிவிலிங்க உருவிலும் அதற்குப் பின்னுள்ள மாமரத்தடியில் தம் துணைவி ஏலவார் குழலியோடும் சிவபெருமான் வீற்றுள்ளார். இது பட்டினத்தடிகள் பாடி வழிபட்ட தலங்களுள் ஒன்றாகும். பல்லவ மன்னர்களின் கலையார்வத்தைக் காட்டும் சிற்பங்கள் இங்கு உள்ளன.]

14. திருவொற்றியூர்:— ஆதிபுரீசுவரர் [கோவிலுள் நுழைந்ததும் மகிழடி உள்ளது. வன்தொண்டராம் சுந்தரர் சங்கிலியை மணந்த இடம் அந்த மகிழமரத்தடி என்பர். இங்குள்ள இலிங்கம் புற்று வடிவில் இருக்கிறது. அங்ஙனம் எழுந்தருளியுள்ள இறைவன் படம் பக்கநாதர் எனப்படுகிறார். பட்டினத்தார்க்கு முத்தி கிட்டியது இத்திருத்தலத்தில் தான்; வள்ளலார் தமது இளமை நாட்களில் இறையனுபவத்தோடு பாடி மகிழ்ந்ததும் இவ்வாலயத்தில் தான்.]

15. விரிஞ்சிபுரம்:— வழித்துணை நாதர், பசுங்கொடி [திருவாரூர்த் தேரழகு, திருவிரிஞ்சை மதில் அழகு என்பர். சிம்ம உருவில் வாயில் அமைத்துக் கட்டப்பட்டுள்ள குளம் சிம்மக்குளம் எனப்படுகின்றது. கார்த்திகை கடைஞாயிறு உற்சவம் இங்கு நடைபெறுகிறது.]

இத்தகு கோவில்களில் எழுந்தருளியுள்ள சிவனுக்கும் உமைக்கும் நாடோறும் நாள்வழிபாடு நடைபெறுகின்றது. திருப்பள்ளி எழுச்சி, நீராட்டு, ஒப்பனை, வழிபாடு, பள்ளியறை செல்லுதல் என்பன இவ்வழிபாட்டு முறைமையில் அடங்கும். வைகறையில் திருவாசகத் திருப்பள்ளி எழுச்சிப் பதிகத்துடன் இறைவன் துயிலெழுப்பப் பெறுவான். நீராட்டு காலையிலும் மாலையிலும் நடைபெறும். நீருடன் பால், தயிர், நெய், பழங்கள், சந்தனம் ஆகியவும் இதற்குப் பயன்படுத்தப்பெறுகின்றன. படிமங்கட்கு ஆடை அணிகலன்கள் அணிவித்து மலர் சூட்டுதல் ஒப்பனை எனப் பெறுகின்றது. அதனையடுத்து அவற்றுக்குப் புகைவிளக்குக் காட்டுதல், சோறு படைத்தல், மலர் தூவுதல், திருப்பதிகங்கள் ஓதுதல் ஆகியவை இடம்பெறுகின்றன.

விழா நாட்கள் மாதங்களின் உவா நாளில் அந்நாளோடு கூடும் நாள்மீன் பெயரால் வழங்கப்பெறுகின்றன. பங்குனி உத்திரம், வைகாசி விசாகம், கார்த்திகைத் திருக்கார்த்திகை, மார்கழித் திருவாதிரை, தைப்பூசம் முதலியன குறிப்பிடத்தகுந்த விழாக்கள் ஆகும். விழா நாட்களில் நாள் வழிபாட்டு முறைமை சிறப்புற நடந்தேறும். அதன் பின்னர் இறையுருவங்கள் ஊர்திகளில் ஏற்றப்பட்டு புறப்பட்டு ஊர்வலம் வரும். இறையுருவங்களின் வலக் காட்சி திருக்காட்சியாகவே அடியவரால் கொள்ளப்படும்.

(2) நினைப்பு வழிபாடு

ஆலய வழிபாடு, விழா வழிபாடு ஆகியவற்றுடன் நினைப்பு வழிபாடும் சைவத்தில் சிறப்பிக்கப்படுகின்றது. இதனை யோக வழிபாடு என்றுங் கூறுவர். உள்ளத்தையே கோயிலாக்கிக்கொண்டு இறைவனை வழிபடுதலே நினைப்பு வழிபாடாகும்.

'உடம்பெனும் மனையகத் துள்ளமே தகளியாக
மடம்பாடும் உணர்நெய்யட்டி உயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே'

என இவ்வழிபாட்டுக்கான முறைமையைக் கூறுகின்றார் அப்பர்.

யோகத்தின் பாற்பட்ட இந்நினைப்பு வழிபாட்டினை நாளும் செய்து மகிழ்ந்தவர் திருமூலர். உண்மையான நினைப்பு வழிபாட்டின் திறத்தைக் கூறும்போழ்து,

'எண்ணு யிரத்தாண்டு யோகம் இருக்கினும்
கண்ணு ரமுதினைக் கண்டறி வாரில்லை
உண்ணாடி யுள்ளே ஒளிபெற நோக்கினால்
கண்ணாடி போலக் கலந்து நின்றானே'

என்று அவர் தெளிவுரை தருகின்றார்.

திருமூலர் திருவாவடுதுறையில் அமர்ந்து தம் மனக்கோவிலில் சிவனை இருத்தி வழிபட்டனர். பூசலார் நாயனாரும், வாயிலார் நாயனாரும், பெருமிழலைக் குறும்ப நாயனாரும் நினைப்பு வழிபாடு செய்தமை பெரிய புராணத்தில் அறியக்கிடக்கின்றது.

நினைப்பு வழிபாட்டில் சிறந்தோங்குவது மெய்யுணர்வு வழி பாடு என்பர். யோக வழிபாட்டு முறைமையினின்றும் ஞான வழி பாட்டு முறைமை எழுகின்றது என்பதே கருத்து, முப்பொருள் உண்மை, மும்மலப் பிணிப்பு ஆகியவற்றை அறிந்து இறைவனை அருள்வழி நின்று அறிவுத்துணையுடன் அணையும் நெறியே மெய் யுணர்வு வழிபாட்டு முறை எனப்படும்.

'ஆருறின் தன்மை அறியா திருந்தேனுக்கு
ஆருறின் தன்மை அறிவித்தான் பேர்நந்தி
ஆருறின் தன்மை அருளால் அறிந்தபின்
ஆருறுக் கப்புறம் ஆகிநின் ருனே'

'சீவன் எனச்சிவன் என்ன வேறில்லை
சீவனர் சிவனுரை யறிகிலர்
சீவனர் சிவனுரை யறிந்தபின்
சீவனர் சிவனுயிட் டிருப்பரே'

என்பன திருமூலர் வாக்குகள் ஆகும்.

காமம் முதலிய அறுவகைப் பகைகளைக் களைந்து ஐம்புலன் களையும் அடக்கும்போழ்தே மெய்யுணர்வால் இறைவழிபாடு நடத்தமுடியும் என்பதனை,

'அகனமர்ந்த அன்பினராய் அறுபகைசெற்(று)
ஐம்புலனும் அடக்கி ஞானம்
புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத்
துள்ளிருக்கும். . . '

என்னும் சம்பந்தர் அடிகளால் அறியலாம்.

'கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

என்னும் குறட்பாவிலும் மெய்யுணர்வு வழிபாட்டின் மாண்பு எடுத்துரைக்கப்படுகின்றது.

இத்தகு மெய்யுணர்வின் வழிபட்ட வழிபாட்டினை மேற்கொள் வதால் மக்களுக்குப் பிறப்புக்களினின்றும் நீங்கும் பேறும் கிட்டும் எனச் சமய நூல்கள் கூறுகின்றன.

(ஆ) சமய ஒழுக்கம்

இறைவனை அன்பு வடிவினனுகவும் ஒளியாகவும் காணும் சைவம் அடியார்க்குக் கற்பிக்கும் ஒழுக்கம் அன்பொழுக்கம், ஒளி

ஒழுக்கம் எனச் சுருங்கக் கூறலாம். சைவம் இறையன்பை மட்டு மல்லாமல் அடியரிடம் நிறைந்து நிற்கவேண்டிய அன்பையும் வலி யுறுத்திக் கூறுகின்றது. ஒன்பது தந்திரங்களாலாகிய திருமந்திரத் தில் ஆசிரியர் யோகம் பற்றியும் சித்தாந்தம் பற்றியும் பெரிதும் பேசும்போழ்து ஆங்காங்கே சைவ ஒழுக்கத்தின் அறத்திட்பத்தை யும் விளக்கிச் செல்கின்றார். முதல் தந்திரத்தில் கொல்லாமை, புலால் மறுத்தல், பிறர்மனை நயவாமை, நல்குறவு, தானச்சிறப்பு, அன்புடைமை, கல்வி, கேள்வி, கல்லாமை நடுவுநிலைமை, கள்ளுண்ணாமை ஆகியவைபற்றிப் பல பாடல்கள் உள்ளன. இரண்டாம் தந்திரத்தில் பொறையுடைமை, பெரியோரைத் துணை கோடல் ஆகியனபற்றியும் பேசுகின்றார். ஆறும் தந்திரத்தில் தவம், துறவு, அருளுடைமை ஆகியவற்றை ஆய்கின்றார். ஏழாம் தந்திரத்தில் கூடாவொழுக்கம்பற்றி அவர் கூறும் கருத்துக்கள் சில உள்ளன. எட்டாம் தந்திரத்தில் புறங்கூறாமை, வாய்மை, அவாவறுத்தல் பற்றிப் பாடல்கள் உள்ளன.

திருமூலர் கூறும் அறநெறிக் கருத்துக்கள் வள்ளுவர் குறட் பாக்களோடு ஒப்புநோக்கத்தகுந்தவை என்பது இதனின்றும் புல னாகும். இல்லறத்தாரும் துறவறத்தாரும் ஒழுகவேண்டிய முறையை இரு பெரியார்களும் ஏறத்தாழ ஒரே முறையில் கூறிக் காட்டுகின்றனர். தமிழ்மறை, பொதுமறை எனப் போற்றப் பெறும் திருக்குறளில் பேசப்பெறுகின்ற அறவொழுக்கம் சைவ சமயநெறிக்குப் பொருந்துவது என்பது அறிஞர் முடிபாகும்.

> 'என்பே விறகா யிறைச்சி யறுத்திட்டுப்
> பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
> அன்போ டுருகி யகங்குழை வார்க்கன்றி
> என்போன் மணியினை யெய்த ஒண்ணாதே'

என்னும் திருமூலர் கூற்று பவுலடியார் கொரிந்தியர்க்குத் தீட்டிய முதன் மடலில் அன்புபற்றிப் பேசும் செஞ்சொற்களோடு ஒத்து நோக்கத் தகுவதாகும்.

சைவ வாழ்வியலில் புறத்தூய்மை, அகத்தூய்மை இரண்டும் வலியுறுத்தப்பெறுகின்றன. தனி மனிதனையும் அவனுடைய சமுதாய வாழ்க்கையையும் மையமாகக் கொண்டே வாழ்வியல் ஒழுக்கம் வகுக்கப்பட்டுள்ளது. வாழ்க்கையின் அனைத்துத் துறை களிலும் ஈடுபாடுகளிலும் அன்பு ஆட்சி செலுத்தவேண்டும் என்ப தனைத் தெரிவிக்கவே கள்ளுண்ணாமை, புறங்கூறாமை, பிறர்மனை நயவாமை, புலால் மறுத்தல், கூடாவொழுக்கம் ஆகியவை ஒழுக்க விதிகளாக வழங்கப்பட்டுள்ளன. தவிர்க்கப்பட வேண்டியவை களோடு ஆக்கப் பண்புகளும் ஒழுக்கவிதிகளாக வழங்கப்பட் டுள்ளன. அன்பு — ஜீவகாருண்யம் எனச் சைவப் பெரியார்கள்

குறிப்பிடும் பெரும் பண்பினின்றும் ஊற்றெடுப்பவையாக அவை வழங்கப்படுகின்றன.

இல்லறத்தார்க்குப் பெரிதும் வேண்டப்பெறும் விருந்தோம்புதல் சைவத்தில் பெரிதும் வலியுறுத்தப் பெறுகின்றது. திருத்தொண்டர் புராணத்தில் நாம் காணும் நாயன்மார்கள் இந்நெறி நின்று வாழ்ந்த சான்றோர்கள் ஆவார்கள். விருந்தோம்புதல், பிறர் பசி தீர்த்தல் ஆகியவற்றின் சிறப்பினைப் பேசும்போழ்து திருமூலர்,

'ஆர்க்கும் இடுமின் அவர்இவர் என்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை உடைவீர் விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே!'

என்றும்,

'யாவர்க்கும் ஆம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்கும் ஆம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்கும் ஆம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கும் ஆம் பிறர்க்கின்னுரை தானே'

என்றும் குறிப்பிடுகின்றார்.

இங்ஙனம் விருந்தோம்பும் வாய்ப்பு, இல்லறத்தோர்க்கு இருப்பதால் சைவத் துறவியர் இல்லறத்தாரைப் போற்றியே பாடியுள்ளனர். பெருந்துறவெய்திய பட்டினத்தடிகள்,

'காடே திரிந்தென்ன? காற்றே புசித்தென்ன? கந்தைசுற்றி
ஓடே எடுத்தென்ன? உள்ளன்பிலாதவர் ஓங்குவிண்ணோர்
நாடேயிடை மருதீசர்க்கு மெய்யன்பர் நாரியர்பால்
வீடே யிருப்பினும் மெஞ்ஞான வீட்டின்பம் மேவுவரே'

எனக் கூறுகின்றனர்.

செல்வத்துப் பயன் ஈதல்; அத்தகு ஈதல் இல்லறத்தில் சிறப்புறுகின்றது என்பதனை வலியுறுத்த வரும்போழ்து அவ்வடிகளார்,

'ஓயாமல் பொய் சொல்வார்; நல்லோரை நிந்திப்பார் உற்றுப்பெற்ற
தாயாரை வைவர்; சதி ஆயிரஞ் செய்வர்; சாத்திரங்கள்
ஆயார்; பிறர்க்குபகாரஞ் செய்யார்; தமை அண்டினர்க்கொன்று
ஈயார் இருந்தென்ன போயென்னகாண் கச்சி ஏகம்பனே!'

என்றும்,

'நாயாய்ப் பிறந்திடில் நல்வேட்டையாடி நயம்புரியும்
தாயார் வயிற்றில் நாராய்ப் பிறந்து பின் சம்பன்னராய்க்
காயா மரமும் வரளாங் குளமும் கல் ஆவுமென்ன
ஈயாரை ஏன் படைத்தாய் கச்சி ஏகம்பனே!'

என்றும் கூறிக்காட்டுகின்றனர்.

அன்புநெறியினை உயிரிரக்கம் (ஜீவகாருண்யம்) ஆன்மநேய ஒருமைப்பாடு என்னும் அரிய கொள்கைகள் வாயிலாக விளக்குவர் வள்ளலார். ஆறந்தங்களையும் கடந்து சைவத்தின் உயர்நிலையை எட்டிபிடிக்கும் சமரச சன்மார்க்க நெறியாகத் திகழும் மார்க்கத்துக்கு உயிரிரக்கமே அடிப்படை என்பது அவர் கருத்து.

அவர் கூறும் உயிரிரக்கத்தின் செழுமையையும் சிறப்பையும் காட்டக் கீழ்வரும் பாடல் ஒரு சான்றாகும்:

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்
வாடினேன் பசியால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோரென்
நேருறக் கண்டுளம் துடித்தேன்
ஈடில் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்சு
இளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்.'

'ஜீவ காருண்யம்' எனுந் தலைப்பில் அவர் எழுதியுள்ள அரிய கட்டுரையில் கீழ்வரும் கூற்றுக்கள் அடங்கியுள்ளன:

'புண்ணியம் என்பது ஜீவகாருண்யம் ஒன்றே; பாவம் என்பது ஜீவகாருண்யம் இன்மையே. ஜீவகாருண்யத்தாலேயே கடவுளின் இயற்கை விளக்கமான அருளை அடையமுடியும். ஜீவர்களெல்லாம் சர்வ சக்தியுள்ள கடவுளால் படைக்கப்பட்ட ஓர் உரிமையுள்ள சகோதரரே ஆவர். உயிரிரக்கம் உள்ளோர் சுகம் பெறுவர். அஃதின்றி அறிவும் அன்பும் அருள் விளக்கமும் தோன்றா . . . பசி நீக்கலும் கொலை நீக்கலும் விசேஷமான உயிரிரக்கம் எல்லா ஜீவர்களிடமும் கடவுள் விளக்கம் பொதுவாக விளங்குவதை அறிந்து சன்மார்க்கத்துக்கு ஒத்த சத்துவ ஆகாரத்தால் பொதுநோக்குடன் பசி தவிர்க்கவேண்டும் . . .'

இங்ஙனம் சைவ வாழ்வியலுக்கு வற்புறுத்தப்பெறும் அன்பு நெறி—உயிரிரக்கநெறியின் திறம்பற்றியே 'சைவம்' என்னுஞ் சொல் இன்று மக்களிடையே உயிர்க்கொலையின் வழிப்பட்ட புலால் மறுத்தலை உணர்த்துகின்றது.

இந்த அன்புநெறி சாதிப்புன்மையை கடிவதொன்றாகும். 'பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும்' என்பர் வள்ளுவர். இவ்வுண்மை

சைவத்தில் பெரிதும் சிறப்பிக்கப்பெறுகின்றது. திருத்தொண்டர் புராணத்துள் நாம் காணும் நாயன்மார்கள் பலப்பல குலத்தினர், வெவ்வேறு சாதியினர். ஆயின், அவர்கள் அனைவரும் திருத்தொண்டர் என்றமுறையில் சமஅளவில் சிறப்பிக்கப்படுகின்றனர். அறுபத்து மூன்று நாயன்மார்கட்கும் ஒரேவித பூசை, விழா, வணக்கம் ஆகியவை தமிழ்நாட்டுத் திருக்கோவில்களில் நடைபெறுகின்றன. கண்ணப்பர் வேட்டுவ குலத்தில் தோன்றியவர். திருக்குறிப்புத் தொண்டர் சலவைத் தொழிலர். திருநாளைப் போவர் பஞ்சமர். இப்படிப் பல ஜாதியினருள்ளும் நாயன்மார்கள் இருந்தனர். சுந்தரர் அந்தண குலத்தில் தோன்றியவர். பரவை என்னும் உருத்திர கணிகையையும், சங்கிலி என்னும் வேளாண் குலப் பெண்ணையும் மணந்தார். சாதிப்புன்மைக்கு அவர் வாழ்க்கையில் இடமே கிடையாது. அந்தணராகிய அப்பூதியடிகள் வேளாண் குலத்தவராகிய அப்பரைக் குருவாகக் கொண்டாடித் தம் இல்லத்தில் அவரை ஏற்று உபசரித்தார். அங்ஙனமே அந்தணராகிய திருநீலநக்கர் தம் இல்லம் வந்த திருநீலகண்ட யாழ்ப்பாணரை ஏற்று உபசரித்தார்.

சுந்தரர் தம்முடைய திருத்தொண்டத் தொகையில் நாயனார்கள் பெயர்களையெல்லாம் குறிப்பிட்டு அவர்கள் 'அடியார்க்கும் அடியேன்' எனக் கூறுகின்றனர். சாதிப்புன்மையைச் சாடும் அப்பர் பெருமான்,

'சாத்திரம் பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்திரமும் குலமுங் கொண்டேன் செல்வீர்?
பாத்திரஞ் சிவமென்று பணிதிரேல்
மாத்திரைக்குள் அருளுமாற்பேறரே'

எனக் கூறுவர்.

அன்புநெறியாம் சைவத்தினைத் தழுவுவோர் சில திருச்சின்னங்களையும் நோன்புகளையும் ஏற்பர். அவற்றைச் சுருங்கக் காண்போம்:

(1) திருநீறு

இது வீபூதி என்றும் வழங்கப்பெறும். வீபூதி என்னும் வடசொல் 'உயர்செல்வம்' எனப் பொருள்படும். சைவர்கள் இதனை உடம்பின் பல இடங்களில் அணிவர். சிறப்பாக நெற்றியில் தீட்டுவர். 'நீறில்லா நெற்றி பாழ்' என்பர் ஔவையார். ஊழிக்காலத்தில் அனைத்தையும் அழித்தநிலையில் சிவன் நீற்றை எடுத்து அணிவர் என ஆளுடைய பிள்ளையார் கூறுவர். சிவபிரான் திருநீற்றைச் சாந்து என உவந்து பூசுவர். அதனை அபிடேகத்துக்குரிய

பொருளாகவும் கொள்வர். திருநீற்றைப் பூசுவோரிடம் அவர் அமர்ந்துள்ளார் எனச் சைவ நூல்கள் கூறும். திருநீறே அந்தம், அருத்தம், சத்தியம், சுத்தம், சுந்தரம், தத்துவம், தந்திரம், பாக்கியம், புண்ணியம், பொருத்தம், மந்திரம் யாவும் என்பர்.

திருநீறு ஆன் வழியில் செய்தெடுப்பதாகும். வெங்கனலில் சுட்டெடுக்கப்படுவது. அதற்கு மணமும் சேர்ப்பர். அது அருமை, அழகு, ஒளி, கொழுமை, தூய்மை, நலம், வித்தகம், வெண்மை ஆகியவை உடையதாகும். அதனை நீருடன் சேர்த்துப் பிசைந்து திரிபுண்டரமாக அணிவர். அதனைச் சிலர் உட்கொள்வர். அதன் பெருமை பற்றிப் பேசும்போழ்து திருமூலர்,

'கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்காரமான சிவனடி சேர்வரே'

எனக் கூறுவர். திருஞானசம்பந்தர் திருவாலவாயில் திருநீற்றுப் பதிகம் ஒன்றினைப் பாடியருளினர். அதில்,

'மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரம் ஆவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு ஆலவாயன் திருநீறே'

'முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்தியம் ஆவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே'

என்பன போன்ற பதினொரு பாடல்கள் உள்ளன.

சைவர்கள் திருநீற்றினை தலை, நெற்றி, கழுத்து, மார்பு, வயிறு இருபக்கங்கள், இருகைகள், கைகளின் நடுப்பாகம், இருமணிக்கட்டு கள், முதுகு, கழுத்தின் பின்புறம் ஆகிய பதினைந்து இடங்களில் அணிவர். மந்திரங்கள் ஓதி அதை அணிவர். பொதுவாகச் 'சிவ சிவ' என ஓதி அணிவர். சம்பந்தர் அருளியுள்ள திருநீற்றுப் பதிகத்தை ஓதியவண்ணமும் அணிவர். அங்ஙனம் திருநீறு தரிப்போர்க்கு உடற்பிணி மட்டுமின்றி பிறவிப் பிணியும் தீரும் என்பர்.

(2) கண்டிகை

இது வடமொழியில் ருத்ராக்ஷம் எனப்படும். உருத்திர னுடைய கண் என்பது அதன் பொருள். இதனை அணிவதே மகா விரதம் என்பர் முனிவர்கள். ஆயிரம் மணிகளைத் தரிப்பவன்

தேவர்களால் வணங்கப்பெறும் பெருமை அடைவான். இம்மணி களை இரு தோள்களில் முப்பத்திரெண்டு, தலையில் ஒன்று, இரு கைகளில் பன்னிரெண்டு, கழுத்தில் முப்பத்திரெண்டு, இரு காது களிலும் பன்னிரெண்டாகத் தரிப்பாரும் உளர். உருத்திராக்க மணி இயற்கையிலேயே துளையுடன் கூடியதாகும். இதனைச் சிவலிங்க மாகவே கருதி வழிபடலாம் என்பர். கண்டிகை தரித்தோரைச் சிவனாகவே கருதி வணங்கவேண்டும் என்ற கருத்துடனேயே 'நேய மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரனெனத் தொழுமே' என்னும் சிவஞானபோதச் சூத்திரம் எழுந்தது.

சிவனுடைய கண்களினின்றும் வெளிப்போந்த கண்ணீரே கண்டிகை வடிவம் பெற்றதனால் அது கருணையின் சின்னம் என்பர்.

'அரிய மனமும் அறிவரிதாய்; அருவாய் நிறைவாயிருந்தும் முனர்
அமரர் திரிபுரர்செய் குறையறையக் கேட்டு முக்கண் வழிக்
கரியகளச் செம்புயல் கருணைபொழியப் பெருகுங்கடல் பிறந்து
கருதுமடியார் பவக்கடத்து மணியைத் துதித்திடுவாம்'

என்கிறார் சிதம்பர சுவாமிகள். என்றும் இறைவன் நம்மை நோக் கியவாறு உளர் என்பதனையும் கண்டிகை குறிக்கும் என்பர்.

சைவர்கள் பூணும் நோன்புகளுள் திங்கள் நோன்பு, திருவா திரை நோன்பு, உமாமஹேஸ்வர நோன்பு, சிவராத்திரி நோன்பு ஆகியவை குறிப்பிடத்தகுந்தவை ஆகும். இந்நோன்புகள் ஆரியச் சமயச் கலப்புடையவை ஆகும்.

திங்கள் நோன்பு ஏற்போர் கார்த்திகை மாதத்தில் முதல் திங்கட்கிழமையன்று இதனைத் துவக்குவர். வைகறையில் துயிலெழுந்து இறைவணக்கம், பூசை ஆகியவை செய்வர். ஆண் களையும் பெண்களையும் சிவனும் உமையுமாகவே பாவிப்பர். அவர்க்கு உண்டியளித்துத் தாங்கள் அன்று ஒரேமுறை உணவு உட்கொள்வர். ஆலயத்தில் சிவலிங்கத்துக்கு அபிஷேக பூசை செய்விப்பர். இத்தகு நோன்பு ஏற்போர்க்குப் பாவங்கள் அகன்று அனைத்து நலன்களும் கிட்டும் என்பர். பிள்ளையில்லாக் குறையும் தீரும் என்பர்.

திருவாதிரை நோன்பு பூணுவோர் மார்கழித் திங்கள் திருவா திரை நன்னாளில் சிவாலயஞ் செல்வர் அபிடேகங்கள் செய்வித்து வீடு திரும்பி உண்ணா நோன்பினை ஏற்பர். அனைத்து நலன்களும் புகழும் இந்நோன்பின் பலனாய்க் கிட்டும் என்பர்.

உமாமஹேஸ்வர நோன்பு கொள்வோர் இதனை கார்த்திகைத் திங்கள் முழுநிலவு நாளின்போழ்து கடைப்பிடிப்பார்கள். உமை -

சிவன் படிவம் வைத்துப் பூசிப்பர். தானதர்மங்கள் செய்வர். உண்ணு நோன்பும் மேற்கொள்வர். இந்நோன்பின் பலனுய் நவ நிதிகளும் கிட்டும் என்பர்.

சிவராத்திரி நோன்பு ஐவகைப்படும். அவை நித்திய சிவராத்திரி, மாத சிவராத்திரி, யோக சிவராத்திரி, பக்ஷ சிவராத்திரி, மஹா சிவராத்திரி என்பனவாகும்.

நித்திய சிவராத்திரி ஒவ்வொரு திங்களும் வரும் வளர்பிறை, தேய்பிறை சதுர்த்தசி நாட்கள். மாத சிவராத்திரி எனப்படுவது ஒவ்வொரு மாதமும் வரும் கிருஷ்ண பக்ஷ சதுர்த்தசியாகும். யோக சிவராத்திரி. திங்கட்கிழமையோடு அமாவாசை சேர்ந்து வருவதாகும். பக்ஷ சிவராத்திரி மாக மாதத்தில் சுக்ல பக்ஷ ப்ரதமை முதல் த்ரயோதசி வரை நோன்பு ஏற்று ஒருவேளை உணவு உண்டு சதுர்த்தசி நாளின் இரவு நான்கு சாமங்களிலும் பூசை செய்வதாகும். மகா சிவராத்திரி, மாசி மாதம், கிருஷ்ண பக்ஷ சதுர்த்தசி நாளில் வருவதாகும். அந்நாளில் உண்ணு நோன்பேற்று இரவு நான்கு சாமங்களிலும் பூசை செய்வர். அவற்றுள் இரண்டாம் சாமம் சிறப்புடையது. அது லிங்கோத்பவ காலம் எனப்படும்.

சைவர்கள் சிவ சின்னங்கள் தரித்தல், பஞ்சாக்கிரம் கூறுதல், நோன்புகள் ஏற்றல் ஆகியவற்றோடு சைவ நூல்களை ஓதக் கேட்பர். தேவார, திருவாசகப் பாடல்களைப் பற்றுடன் பாடுவர். இதற்கெனச் சில பள்ளிகள், பேராலயங்கள் உள்ள இடங்களில் இருக்கின்றன. ஆலயங்களில் நடைபெறும் சமயச் சொற்பொழிவுகளையும், புராண விளக்க உரைகளையும் கேட்பர். ஆலயங்களிலும், மடங்களிலும், அடியார்கள் நடத்தும் சங்கங்களிலும் இதற்குரிய வாய்ப்பு வசதிகள் கிட்டுகின்றன. இவற்றுடன் அடியார்கள் கூட்டமாகத் திரண்டு தமிழகத்திலுள்ள திருக்கோவில்களைக் கண்டு ஆங்கெல்லாம் இறைவழிபாடு நடத்தித் திரும்புவர். இங்ஙனம் பேருந்துகளிலும் புகைவண்டிகளிலும் செல்லும் அடியவர் கூட்டத்தை நாளும் காணலாம்.

சைவத்தில் தீட்சை முறைமை உள்ளது. வயது வந்த ஆண்கள் முறைப்படி பெறும் தீட்சை சமய தீட்சை எனப்படும். அத்தகையோர் பெறும் மற்றொரு தீட்சை விசேஷ தீட்சை எனப்படும். இத்தீட்சை பெற்றோர் ஓதுதல், வழிபடுதல் ஆகியவற்றில் சில சிறப்பொழுக்கங்களைக் கடைப்பிடித்தல் வேண்டும். இவ்விரு தீட்சைகளும் திருமுழுக்கு, திருவுறுதி நிலைப்படுத்தல் (Confirmation) போன்றவை ஆகும். நிருவாண தீட்சை பெறுவோர் சமயத் திருப்பணி செய்வர். இத்தீட்சை திருவருட்பொழிவு (Ordination) போன்றதாகும். ஆச்சார்யாபிஷேகம் என்பது சமயத் தலைவர்கள் நியமனம் பெறும்போழ்து அருளப்படுவதாகும்.

5. சைவ-கிறிஸ்தவ உரையாடல்

(அ) கிறிஸ்தவமும் பிற சமயங்களும்

கடந்த இருபது நூற்றாண்டுக்கால வரலாற்றில் கிறிஸ்தவத்திற்கும் பிற மதங்களுக்கும் இடையே இருந்துவந்துள்ள தொடர்பு பல ஏற்றத் தாழ்வுகளையும், மேடுபள்ளங்களையும் கொண்டதாகும். கிறிஸ்தவம் உள்ளிட்ட அனைத்து மதங்களும் குறிப்பிட்ட சில எல்லைகளையும் வரம்புகளையும் அமைத்துக்கொண்டு அவற்றைத் தாண்டாவண்ணம் தம்மைப் பாதுகாத்துக்கொள்வதில் பெருமை கொள்ளலாயின. திருச்சபை வரலாற்றினின்றும் கிறிஸ்தவத்தில் இப்போக்கு எந்த அளவுக்குச் செல்வாக்குப் பெற்றிருந்தது என்பது தெரியவருகின்றது.

பிற சமயக் கருத்துக்களை அறிந்துகொள்வதிலும் அவர்களோடு நட்புறவு கொள்வதிலும் கருத்தளவில் நாட்டம் செலுத்திய சில பெரியார்கள் கிறிஸ்தவத்தில் தோன்றவே செய்தார்கள். ஜஸ்டின், கிலெமென்து ஆகியோர் அவர்களுள் குறிப்பிடத்தகுந்தோர் ஆவர். அவர்கள் இருவரும் 'லாகாஸ்வித்து' (Logos Spermatikos) என்னும் கொள்கையினை அடிப்படையாக வைத்து கிறிஸ்துவுக்கும் பிற சமயங்களில் உள்ள சிறந்த கொள்கைகளுக்கும் பாலம் அமைக்க முயன்றார்கள். கிறிஸ்துவின் உடலெடுப்பில் இயங்கிய லாகாஸ், சத்திய விதையை ஹெராகிளைடிஸ், சாக்ரடீஸ் போன்றோரிடமும் தூவியது என அவர்கள் கூறினர்கள். சமயங்களில் சிறப்புடையவையாகத் தோன்றும் அனைத்தும் அனாதி திருவாக்காகிய கிறிஸ்துவின் திருச்செயற்பாடுகளே என அவர்கள் கொண்டார்கள். அத்தகைய கருத்துக்களும் கொள்கைகளும் திருச்சபையினால் பாராட்டப்படவேண்டும் என்றும் அவை யாவும் கிறிஸ்துவைப் பற்றிய முழுமையான அறிவினைப் பெறுவதற்கு உதவும் தூண்டுகோல்களாக ஏற்கப்படவேண்டும் என்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள்.

பழந்திருச்சபையில் வேறுசில அறிஞர்கள் இதற்கு நேர்மாறான கருத்துக்கொண்டிருந்தனர். கிறிஸ்தவத்தில் போற்றிக் காக்கப்படும் கொள்கைகளுக்கும் கருத்துக்களுக்கும் ஈடான சில கொள்கைகளும் கருத்துக்களும் கிரேக்கச் சார்புடைய சமயங்களில் இருப்பதனை அவர்கள் மறுக்கவில்லை. ஆயின், அவை உண்மைக்குப்

புறம்பானவை; உண்மை போன்றே பேய்களால் வழங்கப்படுபவை எனக் கொண்டார்கள்.

ஆக, திருச்சபையின் முதல் நான்கு நூற்றுண்டுக்கால வரலாற்றினை ஆராயும்பொழுது பரந்த நோக்கும் திறந்த மனமும் படைத்துப் பிற சமயத்தவருடன் உரையாடல் நடத்தக்கூடிய பக்குவம் அடைந்திருந்த பொரியார்களாக சிலரை மட்டுமே காண முடிகின்றது.

அடுத்துவரும் பதினைந்து நூற்றுண்டுகளில் கிறிஸ்துவத்துக்கும் பிற சமயங்களுக்கும் இடையே இருந்திட்ட தொடர்புகளை ஆயும் போழ்து அத்தொடர்புகள் அனைத்தும் வெறுப்பு, பகை ஆகியவற்றையே இரு சார்பிலும் எடுத்துக்காட்டுகின்றன. மதவெறி பிடித்து மக்கள் வாழ்ந்த காலம் அது எனலாம். சிலுவைப் போர்களும், வல்லரசுகளின் ஆதிக்கமும், அதனைச் சார்ந்து எழுந்த மிஷனெரி இயக்கமும் இக்காலத்தில்தான் இடம்பெறலாயின. இக்காலத்தில் கிறிஸ்தவம் பிற சமயங்களுடன் உரையாடல் நடத்துவதற்கான உண்மையான வாய்ப்புக்கள் இல்லாதொழிந்தன. ஆதிக்க தொனியோடும், அன்பற்ற வகையிலுமே பிற சமயத்தவர்க்கு அறைகூவல்களைக் கிறிஸ்தவம் விடுத்தது.

1910ஆம் ஆண்டில் எடின்பரோவில் நடைபெற்ற உலக மிஷனெரி மாநாடு அதுவரை நிலவிவந்த கருத்துக்களைக் கடந்து செல்லும் வகையில் சில தீர்மானங்களைக் கொணர்ந்தது. அவை குறிப்பிடத்தகுந்தவை ஆகும்:

(1) கிறிஸ்தவம் தனி முதற்சமயம். இயேசுகிறிஸ்துவில் சமயங்கள் அனைத்தும் முழுமை—நிறைவேற்றம்—பெறுகின்றன. அவர் சமயங்களைக் கடந்து நிற்பவர்.

(2) பிற சமயங்களில் போற்றத்தகுந்தனவாக உள்ள சிறப்பியல்புகள் அச்சமயத்தோர்க்கு அவற்றினும் மேம்பாடுடைய கருத்துக்களுக்கு வழிநடத்துகின்றவையாக அமையும்படி செய்தல் கிறிஸ்தவர் கடமை ஆகும்.

(3) மனித மனம் வேண்டி நிற்பவை யாவை என்பதை அனைத்துச் சமயங்களும் தெரிவிக்கின்றன. அவைகளை முழுமையாக நிறைவுசெய்ய வல்லவர் இயேசு கிறிஸ்துவே ஆவார்.

(4) பிற சமயங்களில் காணப்பெறும் உயரிய அமைப்புக்கள் தூய ஆவியானவரின் இயக்கத்திற்குச் சான்று பகர்கின்றன.

(5) கிறிஸ்தவர்களும் பிற சமயத்தவர்களும் கரிசனையுடன் கலந்துறவாடும்போழ்து, பிற சமயங்களிலுள்ள சிறந்த கருத்துக்களால் கிறிஸ்தவத்தின் சிறப்பு மேலும் விரிவடைகிறது.

அடுத்த மிஷனெரி மாநாடு 1918-ல் எருசலேம் நகரில் நடை பெற்றது. பிற சமயங்களில் உயரிய அம்சங்களாகக் கொள்ளக் கூடியவை யாவை என்பது பற்றிய ஆராய்ச்சி இம் மாநாட்டில் நிகழ்ந்தது. மாநாட்டில் கலந்துகொண்ட அறிஞர்கள் பலதிறப் பட்ட பதில்களைத் தந்தனர்.

'நற்செய்திப் பணியே முக்கியம்; பிற சமயங்களில் சிறந்தவை எனக் கருதப்பெறுகின்றவைகளை விட்டுக் கிறிஸ்துவை ஏற்பதே நற்செய்தியை ஏற்பதாகும்' என்னும் வகையில் சிலரும்,

'பிற சமயங்களில் உயர்ந்தவையாகக் காணப்படுகின்றவற்றை நற்செய்தியோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்; அங்ஙனம் ஒப்பிடா விட்டால் கிறிஸ்துவின் தனித்தன்மையை எங்ஙனம் செயலளவில் காட்டமுடியும்?' என்னும் போக்கில் சிலரும்,

'பிற சமயங்களில் காணப்பெறும் நற்கருத்துக்கள் சமயக் கருத்துக்களே தவிர திட்டவட்டமான கிறிஸ்தவக் கருத்துக்கள் அல்ல; கிறிஸ்தவம் பிற சமயங்களினின்றும் முற்றிலும் வேறுபட்டு நிற்கிறது' என்னும் முறையில் சிலரும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

பிற சமயங்களில் காணக்கிடக்கும் உயரிய அம்சங்களின் சிறப்பும் இடமும் யாவை என அம் மாநாட்டில் ஹென்டிரிக் கிரேமர் என்பவர் ஒரு வினா எழுப்பினார். அவரே 1938-ல் தாம்பரத்தில் நடந்த மாநாட்டிற்கான ஆயத்த நூலை எழுதினார். 'கிறிஸ்தவ மல்லாத உலகில் கிறிஸ்தவச் செய்தி' என்னும் தலைப்புக்கொண்ட அந்நூல் தாம்பரம் மாநாட்டிற்கு மட்டுமன்று, இன்றளவும் கிறிஸ் தவப் பிற சமயத் தொடர்பினை ஆய்வோர்க்குப் பெருந்துணையாக அமையும் ஒரு நூலாக உள்ளது. இந்நூலில் கிரேமர் வலியுறுத்து வனவற்றை இங்ஙனம் தொகுத்துக் கூறலாம்:

(1) கிறிஸ்தவத்திற்கும் இயேசுகிறிஸ்துவின்மூலம் கிட்டிய இறை வெளிப்பாட்டுக்கும் இடையே உள்ள வேற்றுமையை நாம் உணர்தல் வேண்டும். கிறிஸ்தவம் ஒரு சமயமே. அது முடிவான வெளிப்பாடு என நாம் பெருமைகொள்ளுதல் கூடாது.

(2) இயேசுகிறிஸ்து தனித்தன்மை வாய்ந்து உயர்ந்து காணப்படுவோர் ஆதலின் கிறிஸ்தவ வெளிப்பாடும் தனித் தன்மை வாய்ந்தது.

(3) கிறிஸ்துவின் வெளிப்பாடு ஒன்றே இறை வழி வருவது. பிற சமயங்களில் அடங்குவன யாவும் மனிதன் தோற்றுவித்தவை ஆகும். இந்த வகையில் கிறிஸ்தவ வெளிப்பாடு பிற மதங்கள்

அனைத்தினின்றும் முற்றிலுமாக மாறுபட்டது. அவற்றோடு இதற்குத் தொடர்பு கிடையாது. கிரேமருடைய கருத்துக்களின் சாரத்தை E. C. டெவிக் என்பார் தொடர்பின்மை கொள்கை (The doctrine of Discontinuity) என்பர். இந்தக் கொள்கையின் அடிப்படையில் கிரேமர் பிற சமயத்தவருடன் கிறிஸ்தவர் கூட்டுறவு மனப்பான்மையுடன் கருத்துரையாடல்களில் ஈடுபடுதல் கூடாது; அது கடவுளின் வார்த்தைக்குக் கீழ்ப்படியாமை ஆகும் என்றார். பிற மதத்தினரிடம் காழ்ப்புக் காட்டுதலையும் அவர் விரும்பவில்லை. கிறிஸ்துவின் வெளிப்பாடு ஒன்றே முழுமையான வெளிப்பாடு; பிற சமயங்களில் மனித முயற்சியையும் மனித அறிவையுமே காண்கிறோம் என்பதைக்காட்டவே அவர் தொடர்பின்மைக் கொள்கையினை அதிகமாக வலியுறுத்தினார்.

கிரேமரின் கருத்துக்களைச் சில கிறிஸ்தவப் பேரறிஞர்கள் ஏற்கவில்லை. இயேர்னஸ்ட் ஹாக்கிங் என்பார் அதற்கு முதன் முதலில் மறுப்புத் தெரிவித்து தொடர்புடைமை கொள்கையை வலியுறுத்தினார். அவரைத் தொடர்ந்து பேராசிரியர் A. C. பூகேட் தொடர்புடைமைக் கொள்கையைப் பெரிதும் விளக்கியுள்ளார்.[1] அவர் கூறும் தொடர்புடைமைக் கொள்கை நிறைவேற்றத்தைச் (Fulfilment) சிறப்பிக்கின்றது. இயேசுகிறிஸ்து திருச்சட்டத்தையும் இறையுரையாளர் கூற்றையும் அழிக்க அல்ல, நிறைவேற்றவே வந்தார்; அங்ஙனமே அவருடைய நற்செய்தி பிற சமய சட்ட, இறையுரைகளை நிறைவேற்றவே வருகிறது என அவர் கூறுவார். 'கடவுள் தம்மைப்பற்றிச் சாட்சியம் அருளாதிருந்ததில்லை' (அப். 14:17) என்னும் திருமறை அடிப்படையும் இக்கொள்கைக்கு அரண்செய்கிறது. கிறிஸ்துவின் மூலமாகவே இறைவெளிப்பாடு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் 'எல்லா மனிதரையும் ஒளிர்விக்கும் ஒளி' என்னும் யோவான் வாசகத்தை நாம் எங்ஙனம் புரிந்து கொள்வது என்னும் கேள்வியை இவரும் இவரைச் சார்ந்தோரும் எழுப்பி, இத்தகு நிறைவேற்ற நெறிக் கொள்கைக்குத் திருமறை இடம் தருகின்றது எனக் கூறுகின்றனர்.

இவர்கள் லாகாஸ் கொள்கையையும் சிறப்பிக்கின்றார்கள். பிற மதத்தினர் இறைவனைப்பற்றியும் வாழ்வு, மரணம் பற்றியும் கொண்டிருக்கும் கருத்துத்தளத்தின்மீதே கிறிஸ்தவ நற்செய்திப் பணியாளர்கள் கிறிஸ்துவை வழங்குகின்றனர்; ஆகவே இறை ஆயத்தம் பிற மதத்தாரிடம் விளக்கவே செய்கிறது; இறை இயக்கத்தின் வழிபட்டதே இறை ஆயத்தம் என வற்புறுத்துவர்.

---

[1] A. C. Bouquet, *The Christan Faith and Non-Christian Religions*, 1958.

நம் நாட்டில் J. N. ஃபார்குவர் இத்தகு கருத்துடையராய் 'கிறிஸ்தவம் இந்து மதத்தின் மகுடம்' என்னும் தலைப்பில் ஒரு நூல் எழுதினர். அவரைத் தொடர்ந்து கிறிஸ்தவ—இந்து சமயத் தொடர்பு பற்றி பேரார்வம் கொண்டு பல துறைகளிலும் முயன்று உரையாடல் முறை எழுதுவதற்குப் பெரிதும் தளம் அமைத்துத் தந்தவர் டாக்டர் பவுல் தேவானந்தன் ஆவார்.

(ஆ) பிற சமயத்தவருடன் உரையாடல்

இன்று உரையாடலுக்கான தளம் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது. ஆக்க உரையாடல்களோ அவற்றுக்கு ஆதாரமான 'உரையாடல் பற்றிய இறையிய'லோ இன்னும் முழுமையாக ஏற்படவில்லை.[1] 1969-ல் பம்பாயில் நடந்த 'சமயங்களுக்குள் உரையாடல்' என்னும் கருத்தரங்கினின்றும் வெளிப்போந்த கருத்துக்கள் சில கருதத் தகுந்தவை ஆகும். 'மக்கள் தங்கள் உண்மை வளர்ச்சியை உணர்ந்தவர்களாய், பொதுநலத்தினைக் கருத்தில்கொண்டு ஒருவருக்கொருவர் உரிய மதிப்புக்கொடுத்து மேற்கொள்ளும் கூட்டு முயற்சியே உரையாடல்' என்றும்,

'இரு சாரார் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்வதே உரையாடல். சமய அனுபவம் இம்முறையில் பகிர்ந்துகொள்ளப்பட முடியும். உரையாடலில் கலந்துகொள்வோர் உண்மையில் இருவர் அல்லர். மூவர் அதில் கலந்துகொள்கிறார்கள். கிறிஸ்து ஒருவர் மூலமாக மற்றவருடன் பேசுகிறார். இருசாராரும் கலந்துரையாடும் போது கிறிஸ்து தம் நோக்கத்தைப் படிப்படியாக நிறைவேற்றுகிறார். எனவே, உரையாடல் ஓர் இணைப்புறவுச் செயற்பாடாக எழுகின்றது. இது வழிபாடு, மன்றாட்டு, அமைதிக் கடைப்பிடிப்பு ஆகிய சூழல்களில் தெளிவுறும்' என்றும் அம்முடிவுகள் கூறுகின்றன.[2]

உரையாடலின் நோக்கம் இருசாராரின் சமயத்தினின்றும் புதிதாக உலகிற்கு ஒரு சமயத்தினை உருவாக்குதல் அன்று. இரு சமயங்களும் ஒன்றே என்பதனை நிறுவுவதும் அன்று. அதன் நோக்கம் கருத்து வேறுபாடுள்ள இருசாரார் தங்கள் கருத்து வேறுபாட்டு நிலையைச் சரிவர அடிப்படைத் தெளிவுடன் புரிந்துகொள்வதே ஆகும் எனத் தேவானந்தன் கூறுவர்.[3]

தேவானந்தன் உரையாடல் பற்றி வற்புறுத்திக் கூறியுள்ள இன்னொரு கருத்து, கிறிஸ்தவர்கள் உரையாடலில் இந்து சமயத்

---

[1] கிறிஸ்தவ நம்பிக்கையும் தற்கால விளக்கங்களும் என்னும் நூலில் தே. கு. தாமஸ் எழுதியுள்ள 'உரையாடல் இறையியலை நோக்கி' என்னும் கட்டுரை காண்க.

[2] *Religion and Society*. June 1969.

[3] *Preparation for Dialogue*, p. 141.

தவரோடு ஈடுபடும்போழ்து அவர்களுடைய அனுபவத்தை நம் அனுபவத்தில் கொண்டுவர முயலவேண்டும் என்பதே ஆகும். ஃபிரீட்மேன் என்பார் உரையாடல் பற்றி எழுதும்போழ்து 'அடுத்தவரின் அனுபவத்தையுணர்தலே உண்மையான அன்பாகும். தனக்குத்தானே பேசி மகிழ்வது தன்னுணர்வைப் பாராட்டிக் கொள்வதாகும். உண்மையான உரையாடலில் உணர்ச்சி அனுபவங்களைப் பொறுத்தவரையில் இருசாராரும் இடம் மாறிக்கொள்வர் . . .' எனக் குறிப்பிடுகின்றார்.[1]

பால் தில்லிக் என்பார், 'உரையாடல் அன்போடு கேட்கும் முறையில் நடைபெறும்போது இறையாவியின் இயக்கத்திற்கு இடம் ஏற்படுகின்றது' எனக் கூறுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.[2] இறையிக்கம், இறையருள் ஆகியவற்றை நாம் உரையாடலின் ஒவ்வொரு கட்டத்திலும் அறியமுடிகின்றது என்பர். நம்மோடு உரையாடும் பிற சமயத்தவர்மூலம் இறைவன் நம்மிடம் பேசுகின்றார் என்பதனை நாம் உணரமுடிகின்றது எனக் கூறுவர். திருச்சபை ஐக்கியத்திற்குட்பட்டோர் உரையாடும்போது ஒருவர்மூலம் மற்றவர்க்கு இறைவன் பேசுதல் போன்றே இதுவும் நிகழ முடிகிறது.

அங்ஙனம் பேசும் இறைவன் அடுத்த சாராரின் உள்ளார்வம், எழுச்சிநிலை ஆகியவற்றோடு நம்முடைய பணிவு, அடக்கம் ஆகியவற்றையும் குறைபாடுகளையுங்கூட எடுத்துக்காட்டிவிடுகிறார்.

(இ) சைவ சமயத்தவருடன் உரையாடல்

கிறிஸ்தவம் தமிழகத்திற்குக் கி.பி. முதல் நூற்றாண்டிலோ அன்றி இரண்டாம் நூற்றாண்டிலோ முதன் முறையாக வந்ததென்பது அறிஞர் முடிவு. ஆயின், சேர நாட்டில் சிற்சில இடங்களில் தோன்றிய கிறிஸ்தவச் சமுதாயம் பிற சமுதாயத்தவரோடு எவ்விதத் தொடர்புமின்றித் தங்களுக்கு வேலியமைத்துக்கொண்டு வழிபாட்டு நெறியையே சிறப்பித்து வந்துள்ளது. நற்செய்திப் பணியில் அன்றையக் கிறிஸ்தவர்கள் நாட்டம் செலுத்தியதாகத் தெரியவில்லை. திருவள்ளுவர், இளங்கோவடிகள் போன்றோரின் எழுத்தும் கொள்கையும் அவர்கட்குத் தெரிந்திருந்தனவா என்பதை அறியோம். தமிழ் மக்கள் கிறிஸ்துவைப்பற்றியும் கிறிஸ்தவத்தைப் பற்றியும் அதிகமாக அறிந்துகொள்வதற்கு அக்காலக் கிறிஸ்தவச் சமுதாயத்தினரின் வழிபாட்டு மொழி தடையாக இருந்ததென்பது திண்ணம்.

[1] Maurice S. Friedman, Martin Buber: *The Life Of Dialogue*. Routledge and Kegan Paul, 1955, P. 57.

[2] See *The Meaning of Dialogue* by R. W. Taylor in *Inter-Religious Dialogue*, Ed. by H. Jaisingh, CISRS, Bangalore, 1967, P. 61.

கி.பி. மூன்றும் நூற்றுண்டு முதல் ஐந்தாம் நூற்றுண்டு வரை களப்பிரர் என்போர் தமிழ் வேந்தர்களை வென்று ஆட்சி செலுத்தினர். அவர்கள் காலத்தில் சமண பௌத்த சமயங்கள் தமிழகத்தில் பெரிதும் பரவலாயின. மக்கள் பலரும் மன்னர்களும் அம்மதங்களைத் தழுவலாயினர். அம்மதஞ் சார்ந்த முனிவர்கள் தமிழறிஞர்களாகவும் விளங்கினர். இலக்கிய, இலக்கண, அறநெறி நூல்களைப் படைக்கலாயினர். கி.பி. ஆறும் நூற்றுண்டில் தமிழ்ச் சைவத்திற்கும் சமண பௌத்தங்கட்கும் நேரடிப் போராட்டம் ஆரம்பமாயிற்று. திருநாவுக்கரசர், நம்மாழ்வார் போன்ற சைவ வைணவப் பெரியார்கள் சமயக் கோட்பாடுகளைப் பரப்பிப் பிற சமயங்களைக் கடியும் முயற்சியில் ஈடுபட்டார்கள். அவர்களுடைய ஆற்றல்மிக்க பணியால் மன்னர்களும் மக்களும் சமண பௌத்தங்களை விடுத்து மீண்டும் சைவ வைணவம் தழுவலானுர்கள்.

அடுத்த நான்கு நூற்றுண்டுகளிலும் அதனைத் தொடர்ந்து சிறிது காலமும் இந்தப் போராட்டம் இருந்து வந்திருப்பதனைக் காணமுடிகின்றது. மெய்யறிவியல் தளத்திலும் வாழ்வியல் தளத்திலும் சமண பௌத்தங்களைச் சைவம் சந்தித்தது. உரையாடலுக்குப் பதில் வாதங்கள் நிகழ்ந்தன. மாணிக்கவாசகர் பௌத்தரை வாதில் வென்றதும், அப்பர் சமணர்களைக் கழுவேறச் செய்ததும் புராணங்களுள் குறித்து வைக்கப்பட்டுள்ளன. அருணந்தியார், உமாபதி சிவாசாரியார் ஆகியோர் நாட்டில் பரவியிருந்த பல சமயத்தினரை—மாயாவாதிகள், சமண—பௌத்தர்கள் உள்ளிட்ட பல கோட்பாட்டுக் குழுக்களைத்—தங்கள் நூல்களில் குறிப்பிட்டு அவர்கள் கொள்கைகளிலுள்ள தவறுகளை எடுத்துக் காட்டியுள்ளனர். சத் தரிசனங்கள் எனப்பெறும் ஆறு மெய்யியல் கோட்பாடுகள் தமிழகத்தில் அப்போது செல்வாக்குப் பெற்றிருந்தன.

இதே காலத்தில் சித்தர்கள் பணியும் தமிழ் நாட்டில் இடம் பெற்றுவந்தது. வேதாந்த சித்தாந்த வேறுபாடுகளை விதந்தோதியவர்களையும் சாதி சமய ஒழுக்க விதிகளைச் சிறப்பித்து உண்மையான இறையனுபவம் பற்றிக் கவலையற்றுக் கிடந்தவர்களையும் தட்டி எழுப்பிய பெருமை அவர்களைச்சாரும். அவர்கள் பணி அக்காலத்தில் மக்களிடையேயும் கற்றறிந்தோரிடையேயும் எழுந்திருக்கவேண்டிய உரையாடல்களுக்கு தளம் அமைத்தன. ஆயின், அன்பு நெறி நின்று பிறர் சமயக் கருத்துக்களை விளங்கிக்கொள்ள வேண்டும்என்ற உயரிய நோக்கோடு எந்த உரையாடலும் தமிழகத்தில் எழவில்லை. சித்தர்களின் அறிவுரைகளைத் தாங்கிய எளிய இனிய நடைப்பாடல்கள் மக்களிடையே செல்வாக்குப் பெற்றன.

சமயக் கல்வி, சமய ஆய்வு, சமய விளக்கம் ஆகிய துறைகளில் கற்றறிந்த பெரியார்கள் மடங்களில் அமர்ந்து தங்கள் மாண வர்க்குக் கூறிவந்தவையே சிறப்பிடம் பெற்றன. ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் இடையேயும் உரிமைசார்ந்த உரையாடல்கள் சமயத் துறையில் எழவில்லை.

தாயுமானர், வள்ளலார் போன்ற பெரியார்கள் உரையாடல் கள் எழுவதற்கான முறையில் தங்கள் சமயப் பணியை ஆற்ற லானுர்கள். சித்தர்கள் பணி அவர்களிடம் தொடர்ந்தது. இப் பெரியார்களுடைய பணியின் விளைவாக பத்தொன்பது, இருபதாம் நூற்றுண்டுகளில் சைவர்களிடையே சமரசக் கொள்கை (Syncretism) முகிழ்த்துள்ளது.

இந்தியா முழுவதிலும் பெருவாரியான மக்களிடையே சமய சமரசக் கலவை கொள்கை செல்வாக்குப் பெற்றுள்ளது. இராம கிருஷ்ணர், விவேகானந்தர், காந்தியடிகள் போன்ருேர் இக்கொள் கையை மக்களிடையே வளர்த்துள்ளார்கள்.

தமிழகத்தில் சைவர்களைப் பொறுத்தவரையில் சமயக் காழ்ப்புகளும் மதவெறியும் அற்றவர்களாய் சமுதாய வாழ்வினை, வாழ அவர்கள் கற்றுக்கொண்டுள்ளார்கள். இன்றைய இறை சார்பற்ற (Secular) சமுதாய அமைப்பு அத்தகு சூழ்நிலையை உரு வாக்கித் தந்துள்ளது.

சில பல ஆண்டுகட்கு முன்பு ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை கோபால செட்டி, மறைமலையடிகள் போன்ற அறிஞர்கள் சைவத் தின் சிறப்பியல்புகளைக் கிறிஸ்தவத்தோடு ஒப்பிட்டு ஆங்கிலத்தில் கட்டுரைகளும் நூல்களும் எழுதுவதில் ஆர்வம் காட்டினர். இரு சமயத்தவரும் ஒருவரை ஒருவர் பாராட்டிக்கொண்டனர். தங்கள் தங்கள் வட்டாரங்களுக்குள் இருந்துகொண்டே மேன்மட்ட அளவில் பாராட்டிக்கொள்ளும் போக்கு ஏற்பட்டது.

கிறிஸ்தவ மிஷனெரிமாருள் சிலர் சைவத்தை ஊன்றிக் கற்றனர். ஜி. யு. போப், ஷொமேரெஸ், ஹாய்சிங்டன் போன்ருேர் அவர்களுள் குறிப்பிடத்தகுந்தோர் ஆவர். அத்தகையோர் சைவத் தின் சிறப்பியல்புகளை இந்தியக் கிறிஸ்தவர்க்கும் மேனுட்டவர்க் கும் எடுத்துரைப்பதில் ஆர்வம் காட்டினர்.

H. A. பாப்புலி என்னும் மிஷனெரிப் பெரியார் சில சிறு நூல் களை சைவ—கிறிஸ்தவ அன்பர்கட்கென்றே எழுதி இருசாரரும் ஒன்றுகூடி இறைசிந்தனையில் ஆழ்வதற்கான சில வாய்ப்புக்களை ஏற்படுத்தினர். அங்குப் பக்திச் சூழ்நிலை ஏற்பட்டது. ஒருவர்

கருத்தை மற்றவர் பாராட்டும் பெருந்தன்மை காணப்பட்டது. ஆயின் உரையாடல் எழவில்லை. உரையாடலுக்கான சிறந்த தளம் இப்பெரியாரால் அமைக்கப்பட்டது என்பது மிகையாகாது. சமய வாதிகளாய் இல்லாமல் சமய அன்பர்களாய் பிறரை மதிக்கக் கற்றுக்கொள்ளும் நெறியினை அவர் காட்டினார்.

சைவர்கள் தரப்பில் கிறிஸ்தவத்தோடு உரையாடல் எழுவதற்கான தளத்தை இருபதாம் நூற்றாண்டில் நிறுவியவர் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களே ஆவார்கள். வள்ளலாரின் வழித்தோன்றலாக அவர் விளங்கினார். ஆன்மீகத்தையும் வாழ்வியலையும் இணைக்கும் பணியில் அவர் ஈடுபட்டார் காந்தியமும் மார்க்ஸீயமும் இணையவேண்டுமென விரும்பினார். 'பொருளும் அருளும்' என்னும் நூலில் இந்நோக்கினைக் காண்கிறோம். தொழிலாளர்கள் தலைவராகவும், தமிழறிஞர்கள் போற்றிய சிந்தனையாளராகவும், சைவப் பெரியார்களின் பெருமதிப்பைப்பெற்ற சான்றோராகவும் அவர் திகழ்ந்தார்.

வள்ளலாரைப்போன்று சைவத்தின் மேன்மட்ட நிலையைக் கடந்து சென்று அதன் ஆழம் எத்தகையது என்பதனையும் இன்றைய வாழ்வியலோடு அதனை எங்ஙனம் தொடர்புபடுத்திக் கொள்ளவேண்டும் என்பதனையும் அரிய பல சொற்பொழிவுகள் வாயிலாகவும் நூல்கள் மூலமாகவும் அவர் எடுத்துரைத்துள்ளார்.

சைவர்கள் பிற மதத்தினரிடம் பழகுதல் வேண்டும்; அவர்கள் திருமறைகளை கற்றல் வேண்டும்; சமயக் காழ்ப்பு ஏதுமின்றி வாய்மையினைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று அவர் விரும்பினார்.

முருகன் அருள் வேட்டல், சிவன் அருள் வேட்டல், திருமால் அருள் வேட்டல் என்னும் துதிப்பாடல் நூல்களோடு கிறிஸ்துவின் அருள் வேட்டல் என்னும் நூலினையும் அவர் யாத்துள்ளார். சைவனாக நின்று கிறிஸ்துவைத் தூரத்துப் பொருளாக வைத்து அவர் பாக்களை யாக்கவில்லை. கிறிஸ்துவின் அடியார்களுக்குள்ள அதே மனநிலையை வருவித்துக்கொண்டு எவ்வித நடிப்புத்தன்மையும் இன்றித் திறந்த மனதுடன் கிறிஸ்துவுக்கும் தமக்கும் இடையே உள்ள தொடர்புகளை அவர் விளக்குகின்றார்.

'கிறிஸ்து கிறிஸ்து என்போமே
கிட்டிய பாவம் பின் போமே'
'ஆணியில் சிந்திய செந்நீரே
அகிலம் புரக்கும் நன்னீரே'
'என்னுள்ளே நீ பிறந்தாய் கிறிஸ்துபெருமானே
உன்னுள்ளே யானிறந்தேன் உற்று'
'மரித்தும் எழுந்த சத்தியமே
மரணமின்மையின் தத்துவமே'

சமயச்சார்பற்ற வாழ்வியலில் இறை இயக்கத்தையும் மறைந்து செயலாற்றும் கிறிஸ்துவையும் காண்கின்றவர்கள் சமரசப் பொதுமைக் கொள்கை படைத்தோரிடத்து இறை இயக்கத்தையும், கிறிஸ்துவின் உந்துதல்களையும் காணாமல் ஒதுங்க முடியாது.

இன்றையச் சமுதாய அமைப்பில் சைவர்களோடும் பிற சமயத்தவரோடும் இந்நாட்டில் கிறிஸ்தவர்கள் உரையாடல்களில் ஈடுபடுவதற்கு இறைவன் அமைத்துத் தந்துள்ள தளமாகவே சமரசப் பொதுமைக் கொள்கை கருதப் பெறுதல்வேண்டும்.

எல்லாருக்கும் எல்லாமுமாகிற கடமை படைத்தவர்கள் கிறிஸ்தவத் திருத்தொண்டர்கள். பவுலடியாரின் அடியொற்றி இன்றைய உலகில் சமரசக் கொள்கையினருக்குச் சமரசக் கொள்கையினரைப் போலவே ஆகி உரையாடல்களில் ஈடுபடவேண்டிய இன்றியமையாமை அவர்களுக்கு ஏற்பட்டிருப்பதாகவே கொள்ளவேண்டியுள்ளது.

பல கிறிஸ்தவர்கள் இதனை ஏற்கத் தயங்குவர்; கிறிஸ்தவத்தின் தனித் தன்மைக்கு இழப்பும் இழுக்கும் நேர்வதாகக் கருதுவர். ஆயின், திறந்த மனமற்ற தொண்டர்களைக் கிறிஸ்து விரும்புகின்றாரா என்னும் பெருங்கேள்விக்கும் நாம் பதில் கூறியாகவேண்டும்.

கிறிஸ்து உலகமனைத்திற்கும் உரியவராக இருப்பதால், அவர் உலக மக்கள் அனைவர்க்கும் ஆண்டவர் என்பது உண்மை. ஆதலால் மக்கள் அவரைப்பற்றிய தங்கள் கருத்துக்களைக் கூறிக்கொண்டேதான் இருப்பார்கள். அவருடைய அறைகூவலுக்கு அவர்கள் பதிலளி[illegible] விடமிருந்து சமரசப்

சமரசப் பொதுமைக் கொள்கையை விளங்கிக்கொண்டு அதனைப் பிற சமயத்தார் ஏற்கும் நிலையில் நின்று நோக்குதல் அவசியமாகும். உரையாடலில் எந்த அளவுக்கு அந்த அனுபவத்தைப் பெற்று அடுத்த சாராரின் கூற்றைக் கேட்கிறோமோ அந்த அளவுக்கு இறையருளின் திறத்தை — அது இயங்கும் விதத்தை நாம் உணர முடியும்.

சமரசப் பொதுமைக் கொள்கை கிறிஸ்தவர்களின் திரித்துவக் கொள்கையில் இருப்பதனை ஒரு சைவர் எடுத்துக்காட்டினார். அவர் கருத்து தவறானது எனப் பலர் விவாதிக்கலாம். ஆயின், மூவரில் ஒருவரை, மூவர் இயக்கத்தை, மூவரின் ஓரே சீரான, ஓரே அளவில் மெய்ம்மையுடைய திறத்தைக் காண்போர், சமரசக் கொள்கையினர் சமயங்களுக்கிடையே அதனைக் காண முற்படுதலைப் ஓரளவுக்கு விளங்கிக் கொள்ளமுடியும்.

சமரசப் பொதுமைக் கொள்கை உரையாடலுக்கு நுழைவாயிலாக, உறவுக்குப் படியாக, கருவியாக இருக்கின்றதேயன்றி அது எதிர்கால நம்பிக்கையோ அகில உலக மதமோ அன்று என்ற மனத்தெளிவு கிறிஸ்தவ நற்செய்தித் தொண்டர்க்கு வேண்டுவதொன்றாகும். உரையாடலில் நம்மோடு ஈடுபடும் கிறிஸ்துவே உரையாடலின் நோக்கத்தின் செம்பொருளாகவும் உள்ளார் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை.

வாழ்வியல் அளவில் நடைபெறும் உரையாடல்கள் மட்டுமின்றி ஆழ்ந்து செல்லும் [illegible] ஈடுபடும்